
கல்கி

KALKI
1.12.85
ரூ 1.50



கிருஷ்ணகான சபை யக்ஞராமன்:

"கர்நாடக இசையே இளைஞர்களைக் கவர்கிறது! லைட் மியூசிக் மதிப்பிழந்து விட்டது!"



சலவை தோறும் பொலிவு...சலவைக்கு சலவை...பவர் பேக்டு ஸர்ஃப் புத்தாடைபோல் வெண்மை பொலிய வெளுக்கிறது !


வெளுக்கும் ஒவ்வொரு சட்டைக்கும், ஒவ்வோர் ஆடைக்கும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு-அளிக்குது பவர் பேக்டு ஸர்ஃப். அன்றன்றே வாங்கி அணிவது போல் என்றென்றும்...கோடித் துணிபோல் கோலப் புதுமை.

இதுவரை இல்லாத ஏற்றமான சக்தி செறிந்து வருகுது பவர் பேக்டு ஸர்ஃப்... பேராற்றல் மிகுந்தது. பேணிக் காப்பதில் உயர்ந்தது. ஆழ ஊடுருவித் துப்புரவாக்கும் சக்திபடைத்தது: அடைந்திராத அமோகமான நுரைவளம் மிகுந்தது.

விடாத அழுக்கையும் விரட்டியடிக்கும், வெண்மையினை வாழ்விக்கும், காலமெல்லாம் துணிப் புதுமை காக்கும்.

வெண்ணிறமோ, வர்ணமோ...விசேஷத் துணிகள், அன்றாடத் துணிகள் எல்லாமே ஒளிமினிரும் ஒப்பற்ற வெள்ளைவெளேர்... ஸர்ஃப் சலவையிலே...நித்தமும் நிலைபெறுமே புத்தாடைக் களையுடனே.

சலவைப் பவுடர்கள் பலநூறு இருக்கலாம், ஆனால் உங்கள் குடும்பத் துணிகளுக்கு நம்பிக்கையானது ஸர்ஃப் ஒன்றுதான்... ஸர்ஃப் அன்றி வேறில்லை.



ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோர்!

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS SU 323 2517 TM



யார் இந்தப் பெண்?

வெள்ளப் பகுதிகளை பார்ப்பதற்காக நவம்பர் 15ம்தேதி பிரதமர் சென்னைக்கு வந்திருந்தார் அல்லவா! மறுநாள் இரண்டு பிரபல ஆங்கிலத்தினசரிகளிலும், பலதமிழ்ப் பத்திரிகைகளிலும், 'கவர்னரும், முதல்வரும் பிரதமரை வரவேற்கிறார்கள்' என்ற தலைப்பில் ஒரு படம் வெளிவந்தது. அந்தப் படத்தில் எம்.ஜி.ஆர். நடுவில் நிற்க, ஒரு பெண்மணி ராஜீவிடம் கைகுலுக்கிக் கொண்டிருப்பது போல இருப்பதைப் பார்த்ததும், பல பத்திரிகை நிருபர்களுக்கு ஆச்சர்யம். யார் இந்தப் பெண்மணி?

மாநில செய்தித்துறை அதிகாரிகள் ''அவங்க காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவங்க; ஆனா பெயர் தெரியலே'' என்றார்கள். மத்திய அரசு வட்டாரத்திலோ, ''அது ஒரு நடிகை ஸார்! இப்பத்தான் காங்கிரஸ் கட்சியில் நடிகைகள், நடிகர்கள் அதிகமாக இருக்கிறார்களே'' என்றார்கள். 'பத்திரிகை'யாளர்களுக்கும் விளங்கவில்லை. இதற்கு இடையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் அந்தப் படத்தை மீண்டும் வெளியிட்டு ''முகம் தெரியாதவர்கள் கூட பிரதமரின் அருகில் போய் நின்று கை குலுக்கிக்கொள்ளும்போது பத்திரிகையாளர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களை ஓரங் கட்டுவது ஏன்?'' என்று செய்தி வெளியிட்டிருந்தது.

இது பற்றிக் காங்கிரஸ் வட்டாரத்தில் விசாரித்ததில், ஒரு பிரமுகர் சொன்னார். ''இதுதான் ஸார் இந்தக் கட்சியின் தலையெழுத்து. எம்.எல்.ஏ., எம்.பி.க்களுக்கு ஒரே ஒரு பாஸ்தான் கொடுத்தார்கள். எங்க கட்சிக்கு மொத்தம் பத்து பாஸ்கள் தரப்பட்டன. நானும் சென்றிருந்தேன். பத்திரிகைகளில் வெளிவந்திருந்த அந்தப் பெண், எங்க கட்சி எம்.எல்.ஏ. யசோதாவுடன் வந்தது போல் தெரிகிறது. அதுவும் கடைசியாக வந்தது இவர்கள்தான். வரிசையில் கடைசியாக இருந்ததாலும், அந்த இடத்தில் ராஜீவ் கழுத்திலிருந்து மாலைகளைக் கழற்றிக் கொள்ள நின்றதாலும், அங்கிருந்த இந்தப் பெண்மணிக்கு நல்ல சான்ஸ்!

யசோதாவிடம் விசாரித்த போது விஷயம் வெளியானது. அந்தப் பெண்ணின் பெயர் சரோஜாவாம். மாநகராட்சியில் பணி புரிந்தவராம். ''பல வருடங்களாக நாங்க பிரெண்ட்ஸ். ராஜீவை எப்படியாவது பார்த்தாகணும்!' என்று அவர் சொல்லவே நான்தான் அழைத்துக் கொண்டு சென்று பிரதமரிடம் அறிமுகப்படுத்தினேன். அந்த அம்மா, கட்சியிலே இல்லே. இந்திரா காந்தி இறந்த போது ரொம்ப அப்செட் ஆகிப் போனாங்க. இப்ப நம்பிக்கை நட்சத்திரமா இருக்கிற ராஜீவைச் சந்திக்க ரொம்ப நாளா காத்துக் கிட்டிருந்தாங்க. அவுங்க ஆசை அன்றைக்குத்தான் நிறைவேறிச்சு'' என்றார் யசோதா.

சரோஜா தீவிர சாயி பக்தை. விளம்பரத்தில் கொஞ்சம்கூட விருப்பம் இல்லாதவராம். மறுநாள் பத்திரிகைகளில் படத்தைப் பார்த்துத்தான் அவரே லேசான (சந்தோஷ) அதிர்ச்சி அடைந்திருக்கிறார்.

பிரதமரிடம் கைகுலுக்கியது சரோஜாவுக்குச் சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் போலீஸ் மற்றும் உளவுத் துறை அதிகாரிகள் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். VVIP க்கள் மட்டும் அனுமதிக்கப்படும் பாதுகாப்பு வளையத்திற்குள் எப்படி இவர் நுழைந்தார்? யசோதா கூட்டிக் கொண்டு வந்தாரென்றால், எம்.எல்.ஏ.வுக்கு ஒரு பாஸ்தானே? அதை வைத்துக் கொண்டு அவர் எப்படி இன்னொரு நபரையும் கூட்டிக் கொண்டு வர முடியும். பிரதமரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில், விதிகளைத் தளர்த்தி, வேண்டியவர்களை பிரதமரைச் சந்திக்க அனுப்பி வைத்த நபர் யார்? விசாரணைகள் நடக்கின்றன. பூந்தமல்லி எம்.எல்.ஏ. அனந்த கிருஷ்ணன் (அவரும் காங்கிரஸ்தான்) எவ்வளவோ கெஞ்சியும் அவர் மனைவியை உள்ளே விடவில்லையாம். அவ்வளவு கடுமையாக இருந்த பாதுகாப்பு அதிகாரிகள், யசோதா விஷயத்தில் கோட்டை விட்டதேன்? பேப்பர் கட்டிங்குகள் பிரதமரின் அலுவலகத்திற்கு சென்றிருக்கின்றனவாம்.

— நமது நிருபர்.

நன்றி: புகைப்படம் ஹிந்து

"எங்கள் குரலைக்



* விவேகானந்தர் நினைவாலயத்திற்குச் சென்று திரும்பும் பயணிகள்.

கேட்க நாதியில்லை!"

—கண்ணீர் விடும் கன்னியாகுமரி மக்கள்

"கன்னியாகுமரி... கன்னியாகுமரி..." என்று கண்டக்டர் குரல் கொடுத்ததும், பஸ்ஸிலிருந்த அனைவரும் தங்கள் தங்கள் லக்கேஜுகளை எடுத்துக் கொண்டு இறங்கினர். நாங்களும் இறங்கினோம்.

'இதுதான் கன்னியாகுமரி பஸ் நிலையமா...?' என்று ஆச்சரியப்பட்டோம். அது ஒரு பஸ் நிலையம் என்று சொல்வதற்குரிய அங்க லட்சணங்களையே காண முடியவில்லை. அது ஒரு திறந்த, குறுகிய இடம். பேருந்துகள் நிறுத்தியிருந்த இடைவெளிகளில் கொஞ்சம் பயணிகளும், ஏராளமான பசு மாடுகளும் நின்றிருந்தன!

நாங்கள் வந்த பஸ்ஸிலிருந்து இறங்கிய இரண்டு வெளிநாட்டுப் பயணிகளை, போர்ட்டர்கள் மொய்க்கத் தொடங்கினர்.

நம்மூர் போர்ட்டர்களைப் பற்றி அந்த வெளிநாட்டுப் பயணிகளுக்கு நன்றாகத் தெரியும் போலிருக்கிறது. தாங்கள் கொண்டு வந்த லக்கேஜுகளை, தங்கள் முதுகிலேயே சுமந்து கொண்டு, டூரிஸ்ட் ஆபீஸை நோக்கிச் சென்றனர். சுமைக் கூலி என்ற பெயரில் கொள்ளையடிக்க முடியவில்லையே என்று வருந்திய போர்ட்டர்கள், வேறு ஏமாளிப் பயணிகள் யாராவது நிற்கின்றனரா என்று மோப்பம் பிடிக்கத் தொடங்கினர்.

பஸ் நிலையத்தையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எங்களை, ஓர் இளைஞர் நெருங்கி, "எந்தா... ஸாரே...! முறி (அறை) வேணுமா...? 'சகல' சௌகரியங்களும் கிட்டும்...!" என்று மலையாளத்தில் சோதிச்சு.

தினசரி கன்னியாகுமரி வரும் பயணிகளை, இங்குள்ளவர்கள் முக ஜாடையை வைத்தே, இவன் தமிழன், இவன் மலையாளி, இவன் பஞ்சாபி, இவன் குஜராத்தி, இவன் கர்நாடகம், இவன் ஆந்திரா, இவன் அமெரிக்கா — என்று அடையாளம் கண்டு கொண்டு, அந்தந்த மொழிகளில் அவர்களிடம் நெருங்குகின்றனர். நாங்கள் அசப்பில் மலையாளி மாதிரி இருப்பதால் எங்களிடம் மலையாளத்தில் கேட்டான், அந்த இளைஞன்.

"அட வேணாப்பா...!" என்று சுத்தத்(!) தமிழில் நாங்கள் பதிலளித்தும், எங்களை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, நகர்ந்தான் அவன்.

இப்படி பஸ்ஸிலிருந்து பயணிகள் வந்து இறங்கியதும் தங்குவதற்கு ரூம் வேண்டுமா என்று கேட்பதன் ரகசியத்தைப் பிறகு விசாரித்ததில் அறிந்து கொண்டோம்.

அதாவது, இவர்களுக்கு லாட்ஜ் நிர்வாகம் முப்பது சதவிகிதம் கமிஷன் கொடுக்கிறதாம். நூறு ரூபாய் வாடகைக்கு (ஒரு நாள் வாடகைதான்!) அறையைப் பிடித்துக் கொடுக்கும் இந்த மாதிரி ஏஜெண்டுகளுக்குச் சுளையாக முப்பது ரூபாய் கிடைத்து



* ஆதி சங்கரர் அமைத்திருந்த மண்டபமான இது... வெளி. பிராணிகளின் கழிப்பிடமாக மாறிவிட்டது!

விடும்!

இவ்வாறில்லாமல், பயணிகள் தாங்களாகவே ஏதாவது ஒரு லாட்ஜுக்குச் செல்லும் போது, இந்த ஏஜெண்டுகளும் அவர்களுக்குப் பின்னால் சென்று, தாங்கள்தான் பார்ட்டியை இங்கே அனுப்பி வைத்ததாகச் சொல்லி... தங்கள் கமிஷன்களைத் தட்டிக் கொள்கின்றனர்.

கன்னியாகுமரியில், தடுக்கி விழுந்தால், லாட்ஜுகள்தான். ரூம் வாடகையைக் கேட்டால், மயக்கம் வராத குறைதான். ரூம்களை வைத்துக் கொண்டே இல்லை என்று சொல்லி... கிராக்கியை அதிகரிக்கச் செய்கின்றனர். ரூம் வாடகை, ஒரு குறிப்பிட்ட நிர்ணயமில்லை. ஆள் கண்டபடியெல்லாம், வசூலிக்கின்றனர்.

நாங்கள் என்ன கன்னியாகுமரியில் ரூம் எடுத்துத் தங்கவா வந்தோம்...?

முதலில், விவேகானந்தர் நினைவாலயத்திற்குச் செல்வோமா?

சமீபத்தில், புறம் போக்கு இடங்களையும், நடை பாதைகளையும் ஆக்கிரமித்திருந்த கடைகளை, அரசு அகற்றியதால்... சாலையில் நிறைய இடம் உள்ளது. நெருக்கடியின்றிப் பயணிகள் நடந்து செல்லச் சௌகரியமாக இருக்கின்றது!

கட்டணம் செலுத்திவிட்டு, படகில் நினைவாலயத்திற்குக் கடலில் பயணமானோம். கடலிலுள்ள பாறையின் மீது அமைந்துள்ள விவேகானந்தர் நினைவாலயம், காண்போர் மனத்தைக் கொள்ளை கொள்கின்றது! அமைதி சூழ்ந்த அவ்வாலயத்தின் உள்ளே நுழைந்த நமக்கு, எங்கோ தெய்வீக மயமான ஓர் இடத்திற்குள் நுழைந்தது போன்றதொரு இனம் புரியாத நிம்மதி மனத்திற்குக் கிடைக்கின்றது. பரந்து கிடக்கும் முக்கடலின் சங்கமத்தைக்கண்குளிரக்கண்டு களிக்கலாம். மிதமாக வீசும் கடற்கரைக் காற்று, மனத்துக்கு இதமாக இருக்கின்றது!


அமைதியாக . உட்கார்ந்து, ஆழமாகச் சிந்திப்பதற்கு, ஓர் அருமையான இடம்! ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் ஒரு முறையேனும் வந்து பார்த்து, அதிசயிக்க



* இதுதான் கன்னியாகுமரி பஸ் நிலையம்!




* சிற்றுண்டி சாலை மூடிக் கிடக்கிறது.



* விளக்கில்லாத வெறும் கம்பங்களும், உடைந்த நிலையிலிருக்கும் பாரத மாதா சிலையும்!



* காந்தி மண்டபத்திற்கு எதிரிலுள்ள பூங்காவின் லட்சணம்!



* உடைந்த தண்ணீர்க் குழாய்கள்!

வேண்டிய ஆலயமாக விவேகானந்தர் நினைவாலயம் திகழ்கின்றது. விவேகானந்தர் நினைவாலயத்தை நன்கு பராமரித்து வைத்திருக்கின்றனர்; மனமார வாழ்த்தினோம்.

அடுத்து, கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபத்திற்குச் சென்றோம்.

காந்தி மண்டபம், சற்றுத் தாழ்வான இடத்தில், கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது. காந்தி மண்டபத்திற்குப்போகும்வழியில், சாக்கடை நீர் தேங்கி... கொசுக்கள் கூட்டம் கூட்டமாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கின்றன.

அஹிம்சையைப் போதித்த அந்த மகாத்மாவின் நினைவு மண்டபத்திற்குச் செல்லும் வழியிலுள்ள சாக்கடையில் வாழும் கொசுக்களை ஹிம்சை செய்வதற்கு மனமில்லாமல், அப்படியே விட்டு விட்டார்கள் ... போலும்!

காந்தி மண்டபத்தின் உட்பக்கச் சுவர்கள் உருக்குலைந்து காணப்படுகின்றன. மழைநீர், மண்டபத்தினுள் நுழைந்த அடையாளங்கள், ஆங்காங்கே காணப்பட்டன. மண்டபத்தின் உள், வெளிச் சுவர்கள், பெயிண்டைக் கண்டு பல வருடங்கள் ஆகியிருக்கும்! மண்டபத்தைச் சுற்றியுள்ள இடங்கள் அசிங்கமாகக் காணப்படுகின்றன. ஓர் இடத்திலுள்ள மதில் உடைந்து விட்டதால், அந்த இடத்தைச் சில முள் கம்பிகளைக் கொண்டு அடைத்து வைத்திருக்கின்றனர்.

மண்டபத்தின் ஸ்தூபிகளின் மேல் விளக்குகளுக்குப் பதில் வெறும் கம்பிகளே நிற்கின்றன. அங்கிருந்து, ஆதிசங்கரர் ஆலயம் இருக்கும் திறந்த வெளிக்கு வந்தோம்.

அந்தப் பரந்த வெளியில் கால் வைக்க முடியவில்லை. அவ்வளவு அசிங்கங்கள்! மாடுகள், பன்றிகள், கழுதைகள், நாய்களின் திறந்தவெளிக் கழிப்பிடமாக அது காட்சியளித்தது! அப்பகுதியைச் சுத்தமாக்கி, கடற்கரைப்பூ மணலைக் கொட்டி வைத்திருந்தால்... பயணிகள் எவ்வளவு ஆனந்தமாகப் பொழுது போக்குவார்கள்... என்ற ஏக்கப் பெருமூச்சு எங்களுக்குள்ளே எழுந்தது.

காந்தி மண்டபத்திற்கு எதிரே அமைந்துள்ள பூங்காவின் அழகை(!) வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஒரு காலத்தில், இது சிறுவர் பூங்காவாம்! இன்று, சீரழிந்த பூங்காவாகக் காட்சியளிக்கின்றது.

காந்தி மண்டபத்திற்கு வலது பக்கமுள்ள பாரத மாதா சிலை கூடச் சரியாகப் பராமரிக்கப்படாமல், கீழே விழும் நிலையிலுள்ளது. பக்கத்தில், சிறுவர் — சிறுமியர் சறுக்கி விளையாடும் சறுக்கு, உடைந்து கிடக்கின்றது. விளக்கில்லாத வெறும் கம்பங்கள், தங்கள் சோகக் கதையைச் சொல்லாமல் சொல்லி யழுகின்றன! அதை அடுத்துப் பெருந் தலைவர், 'பாரத ரத்னா' அமரர் காமராஜின் அஸ்திக் கலசம்வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. ஆனால், அதைச் சுற்றிப் போடப்பட்டுள்ள இரும்புச் சங்கிலி வேலி, உடைந்து காணப்படுகின்றது!

கரையை வந்து மோதும் அலைகடலின் அழகை ரசித்த வண்ணமிருந்த போது, 'நீருக்குமேல் பாலம்தான் அமைப்பார்கள் இது என்ன தண்ணீர்த் தொட்டி கட்டுகிறார்கள்...?' என்று ஆச்சரியப்பட்டு, அதைநெருங்கினோம். அருகில் சென்றதும், அதில், 'சிற்றுண்டி மனை' என்று எழுதப்பட்டிருந்த வாசகங்கள் அழிந்து போன நிலையில் இலேசாகத் தெரிந்தன. பக்கத்தில் ஒரு குளம் காணப்பட்டது. இன்னும் கொஞ்சம் திரும்பிப் பார்த்தால், 'தமிழ் நாடு டூரிஸ்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' நடத்திய 'சிற்றுண்டி மனையும்,' 'நீச்சல் குளமும்' என்ற விவரத்தை ஒரு போர்ட் பறை சாற்றியது!

சங்கு, சிப்பி ஆகியவற்றை மாலையாகக் கோத்து விற்கும் ஒரு வயதானவரிடம் விவரம் கேட்டோம். அதற்கு அவர், "இதுவா... ஸார்...? இது ஒரு காலத்தில் சிற்றுண்டி மனையாக இருந்தது. இதைச் சுற்றிலும் கண்ணாடி அமைத்திருந்தார்கள். ஜோடியாக உள்ளே சென்று, கடலின் அழகை ரசித்தவாறே காப்பி சாப்பிடலாம். ஆனா... காப்பி, விலை அதிகம், சாமானியப்பட்டவன் போக முடியாது. மக்கள் ஆதரவு கிட்டாததால் நஷ்டப்பட்டு, கடைசியில் இதைப் பராமரிக்காமல் அப்படியே விட்டுவிட்டார்கள். இந்த சிற்றுண்டி மனையை உருவாக்கச் செலவிடப்பட்ட பதினைந்து லட்ச ரூபாயும் கடலில் காயம் கரைச்ச மாதிரி எங்க போச்சுன்னே தெரியாது! இன்னைக்கு இந்த 'எலும்புக் கூடு,' மட்டும்தான் மிச்சம்." என்று அவர் வேதனையோடு குறிப்பிட்டார். நீச்சல் குளம் பச்சையாகப் பாசி படர்ந்து தவளைகளுக்கு வாழ்விடமாகத் திகழ்கிறது!

அடுத்து, பக்தர்கள் கடலில் நீராடும் சங்கிலித் துறைக்கு வந்தோம். பேர்தான் சங்கிலித் துறையே தவிர, சங்கிலியைக் காணவில்லை. குடும்பத்ினர், ஒருவர் கையை மற்றவர் பிடித்துக் கொண்டு, பயந்து பயந்து கடலில் மூழ்கி எழுந்தனர்.

காணுமிடமெல்லாம் கடற்சிப்பிகள், கடற்சங்குகள் — ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்ட அழகிய கலைப் பொருட்கள் கடைகளில் நிறைந்து காணப்படுகின்றன. கிட்ட நெருங்கி, விலை விசாரித்தால்... முதலில் மூன்று மடங்கு சொல்கிறார்கள்.

'வேண்டாம்...!' என்று நாம் நழுவும் போது, சொன்ன விலையில் சரிபாதியாகக் கேட்கிறார்கள். இன்னும் நாம் கொஞ்சம் பிகு பண்ணினால், அதன் உண்மையான

விலைக்கு வருகிறார்கள். ஓர் இடத்தில், சர்வ சாதாரணமாக, 'வலம்புரிச் சங்கு இங்கே கிடைக்கும்!' என்று எழுதி வைத்திருக்கிறார்கள்!

ஒரு பத்து வயதுச் சிறுவன், கையில் கறுப்பு சிவப்பு, மஞ்சள் — போன்ற வண்ண மணலை பிளாஸ்டிக் பாக்கெட்டில் அடைத்து, 'மணல் ஸார்...' மணல்...' என்று கூவி விற்கிறான்.

இன்னும் சிலர், உள்நாட்டு குளிர் கண்ணாடி, காமிரா, துணிரகங்கள், பேனா, செயின், — போன்றவைகளை வெளிநாட்டுச் சாதனங்கள் என்று சொல்லி... நம்மை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

ஒரு வாலிபன், தன் கைக்குள்ளே இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களையும் அடக்கிக் கொண்டு, அம்மாநிலங்களை ஒரு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கும் விலை பேசிக் கொண்டிருந்தான்.

தமிழ்நாடு அரசு, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகக் கட்டத் தொடங்கிய 'ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்,' அஸ்திவாரத்தோடு நிற்கும் பரிதாபக் காட்சியையும் பார்த்துத் தொலைக்க வேண்டியதாயிற்று!

கன்னியாகுமரி மக்களுடைய பிரச்னைகளை, குறைகளை அறிந்து கொள்ள, 27 வருஷங்களாக இங்கு வாழும் சிலை அலங்காரக் கலைஞர் கதிர்வேல் என்பவரை அணுகினோம்.

"இங்க போதுமான மின்சார வசதியில்லீங்க; ஒரு பஸ் நிலையம் கிடையாது; அரசு மருத்துவமனையில்லே; பொது மார்க்கெட் கிடையாது. இந்த மாதிரியான டூரிஸ்டு சென்டரை நீங்க வேறே எங்கேயும் பார்க்க முடியாதுங்க...! இன்னொரு பெரும் பிரச்னை...! தண்ணீர்! பைப்பில ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேல தண்ணீர் விடுறாங்க. அதுக்காக, ராத்திரி முழுக்கத் தூங்காம முழிச்சிருந்து தண்ணீர் பிடிக்கணும். ராத்திரியானா... வயசு வந்த பொண்ணுங்க தண்ணீர்ப் பிடிக்கக் குடத்தோட போறதைப் பாக்க வாங்க. குளிக்கப் போகணும்னா... ஒன்னரை மைல் நடந்து... போய்க் குளிக்க வேண்டியதாயிருக்கு. பக்கத்தில, தேவசம் போர்டு தெப்பக் குளம் கிடக்கு. அதைச் சுத்தப்படுத்தினாலாவது... எங்களுக்குப் போதுமானதாக இருக்குங்க...!" என்றார்.

அங்கிருந்து, புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் வந்தோம். அப்பள்ளியைத் தொட்டிருக்கிற குடிநீர்க் குழாயில் ஏராளமான பெண்களும், ஆண்களும், சிறுவர் சிறுமிகளும் கூடி நின்றனர். அவர்களிடம் விசாரித்ததில் தண்ணீர்ப் பிரச்னையால் தவிக்கும் கன்னியாகுமரி மக்களுக்கு, 'இல்லை' என்று சொல்லாமல் தொடர்ந்து தண்ணீர் வழங்கும் ஒரே அடி பம்பு நீர் குழாய் அதுதானாம்!

சுமார் இருபதினாயிரத்திற்குமேல் மக்கள் வாழும் கன்னியாகுமரியில் எழுபத்தைந்து சதவிகிதம் கிறிஸ்தவர்கள்தான். அவர்களிலும், கிறிஸ்தவ மீனவர்கள்தான் மிக அதிகம். மீனவர்கள் அதிகம் வாழுகின்ற கடற்கரைப் பகுதியில், தண்ணீர் பிரச்னையை எப்படிச் சமாளிக்கிறார்கள் என்பதை நேரில் கண்டறிய, கடற்கரைப் பகுதிக்குச் சென்றோம்.

அப்பகுதியை நெருங்க, நெருங்க, இங்கே ஏண்டா வந்தோம் என்றாகிற்று! அவ்வளவு மோசமாக இருக்கின்றது. சரியான கழிப்பிட வசதிகள் இல்லாததால்... ஒரு திறந்த வெளியே, மக்களின் பொதுக் கழிப்பிடமாக மாறிக் கொண்டிருந்தது. உருண்டு உருண்டு செல்லும் பன்றிகள்... மோப்பம் பிடித்து அலையும் நாய்கள்... வீடுகளுக்கு முன்பு செல்லும் சாக்கடைகள்... அதில் கால்களை நனைத்து விளையாடும் சிறுவர் சிறுமியர்கள்... அப்பப்பா... எப்படித்தான் இந்த மக்கள் இத்தகைய சுகாதாரக் கேடு நிறைந்த இடத்தில் உயிர் வாழ்கிறார்களோ...?

மீனவப்பகுதியிலுள்ள தண்ணீர்ப்பிரச்னை பற்றி, அங்கே வாழும் திருமதி ரிபோலின் ஜோசப் என்ற பெண்மணியைச் சந்தித்துக் கேட்டோம். இவர், கன்னியாகுமரி மகளிர் மன்றச் செயலாளர்.

"இங்கே தண்ணீர் இரண்டு வகையாக வருகின்றது. ஒண்ணு, முக்கூடல் தண்ணீர். இது குடிக்கலாம். இன்னொண்ணு, கல்விளை தண்ணீர். இது குடிக்க முடியாது; மற்ற தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். குடிக்கக் கூடிய தண்ணீர், நாலு நாளைக்கு ஒரு தடவைதான் வரும். அப்ப... ஒரு வீட்டுக்கு ஒரு கொடம் இல்லேன்னா ரெண்டு கொடம் கிடைக்கும். அவ்வளவுதான். அதை வெச்சுத்தான் நாலு நாளைக் கழிக்கணும்!

"எங்க, மகளிர் மன்றத்தின் சார்பில், டவுன்ஷிப் ஆபீஸில கேட்டோம். அதற்கு, அங்குள்ள அதிகாரி, 'கன்னியாகுமரி நகரியத்தை நாலு பிரிவாகப் பிரிச்சிருக்கிறோம். ஒரு பிரிவுக்கு ஒருநாள் (ஒரு மணி நேரம்) தண்ணீர் விடுவோம். அதனால உங்களுக்கு நாலு நாளைக்கு ஒரு தடவைதான் தண்ணீர் கிடைக்கும். புதிதாக, ஆஸ்பத்திரி பக்கத்தில, நீர்த் தேக்கம் ஒன்று கட்டிக் கொண்டு வருகிறோம். இன்னும் ஒரு மாதத்தில் உங்கள் தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்த்து வைக்கிறோம்!' என்றார். அவ்வளவுதான். அவர் சொல்லி



கதிர்வேல்.

* கன்னியாகுமரி மக்களுக்குத் தொடர்ந்து தண்ணீர் வழங்கும் ஒரே நிலத்தடிக் குடிநீர்க் குழாய்!

ஒரு மாதமில்ல... ஒன்பது மாசம் கழிஞ்சாச்சு. தண்ணீர் பிரச்னை தீர்ந்த பாடில்லே!

''ஒரு தடவை, கன்னியாகுமரியிலுள்ள பெண்கள் எல்லோரும் கூடி... டவுன் ஆபீஸ் முன்னால கோஷம் போட்டபோது, அதிகாரிகள் ஒளிந்து கொண்டார்கள். நாகர்கோவில் நகராட்சி அலுவலகத்திற்குமுன் உண்ணாவிரதம்கூட இருந்துபார்த்துவிட்டோம்! இதுவரை ஒரு பயனுமில்லே. எங்க குரலைக் கேட்க நாதியில்லீங்க. அடுத்த தடவை, இவங்க ஓட்டு கேட்க வரட்டும்...!

''நீங்க வர்ற வழியில கவனிச்சிருப்பீங்க. இங்குள்ள லாட்ஜுகளில் எல்லாம் இருபத்திநாலு மணி நேரமும் தண்ணீர் கிடைக்கும்னு போர்டு மாட்டியிருப்பாங்க. இவங்களுக்கு மட்டும் எப்படி இருபத்திநாலு மணி நேரமும் சப்ளை இருக்கு...? இதுபற்றிக் கூட அதிகாரிங்ககிட்டே கேட்டோம். அதுக்கு அவங்க, 'உங்க வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தா, நீங்க சாப்பிடாம கூட இருந்து, வந்தவங்களை உபசரிக்க மாட்டீங்க...? அதுபோல, நம்ம இடத்துக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள், நம்மூர்த் தண்ணீர்த் தட்டுப்பாட்டை அறிந்து கொள்ள வேண்டாமேன்னுதான். லாட்ஜுகளுக்கு இருபத்தி நாலு மணி நேரமும் சப்ளை செய்கிறோம்!' என்றார்.

''இதையெல்லாம் கேட்டு எங்களுக்கு அழுவதா, சிரிப்பதான்னு தெரியலீங்க. ஏதோ... உயிர் வாழ்ந்துகிட்டிருக்கிறோம்'' என்று குரல் தழுதழுக்கச் சொல்லி முடித்தார், அப்பெண்மணி. அவரை ஒரு படம் எடுக்க முயற்சி செய்த போது, மறுத்துவிட்டார்.

எங்களுக்கு என்ன ஆறுதல் சொல்வதென்று கூடத் தெரியாமல், ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறு, எழுந்து, வெளியேறினோம்.

கன்னியாகுமரி மக்கள் படும் அவதியைக் காணச் சகிக்காமல்தானோ என்னவோ, சூரியன் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும் முயற்சியில் இறங்கிக் கொண்டிருந்தான்! ஆம், எங்களுக்கு அந்தக் காட்சி அப்பகுதி மக்களின் துன்பங்களை உணர்ந்திருந்ததால் அப்படித்தான் தோன்றியது!

கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதித் தேர்தலில், 1977, 1980, 1984 — ஆகிய மூன்று தேர்தல்களிலும் ஆளுங்கட்சியான அ. இ. அ. தி. மு. க. எம். எல். ஏக்களே வெற்றி பெற்றுச் சட்டமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இப்படி, ஆளுங்கட்சி எம். எல். ஏக்களே சட்டமன்றத்திற்குச் சென்ற பிறகும், கன்னியாகுமரியை இப்படிக் கவனிக்காமல் விட்டிருக்கிறார்களே என்ற ஆதங்கத்தோடு, இருள் சூழ்ந்து வந்த அந்த நேரத்தில் கன்னியாகுமரியம்மன் கோவிலுக்கு வந்து சேர்ந்தோம். கோவிலைச் சுற்றியுள்ள நீண்ட நெடுஞ்சுவர்களின் மறுபக்கம் இருளடைந்து காணப்படுகிறது. ஒரு பக்கத்தில் சாக்கடை ஓடுகின்றது. கோவிலைச் சுற்றியுள்ள இடங்களில் போதுமான வெளிச்சமில்லே! கோவிலையாவது நல்ல ஒளியோடு வைத்திருக்கக் கூடாதா...?

அடுத்து, காந்தி மண்டபத்திற்கு வந்தோம். இந்தியாவின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தன் இன்னுயிரையே தியாகம் செய்த அந்த மகாத்மாவின் மண்டபமும் இருண்டு கிடந்தது! காந்தியின் கொள்கைகளைத்தான் நாம் காற்றில் பறக்க விட்டுவிட்டோம்; அட்லீஸ்ட் அவருடைய நினைவு மண்டபத்தையாவது ஒளிமயமாக வைத்திருக்கக் கூடாதா?

ஆங்காங்கே, அமைக்கப்பட்டிருந்த விளக்குக் கம்பங்கள் எல்லாம், இறந்து கிடந்தன. எங்கும் இருள் மயம்.

தினசரி மூவாயிரம் முதல் நாலாயிரம் வரை பயணிகள் வரும் கன்னியாகுமரி, பகலில் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கின்றது! இரவில், இருளடைந்து காணப்படுகின்றது!

புகைப்படங்கள், செய்தித் தொகுப்பு:

குளச்சல் இப்ராஹிம்.

அடுத்த இதழில்...

* ராஜீவின் புதிய கல்வித் திட்டம்— உங்கள் குழந்தைகளின் எதிர்காலம்? — ஓர் அலசல்.

* காஞ்சி பரமாச்சாரியார் அவர்கள் பற்றி நீதிபதி மு. மு. இஸ்மாயில் எழுதும் சந்திப்புக் கட்டுரை.

* கம்யூனிஸ்ட் தலைவர் பி. ராமமூர்த்திக்குக் கி. வீரமணியின் பதிலடி!

கவர் ஸ்டோரி



• 1982 — தர்ம ப்ரபோதன டிரஸ்டுக்கு ஒரே மாதத்தில் ஒரு லட்ச ரூபாய் வசூல் செய்து ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதியிடம் அளிக்கிறார் யக்ஞராமன்.

முன்பு பைலட்டாக இருந்தபோது ராஜீவ் காந்தி ஓய்வு நேரத்தில் ஜாஸ், மற்றும் பாப் போன்ற மேற்கத்திய இசையைக் கேட்டுக் கொண்டிருந்தார். இப்போது ஓய்வு நேரம் என்பதே இல்லை. ஆனாலும் டேப் ரிகார்டரில் கேஸட்டைப் போட்டு இசை இலேசாக ஒலித்துக் கொண்டிருக்கத்தான் ஃபைல்களைப் பார்க்கிறார், பிரதமர்! ஆனால் இன்று கேட்பது ஜாஸ் இசை அல்ல; சாஸ்திரீய சங்கீதம்தான்! பீம்ஸேன் ஜோஷி, எம். எஸ். சுப்புலக்ஷ்மி போன்றவர்களின் இசைதான்!

இதனை ஸோனியா தர்மயுக் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுவிட்டு, "ஒரு வேளை இந்த இசையில்தான் சோர்வை அகற்றி புத்துணர்ச்சி ஊட்டும் சக்தி இருக்கிறதோ என்னவோ?" என்றும் சொல்லியிருக்கிறார்.

ஸோனியாவின் ஊகம் கொஞ்சமும் தவறில்லை. பாப் இசையும் மெல்லிசை என்று கூறப்படும் வல்லிசையும் நரம்புகளை முடுக்கி விடத்தான் செய்கின்றனவே தவிர அமைதிப் படுத்துவதில்லை. சாஸ்திரீய இசை மட்டுமே நரம்புகளைத் தளர்த்தி, சமன்படுத்தி, சாந்தி அளிக்கிறது. அதிலும் இறையுணர்வுடன் இரண்டறக் கலந்து வரும் இசைக்கு உடலையும் மனத்தையும் அமைதிப்படுத்துகிற ஆற்றல் நிறையவே உண்டு. இது அனுபவ பூர்வமாக மட்டுமின்றி விஞ்ஞான ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டு விட்ட ஒன்று. மேலும் கலைநுணுக்கத்திலும் சரி இசையின் இனிமையிலும் சரி கர்நாடக சங்கீதத்துக்கு நிகராக உலகில் வேறு எந்த இசையையுமே கூற முடியாது என்பதை இன்று உலகமே ஒப்புக் கொண்டிருக்கிறது.

ஆயினும் என்ன? இத்தகைய உயர்ந்த கலையையும், கலைஞர்களையும் ஆதரித்தும் ஊக்குவித்தும் வருகிற சபாக்கள் குறிப்பாகச் சென்னையில் — மிகவும் குறைந்து போய் விட்டன. சிறிய அமைப்புக்கள்தாம் இன்று கர்நாடக இசைக்கு ஆதரவு அளித்து வருகின்றன. பெரிய சபாக்கள் பெரும்பாலும் நாடகம் அல்லது சினிமாதான் அங்கத்தினர்களுக்கு வழங்குகின்றன. இந்தச் சூழ்நிலையில் முப்பது வருடங்களுக்கும் மேலாகச் சென்னை தியாகராயநகர், கிருஷ்ண கான சபா கர்

'சபா'நாயகர் யக்ஞராமன்!

நாடக சங்கீதத்துக்கும் பரத நாட்டியத்துக்கும் முக்கியத்துவம் தந்து வெற்றிகரமாக நடந்து வருவது போற்றுதற்குரிய விஷயம். இந்தச் சாதனையின் பின்னணியில் இருப்பவர் சபா காரியதரிசி யக்ஞராமன்.

யக்ஞராமனைக் கர்நாடக சங்கீத அபிமானி என்றும் கிருஷ்ணகான சபாவைச் சிறப்பாக நிர்வகித்துவருகிறவர் என்றும்பலர் அறிவார்கள். ஆனால் இவற்றுக்கும்மேல் அவர் ஒரு சுவாரஸ்யமான மனிதர். அவரைச் சந்திப்போமா?

"வழக்கறிஞருக்குப் படித்துவிட்டு, எப்படி இந்தப் பணியை எடுத்துக் கொண்டீர்கள்?"

"ஊரிலிருக்கும் நிலபுலன்களைப் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. வக்கீல் தொழில் வருமானமா, விவசாய வருமானமா என்று வந்த போது, வக்கீல் தொழிலை விட்டுவிடத் தீர்மானித்தேன். சங்கீதத் தொடர்பு எப்படி வந்தது என்று கேட்கிறீர்களா...? எங்கள் தகப்பனார் நன்றாகப் பாடுவார். ஊர் விட்டு ஊர் போய்க் கச்சேரிகள் நிறையக் கேட்பார். அவருடைய பழைய டயரியைப் பார்த்தால் தெரிகிறது — அந்த நாளில் எங்கெங்கே உற்சவம், திருவிழா என்று கச்சேரிகளைக் கேட்டு ரசித்திருக்கிறார்! என் மனைவி நன்றாக வீணை வாசிப்பாள்: என் மாமனார் கணிதப் பேராசிரியர் டாக்டர் வைத்தியநாதசுவாமி, ஜஸ்டிஸ் டி. எல். வெங்கட்ராம ஐயரின் நெருங்கிய நண்பரானதால், தீட்சிதரின் கீர்த்தனைகளில் நல்ல பாடாந்தரம் உள்ளவர். இவை போதாதா சங்கீதத் தொடர்புக்கு?"

"ஆனால் உங்கள் பெயர் வெளியே தெரியத் தொடங்கியது, தியாகராய நகர் உஸ்மான் ரோடில் மசூதி ஒன்றைக் கட்ட முஸ்லிம் அன்பர்கள் முனைந்த போதுதான்..."

"ஓ. யெஸ்... அது நடந்தது 1970 ல். ஏற்கெனவே போக் ரோடில் ஒரு மசூதி இருந்தது. தவிர, சற்றுத் தள்ளி சிவா — விஷ்ணு ஆலயம்; மிக அருகிலேயே ராமநாதன் தெரு விநாயகர் கோயில். சில வேளைகளில், கோயிலிலிருந்து சுவாமி புறப்பாடு, கல்யாண ஊர்வலம் எல்லாம் அந்த வழியே வரும். முக்கியமாக தியாகராயநகர், இந்துக்கள் பெரும்



* கலைஞர் தலைமையில் நடந்த பாராட்டு விழாவில்— 1975.

பான்மையாக வசிக்கிற இடம். எதிரே, அக்கம்பக்கம் எல்லாம் இந்துக்களின் வீடுகள், கடைகள். அதனால் அங்கே மசூதி கட்ட அனுமதி தரக் கூடாது என்று கோரிப் போராடினேன். மசூதியாகக் கட்டாமல், ஒரு முஸ்லிம் பொதுநலச் சங்கக் கூடமாக அமைந்தால்; இடைஞ்சல் எதுவும் இருக்காது; தொழுகை ஒலிபெருக்கி அழைப்பு இருக்காது என்று, அன்றைய சென்னை கலெக்டர் டி. கே. ஓஸா முன்பு, முஸ்லிம் அன்பர்களின் வாக்குறுதியோடு ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. இதில் எனக்கிருந்த குறை— நமது மதத்துக்கும், தினசரி வாழ்க்கைக்கும் கட்டுப்பாடுகளும், ஊறுகளும் வருகிற போது கூட, இந்துக்கள் ஒன்று சேர்வதில்லை என்பதுதான். ஒரு சில தனிப்பட்ட மனிதர்கள் பார்த்துக் கொள்ளட்டுமே என்று விட்டேத்தியாக இருந்துவிடுகிறார்கள். இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தில், நான் இறங்கிய பிறகு, வேறு சிலரும் ஒத்துழைத்தார்கள். ஓரளவுக்கு இதில் வெற்றி கிடைத்தது எனலாம்."

"கிருஷ்ணகான சபா உங்களுக்கு ஒரு சவாலாக இருந்ததா? நீங்கள் நினைத்தபடி அதை நடத்த முடிகிறதா?"

"'உன் சொந்தத் திறமையில், உன் தனிப்பட்ட முத்திரையைப் பதிக்க வேண்டும். எல்லோரும்தான் சம்பாதிக்கிறார்கள்; அது முக்கியமல்ல. ஒரு தனிமனிதனாகப் புகழ் பெற நீயே முயல வேண்டும்!' என்று என் தகப்பனார் அடிக்கடி சொல்லுவார். அது என் மனசில் அப்படியே ஊறிப் போயிருந்தது...

"1954 ல் சபாவை மகாராஜபுரம் சந்தானம் அவர்கள்தான் ஆரம்பித்து வைத்தார். மகாராஜபுரம் விசுவநாதய்யர் தலைவர். அப்போதெல்லாம் நான் அதில் கமிட்டி மெம்பர்தான்.

"அப்புறம் 1957 ல் நானே செயலாளர் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன். எனக்குக் கமிட்டி உறுப்பினர்கள் ஒத்துழைப்பு மட்டுமல்ல. கலைஞர்களின் ஒத்துழைப்பும் பரிபூரணமாயிருக்கிறது. அதனால்தான் என்னால்



* சிறந்த சபாவுக்கான மாநில அரசின் பாராட்டு— 1981.



* கருட்டுப்பள்ளி கிராமம். நவம்பர் 71, கார்த்திகை தினத்தன்று பரமாச்சார்யாள் வேண்டுகோளுக் கிணங்க ஒரே நாளில் யக்ஞராமன் ஏற்பாடு செய்த இன்னிசை நிகழ்ச்சி.

இந்த சபாவை வெற்றிகரமாக நடத்த முடிகிறது. ரசிகர்கள், கிருஷ்ணகான சபா நிகழ்ச்சிகள் என்றால் பெருமளவு வருவதற்குக் காரணம், இங்கே நிகழ்ச்சிகள் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கைதான். கோகுலாஷ்டமி சங்கீத உற்சவத்தின் போது வித்துவான் ஒருவருக்கு 'சங்கீத சூடாமணி' விருதும், டிசம்பரில் நாட்டியக் கலைக் கருத்தரங்கு நடத்தி நடனக் கலைஞருக்கு 'நிருத்ய சூடாமணி' விருதும் வழங்குகிறோம். அவர்கள் தங்கள் கலையில் ஆற்றலுடனும் புகழுடனும் இருக்கும்போதே, வழங்கி விடுகிறோம்; வயதாகட்டும் என்று தள்ளிப் போடுவது இல்லை.'' (புகழ்பெற்ற நடனமணி அலர்மேல் வள்ளிக்கு இந்த டிசம்பரில் 'நிருத்ய சூடாமணி' பட்டம் கொடுக்கப் போகிறார்கள்.)

''நீங்கள் இந்த லெக்சர்–டெமான்ஸ்ட்ரேஷன், கருத்தரங்கு எல்லாம் நடத்துவது, இயலிசை நாடக மன்றத்தின் 'கிராண்ட்' பெறுவதற்குத்தானா?''

''சரியாய்ப் போயிற்று! தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஒரு பைசா கூட மானியம் தருவது கிடையாது. இத்தனைக்கும், இந்த மன்றத்தில் பதினைந்து வருடங்கள், துணைத் தலைவர் பதவி முதல் கமிட்டி உறுப்பினர் பதவி வரை வகித்து வந்திருக்கிறேன்! அப்படியிருந்தும்கூட நிதியுதவி பெற்றதில்லை. அவர்களுக்கும் அக்கறை இல்லை. மத்திய அகாடமியிலிருந்து 2000 ரூபாய் தந்தார்கள் சமீப காலம்வரை. பிறகு மூவாயிரம் ஆயிற்று. இப்போது நாலாயிரம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் மொத்தமாகச் செய்கிற செலவுக்கு இந்த மானியம் வெகு வெகுக் குறைவு. ஆனால் இந்தப் பணிக்கு அரசாங்க அங்கீகாரம் கிடைக்கிறதே என்ற அளவுக்குத் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். இங்கேயிருந்து தனிப்பட்ட சிலர் போய் மத்திய அகாடமியிலிருந்து நிதி வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். வடக்கே, எங்கள் அளவுக்கு எதுவும் செய்யாமல் நிறைய நிதியுதவி வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள்! பொழுது போக்குக்கு மட்டும் உதவும் சபா ஆக இல்லாமல், அதற்கு ஸ்தாபனரீதியாகக் கௌரவம் தேவை என்ற ஆசை என் மனத்தில் இருந்தது. கருத்தரங்குகள், லெக்சர்–டெமான்ஸ்ட்ரேஷன்கள் நடத்துவதில் ரசிகர்களின் ரசனையை உருவாக்கவும், உயர்த்தவும் முடிகிறது.

''சபாக்களின் கூட்டமைப்பு (ஃபெடரேஷன் அஃப் ஸிடி சபாஸ்), சார்பில் பம்பாய் சண்முகானந்தா சபா டி. வி. ராமானுஜம் அவர்களைக் கௌரவித்தீர்களே, இந்தக் கூட்டமைப்பினால் ஏதாவது சாதித்திருக்கிறீர்களா?''

''நாடகக் குழுக்கள், முன்பு ஒவ்வொரு நாடகத்துக்கும் தங்கள் இஷ்டத்துக்குத் தொகை கேட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தக் கூட்டமைப்பு மூலம்தான் இன்னின்ன குழுவுக்கு இத்தனைத் தொகை என்று தர நிர்ணயம் மாதிரி செய்து ஒரு கட்டுப்பாடு கொண்டு வந்தோம். வரும் புத்தாண்டில் ஒரு நாடகக் கருத்தரங்கு, நாடக விழா எல்லாம் நடத்த இருக்கிறோம்.''

''கிருஷ்ணகான சபா மாதிரி, மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து இத்தனை கூட்டம் சேர்த்து, பம்பாய் சண்முகானந்த சபாவில் கூட எங்களால் நடத்த முடியாது — யக்ஞராமன் அவர்களால் மட்டும்தான் முடியும்' என்று பேராசிரியர் டி. வி. ராமானுஜம் சொன்னாரே, அது அதிகப்படியான புகழ்ச்சி இல்லையோ, அங்கேயா, அவராலேயா முடியாது?''

''எனக்கு மட்டும் அந்த மாதிரி ஒரு பின்னணி இருந்தால் இன்னும் பிரமாதமாகச் செய்வேன். அந்த அளவுக்கு வசதி இல்லையே என்ற வருத்தம் ஓரளவு உண்டு எனக்கு. மலர் விளம்பரம், நன்கொடைகள், டிக்கெட் வசூல் என்று வந்தாலும், சபா நிகழ்ச்சிகளைப் பனிச்சென்று நடத்தவே அவை சரியாகப் போய் விடுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றும் சொல்லுகிறேன்: மிகப் பெரிய ஸ்தாபனங்கள் தருவதைவிட, அதிகமாகவே நான் இங்கே வித்துவான்களுக்குச் சன்மானமாகக் கொடுக்கிறேன்.''

''கர்நாடக இசையை ரசிக்கக் கூட்டம் வரமாட்டேன் என்கிறது என்று சொல்லு

கிறவர்களுக்கு உங்கள் பதில் என்ன?''

''இதை நான் வன்மையாக மறுக்கிறேன். கச்சேரிகள் நடத்தாமல் இருக்க இது ஒரு சாக்கு; அவ்வளவுதான். ரசிகர்களிடம் ரசனையைச் சரியாக வளர்க்காததற்கும், ஒழுங்காகக் கச்சேரிகளை நடத்தாமல் இருப்பதற்கும் இவை சால்ஜாப்புகளே தவிர வேறு இல்லை. நாங்கள் ஒரு சீசனில் நடத்துகிற அறுபது கச்சேரிகளில், அறிமுகக் கலைஞருக்குக் கூடக் குறைந்த பட்சமாக நூற்றைம்பது பேராவது வந்து கேட்கிறார்கள். குறைந்த பட்ச வசூலாக ஐம்பது ரூபாயாவது வந்திருக்கிறது.''

''இளைஞர்கள் நம் சம்பிரதாய இசையைக் கேட்க வருவதில்லை என்று கூறுகிறார்களே?''

''எங்கள் சபாவைப் பொறுத்த வரை இந்தக் குற்றச்சாட்டுக்கும் விலையில்லை என்பேன். நீங்களே எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பாருங்கள். ஐம்பது பர்சென்ட் வரை ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களும், மீதி இளைஞர்களும் யுவதிகளும்தான் வருகிறார்கள். ஏராளமாகக் கூட்டம் வர வேண்டும், நிறைய வசூல் ஆக வேண்டும் என்று லைட் மியூசிக்கே எப்போதும் போட முடியுமா? அதற்கும் இப்போது மவுசு இல்லாமல் போய்விட்டது என்பது வேறு விஷயம். ஆனால் அப்படிக் கூட ஒரு சமரசம் செய்து கொள்ள நான் தயாரில்லை. ஓரளவுக்குச் சபா தரத்தையும், ரசனையையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.''

''தொழிலதிபர் பி. அனந்தசுவாமி அவர்கள், திருத்யரங்கா விழாவின் போது, சபாக்களில் பணம் வாங்கிக் கொண்டு நடனக் கலைஞர்களை மேடையேற்றும் வழக்கம் நிற்க வேண்டும் என்றார். திறமை உள்ளவர்கள் அப்போதுதான் மேடைக்கு வர முடியும் என்றார்...''

''எல்லாச் சபாக்களும் நன்றாக, வசதியாக இருக்கின்றன என்று சொல்ல முடியாது. பத்துவருஷம்செலவுசெய்துகற்றுக்கொண்டு விட்டு, உடைகளுக்கும் அரங்கேற்றத்துக்கும் பத்தாயிரம், பதினைந்தாயிரம் செலவு செய்து விட்டு, 'நான் உங்கள் சபாவில் வந்து ஆடணும்!' என்று அவர்கள் சொன்னால், 'அம்மா, நான் சபாவின் பெயரை, மேடையைத் தருகிறேன். ரசிகர்களை வரச் செய்கிறேன். பப்ளிசிடி செய்கிறேன். நீங்கள் வசதியாக இருக்கிறீர்கள். நன்றாகவும் ஆடுகிறீர்கள். நிகழ்ச்சிக்கு ஆகும் செலவு எத்தனையோ இருந்தாலும், ஒரு தொகையை சபாவுக்கு நன்கொடையாக அளியுங்கள். உங்கள் திறமையை மக்கள் பார்த்து ரசிக்க முடியும்'— என்றுதான் சொல்லுகிறோம். இதிலும்கூட, நன்கொடை தருகிறார்கள் என்பதற்காக, கேட்கிறவருக்கெல்லாம் சான்ஸ் கொடுப்பது இல்லை. திறமை இருக்கிறதா? என்றும் பார்க்கிறோம். திறமை மட்டுமே இருந்து, வசதி இல்லாதவர்கள் கூட எங்கள் மேடையில், சீசனில் ஆடியிருக்கிறார்கள். அவர்களிடம் நன்கொடை எதுவும் பெற்றதில்லை. இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?''

''சேலத்தில் சு. ராஜாராம் ஒரு சபாவைத் துவக்கியிருக்கிறாராமே? மெம்பர்களிடமிருந்து மொத்தமாக ஒரு தொகையைப் பெற்று, அதை ஃபிக்ஸட் டெபாஸிட்டில் போட்டு, அதில் வரும் வட்டியில் மாதாமாதம் ஒரு கச்சேரி வைத்து, முடிவில் ஒரு டின்னரும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறாராமே?''


''கச்சேரி வைத்து டின்னர் போடுவது இங்கே மியூசிக் கிளப், 50—50, ராக்தரங்கிணிகாரர்கள் கூடச் செய்கிறார்கள். கச்சேரிக்கு முக்கியத்துவம் போய், டின்னருக்குத்தான் முக்கியத்துவம் வந்துவிடுகிறது. எட்டு மணி வரை கூட்டம் அதிகம் இருக்காது. கச்சேரி முடிகிற சமயத்தில் மெம்பர்கள் அத்தனை பேரும் வந்துவிடுகிறார்கள்! சங்கீதத்தை வளர்க்க இது ஒரு சுப சூசகமான குறி இல்லை என்பேன். 20% கச்சேரி கேட்பவர்களும், 80% சாப்பிடுவதற்கு வருகிறவர்களுமாக இருப்பார்கள். நானே மெம்பராக இருந்த அனுபவத்தில் சொல்லுகிறேன்.

''திரு. ராஜாராம் செல்வாக்குள்ளவர். அவர் சேலத்தில் செய்து வருகிறார் என்கிறீர்களே, அதேபோல, காஞ்சி காமகோடி பீட கர்நாடக சங்கீத சேவா டிரஸ்ட் துவங்கிய போது, மூன்று லட்ச ரூபாய் சேர்த்து, சங்கீத மும்மூர்த்திகள் இல்லங்களைச் செப்பனிட்டுக் கொடுப்பது என்றுதான் ஆரம்பித்தோம். வசூல் ஆனது பதினாறு லட்ச ரூபாய்! தனிப்பட்டவர்கள் நன்கொடை தவிர, பொது மக்கள் ஒன்று சேர்ந்தும் வழங்கினார்கள். மேற்படி செலவு செய்தது போக, மீதியை ஃபிக்ஸட் டெபாஸிட்டில்தான் போட்டிருக்கிறோம். அதில் வரும் வட்டியை வைத்துக் கொண்டு, வரும் ஆண்டுகளில் யார் தயவும் இல்லாமல், வசூலுக்குப் போகாமல், மும்மூர்த்திகள் இசைவிழா நிகழ்ச்சிகளைத் திருவாரூரில் விமரிசையாகக் கொண்டாடப் போகிறோம்.''

இவ்வாறு கூறும் யக்ஞராமனின் முக்கியத்துவத்தை 1975லேயே உணர்ந்து அவரை இசை அன்பர்களும் கலைஞர்களும் சேர்ந்து "கலைஞர்" தலைமையிலேயே பாராட்டினார்கள். இன்று, பத்தாண்டுகளுக்குப் பிறகு, யக்ஞராமனின் முக்கியத்துவம் இசை உலகில் முன்னெப்போதையும்விட அதிகமாகவே உணரப்பட்டு வருகிறது. காரணம், கர்நாடக இசையையும் கலைஞர்களையும் எப்படி ஊக்குவிப்பது என்பதை மட்டுமின்றி ரசிகர்களை எப்படி உருவாக்குவது, ஈர்ப்பது என்ற ரகசியத்தையும் அவர் அறிந்து வைத்திருப்பதுதான்!

— சாருகேசி.

அட்டை வண்ணப்படம்: **யோகா.**


அமெரிக்கா
ரஷ்யா


கருணாநிதி (ஆதரவு) ஆரம்பப் பள்ளி
அடக்கு முறை
வாங்க.. வாங்க.. உள்ளே வாங்க!


என்னாங்க இது?
ஃபோன் (DEAD) 'டெட்'ங்க!



கல்கி

1985 டிசம்பர் 1
மலர் 44 இதழ் 18
குரோதன கார்த்திகை 16



ஆசிரியர் கிளர்ச்சியில் அரசியல் வேண்டாம்

நீடித்துக் கொண்டே போகிற பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்தினாலும், தமிழக அரசின் போக்கினாலும் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது தமிழகக் குழந்தைகளே. அவர்களுடைய எதிர்காலத்தையும் அதோடு கூடவே தமிழகத்தின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கிற மிகப் பெரிய புனிதப் பொறுப்பு தங்கள் மீது சுமந்திருப்பதை இரு தரப்பினருமே உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

'தமிழ்நாட்டில் ஆசிரியர்கள் ஊதியம் தேசிய சராசரியை விடக் குறைவு' என்பதை எடுத்துக் காட்டினால் இதற்கு அரசுத் தரப்பிலிருந்து தரப்படும் 'சலுகை விளக்கம்' நகைப்புக்கிடமளிப்பதாக உள்ளது. போதாக்குறைக்கு 'ஊதியம் சற்றுக் குறைவாக இருக்கலாம்' என்பதை ஒப்புக் கொண்ட பிறகே இதர சலுகைகளைப் பட்டியலிடுகிறது அரசின் அறிக்கை. இந்தச் சலுகைகள், ஒருவர் இருபதாண்டுகள் பணியாற்றிய பின்னரோ, ஓய்வு பெறும் போதோ, அல்லது இறந்த பிறகோ கிடைக்கின்றவை. இவற்றால் இன்றைய வயிற்றுப் பாட்டுக்கு என்ன பிரயோஜனம்?

ஒவ்வொரு வகுப்பிலும் ஏராள எண்ணிக்கையில் வந்தடையும் மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் சிரத்தை கொண்டு அன்புடனும் கவனமுடனும் செயல்பட்டு நல்ல எதிர்காலப் பிரஜைகளை உருவாக்க வேண்டுமானால் ஆசிரியர்கள் குடும்பக் கவலையற்றவர்களாக இருக்க வேண்டும். இதற்கேற்ப அடிப்படை ஊதிய விகிதங்கள் அமைய வேண்டும். இதைச் செய்யாமல், பள்ளியில் மாணவர்களை அவர்கள் சரியாகக் கவனிப்பதில்லை; டியூஷன் சொல்லிக் கொடுத்துச் சம்பாதிக்கிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டுவது அபத்தம்.


ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும்போது அவர்களுக்குப் பதிலாகப் புதிய ஆசிரியர்களை நியமிக்கப் போவதாகவும் மனுக்களை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பலாம் என்றும் அரசு பெரிய பெரிய விளம்பரங்களை நாளிதழ்களில் கொடுப்பது வடிகட்டின 'பிளாக் மெயில்' அன்றி வேறில்லை. ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1400 ஆசிரியர்கள் மூன்று ஆண்டுகளாகியும் இன்னமும் பணி புரிய வாய்ப்புப் பெறாமல் இருக்கின்ற நிலையில், இந்த விளம்பர அறிக்கையானது மிரட்டல் அல்ல என்றும், குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய பெற்றோர்களின் கவலையை அரசும் பகிர்ந்து கொள்வதன் வெளிப்பாடே என்றும் கூறுவது ஏமாற்று வேலை.

பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களைக் கைது செய்து சிறையில் தள்ளுவது, ஆயிரக் கணக்கானவர் மீது வழக்குத் தொடுப்பது போன்ற அடக்கு முறைகளால் அரசு மேன்மேலும் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளலாமே தவிர, ஆசிரியர்களை அடிபணிய வைக்க முடியாது. நேற்று வரை, போராட்டத்தில் ஈடுபடாதவர்களும் இனி போராட்டத்தில் சேர்வார்கள்.

ஆசிரியர்கள் போராட்டம் என்ற நெருப்பிலே எதிர்கட்சிகள் குளிர்காய்கின்றன. அவர்களுக்கு ஆதரவு தருவதாகக் கூறி தாங்கள் பிரபலமடையப் பார்க்கின்றன. இதில் ஆசிரியர்கள் மயங்கிவிடக் கூடாது. தனிப்பட்ட முறையில் ஓர் ஆசிரியருக்குக் கட்சி அனுதாபம் இருக்கலாம்; ஆனால் ஆசிரியர் என்ற அளவில் அவர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு ஜனநாயகத் தத்துவத்தை மட்டுமே போதிக்க வேண்டியவர். ஆசிரியர்கள் அணி அரசியல் கட்சி சார்புடைய இதர தொழிற்சங்கங்கள் போல் நடந்து கொள்ளக் கூடாது. இன்றைய ஆசிரியர்கள் போராட்டத்தின் பின்னணியில் ஓரளவு அரசியல் தூண்டுதலும் இருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு அவர்கள், 'அதிகாரிகளுடன் பேச மாட்டோம்; அமைச்சருடன் பேச மாட்டோம்; முதல்வர் வந்தால்தான் பேசுவோம்' என்று கூறுவதாகும். முதல்வரின் இன்றைய உடல் நிலையை நன்கு உணர்ந்திருந்தும் இவ்வாறு நிபந்தனை விதிப்பது அரசியல் புகுந்து விளையாடுகிறது என்ற எண்ணத்தையே ஏற்படுத்துகிறது.

'பேசுங்கள், சில விஷயங்களில் பிடிவாதமாக இருந்து, சில அம்சங்களில் விட்டுக் கொடுங்கள். சீக்கிரம் ஒரு நல்ல முடிவுக்கு வந்து கடமைக்குத் திரும்புங்கள்' என்பதே பிள்ளைகளின் எதிர்காலம் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான பெற்றோர்களின் வேண்டுகோள்.

நூறாவது கிரகம்



இரா. நடராசன்

அந்தச் சக்தி மிகுந்த ரேடார் திரையில் வெள்ளிக்கம்பியாகஒளிர்ந்தவரைகோட்டில் தெறிப்புகளும், துண்டிப்புகளும் உண்டாயின.

ஆராய்ச்சிக் கூடத்தின் அத்தனை ரேடார் திரைகளும் அதையே, பிரதியெடுத்துக் காண்பித்தன.

இதற்கு, அந்தரேடாரின் ட்ரேன்ஸ்மிட்டிங் ஏரியல் இலக்கினை நோக்கி ஒளியின் வேகத்தில் அனுப்பிய எலக்ட்ரான் கற்றைகள் (Electron beams), அதே ரேடாரின் ரிஸீவிங் ஏரியலைத் திரும்ப வந்தடைகின்றன என்று அர்த்தம்.

அதாவது, எலெக்ட்ரான் கற்றைகள் ஏதோ ஒரு புதிய கிரகத்தின் மீது பட்டுத் திரும்புகின்றன!

ஆமாம், அறிமுகமற்ற புதிய கிரகம்!

விஞ்ஞானிகள் கூட்டம் வெற்றிக் களிப்பில் இருந்தாலும், அதீத விறைப்புடன் செயல்பட்டது.

இன்று நேற்றல்ல, பல வருடங்களாக நடக்கின்றது இந்த ஆராய்ச்சி, ஆய்வு முயற்சி. முயற்சி என்பதைவிட, போட்டி என்றுதான் இதைக் கூற வேண்டும். பயங்கரப் போட்டி.

விஞ்ஞானம் இப்போது ரொம்பவும்தான் வளர்ந்துவிட்டது. இந்த அறிவு மிகுந்த விஞ்ஞானிகளே அதற்கு ஓர் எடுத்துக்காட்டுதான். எல்லோரும் Artificial insemination மூலம் உருவாக்கப்பட்டவர்களே.

இப்போது இந்த முழு உலகமும் மூன்று வல்லரசுகளாக மாறிவிட்டன (ரஷ்யா, இந்தியா, அமெரிக்கா). மூன்றுமே சம பலம் பொருந்தியவை.

சில சிறு நாடுகள் அங்கங்கே சுதந்திரமாக இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், பெயரளவில்தான் அவை தனி நாடுகள். மற்றபடி ஏதாவதொரு வல்லரசின் ஆதிக்கத்தின் கீழ் அல்லது ஆதரவின் மேல் இருப்பவைதான் அனைத்துமே.

வல்லரசுகளுக்குள் போட்டியும் பொறாமையும் மிகுந்துவிட்டது. அதுவும் உச்ச நிலை.

இதனால், மக்களுக்குப் பயம் பெருகியதுதான் மிச்சம். எங்காவது ஒரு எலி உருட்டினாலும், எதிரியின் அணுகுண்டு தாக்கிவிட்டதாகப் பீதி அடைந்தனர்.

(அர்த்தமற்ற பீதியாலும், பயத்தாலும் இறப்பவர்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகின்றது — ஓர் உலக மருத்துவ ஆய்வின் முடிவு.)

எந்த நேரமும் உலகப் போர் மூளும் அச்ச நிலை நிலவியது.

இந்த முறை அப்படியொரு போர் வந்தால், அடுத்த மூன்றாவது வினாடியே இந்த பூமி வெடித்துச் சிதறி முழுவதுமாக அழிந்துவிடும் அபாய நிலைதான். இதுதான் அறிவியல் வளர்ச்சியின் உண்மையான சாதனை.

இதுவே, புதிய உலகம் கண்டுபிடிக்கவேண்டும் என்ற மனிதனின் ஆர்வத்தை அவசியமாக்கிவிட்டது.

வல்லரசுகளின் முக்கிய வேலையே இப்போது கிரகத் தேடல்தான். நிறையப் பணம் அதற்கெனவே ஒதுக்கப்பட்டது.

பூமிக்கு ஆபத்தென்றால் தப்பித்தோட ஒரு போக்கிடம் தேவையல்லவா?

இந்தப் பரந்த அண்டவெளியில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ற கோள் ஒன்றைக் கண்டுபிடிக்கும் வேலையில் முழுமூச்சோடு இருந்தன எல்லா வல்லரசுகளும்.

முதலில் கண்டுபிடிப்பவர்களுக்குத்தானே அந்தக் கோள் சொந்தமாகும்?

அப்படியொரு புதிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டால், அதன் மீதான உரிமைப் போர் எழுந்து, அதுவே உலகம் அழியக் காரணமானதாக இருக்கலாம் என்று வல்லுனர்கள் கருதினர்.

சூரிய குடும்பத்தின் பிற கிரகங்கள் வாழ லாயக்கற்றவை என்பது தெரிந்த கதை. வியாழன் கிரகம், சீக்கிரத்தில் ஒரு நட்சத்திரமாக மாறும் அபாய நிலையில் இருப்பதைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர்.

எனவே, பிற நட்சத்திரக் குடும்பங்களையும், மண்டலங்களையும் நாடி மனிதன் ஓடினான்.

புதிய கிரகத்தைத் தேடி ஆயிரக்கணக்கான வானக் கப்பல்கள் அண்ட கோளத்தினுள் ஊடுருவிச் சென்றுவிட்டன.

அதில் பல ரகம். சில மனிதனுடன். பல காலியாக.

நிறைய வானக் கப்பல்கள் மர்மமாக மறைந்து விட்டன. அவைகளில் பயணம் செய்த மனிதர்கள் கதி பற்றிச் செய்தியில்லை.

சரி, நாம் ஆராய்ச்சிக் கூடத்திற்கே திரும்புவோம்.

பூமியிலிருந்தே ரேடார் மின் அலைகளை வானத்தில் செலுத்திப் புதிய கிரகம் கண்டுபிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் வெற்றி பெற்று விட்டனர்.

இதுதான், அங்கே சற்றுமுன் நிகழ்த்தப்பட்ட சாதனை.

அந்தச் சக்தி மிகுந்த ரேடார் திரையில் ஒரு அறிமுகமற்ற கிரகம் சிக்கிவிட்டது.

விஞ்ஞானிகள் ஆவேசமாகக் கூவினர்.

நுட்பமான இயந்திரங்களில் பல விளக்குகள் கண்சிமிட்டிப் பேசின. அந்த பாஷை அங்கிருப்போருக்குப் புரியும்.

திடீரெனச் சில விநோதமான ஒலிக் குறிகள் மறுபுறமிருந்து பெறப்பட்டன. ஆனால், அதில் தெளிவில்லை.

மீட்டர்கள் திருத்தியமைக்கப்பட்டன. விஞ்ஞானிகள் கூர்மையாகக் கவனித்தனர்.

இப்போது ரேடார் திரையில் பலவண்ணக் கலவைகள் குழம்பலாக ஒளிர ஆரம்பித்தன.

விஞ்ஞானிகளுக்கு ஒரு விஷயம் புரிந்து

விட்டது. அதாவது, பூமியிலிருந்து அங்கு போகும் சிக்கல்களைப் பெற்று, அதற்குப் பதில் தரக்கூடிய அமைப்புகள் — அதாவது, கம்ப்யூட்டர், ரேடார் சாதனங்கள் — அங்கும் இருக்கின்றன என்று.

அங்கும் அறிவு ஜீவிகள்!

அடுத்த வினாடியே இந்தச் செய்தி உலக மெல்லாம் பரவியது. எங்கும் உற்சாகம் கரை புரண்டது.

எதிரி நாடுகள் பொறாமையால் கொதித் தன.

சில விநாடிகளில் தங்கள் நாட்டின் தலைவருக்குப் புதிய கிரகத்துடன் நேரடித் தொடர்பை விஞ்ஞானிகள் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

காரணம், ரேடார் திரையில் புதிய கிரகத்தின் மனிதன் தோன்றினான்.

புதிய கிரக மனிதனுடன் பேசத் தயாராகி அமர்ந்தார் அந்த நாட்டின் தலைவர். அவர் முகத்தில் பெரும் ஆனந்தமும், பெருமையும் பொங்கியெழுந்தன.

இந்நேரம் அயல் கிரகவாசியும் தனது ரேடார் திரையில் இவரைப் பார்த்துக் கொண்டு இருப்பான்.

அவன் பார்ப்பதற்கு ஏறக்குறைய உலக வாசிபோல காணப்பட்டாலும், பல வேறு பாடுகள் தெரிந்தன.

சதுரமான தலை... அதில் முடியே கிடையாது.. காதுக்குப் பதில் இரண்டு நீளமான உணர் கொம்புகள், ஒரு கண்தான் நெற்றியில் இருந்தது. கை, கால்கள் மிகவும் நீளம். குறைந்தது அந்த மனிதனின் உயரம் பத்தடி இருக்கலாம்.

அவன் தன் மொழியில் பேச ஆரம்பித்தான். அதனை உலக கம்பியூட்டர்கள் மொழி மாற்றம் செய்தன.

''வந்தனம் புதிய கிரகவாசிகளே! நான் தான் இந்தப் பெருமை பொருந்திய கிரகத்தின் தலைவன் ஜூஜூஜூ.''

''மகிழ்ச்சியுடன் வணக்கங்கள். இது உலகம். இங்கு மூன்று வல்லரசுகள் உள்ளன. அதில் ஒரு வல்லரசின் தலைவன் நான்.''

''உலகம் எங்குள்ளது?''

''பால் வழி மண்டலத்தில்.''

''அது?''

உலகத் தலைவர் கோளத்தில், பால்வழி மண்டலம், உலகம் ஆகியவற்றின் இருப்பிடங்களைச் சொன்னார்.

தங்கள் கிரகத்தின் இருப்பிடங்களைப்பற்றி ஜூஜூஜூ கூறியதும் உலகத் தலைவர் மகிழ்ந்தார். ''உங்களின் நட்சத்திர மண்டலத்தை நாங்கள் ஆன்ரோமிடா நெபுலா என்று அழைப்போம். இங்கிருந்து அது 20,00,000 ஒளியாண்டுகள் தொலைவல்லவா?''

''அப்படியா?''

''அங்குகூட எங்களின் பலராக்கெட்டுகள் புதிய கிரகத்தைத் தேடி அலைந்து கொண்டு இருக்கின்றன,'' உலகத் தலைவரின் குரலில் பெருமை இழையோடியது.

> புலவர்; ''எத்தனைத்தடவைசொல்லியிருக்கேன்... குழியிலிருந்து பணியாரத்தைக் குத்தி எடுக்க என் எழுத்தாணியை உபயோகிக்காதேன்னு!''
>
> —உ. ராஜாஜி.



''நாங்களும் புதிய கிரகத்தைத் தேடுவதில் தான் தீவிரமாக இருக்கின்றோம்.''

''சந்தோஷம்.''

''காரணம் கேட்கவில்லையே நீங்கள்?''

''சொல்லுங்கள்.''

''நாங்கள் கிரகத்தாசை பிடித்தவர்கள்.''

''புரியவில்லை.''

''புரிய வைக்கிறேன். உங்கள் கிரகத்தில் பெண்ணாசை பிடித்தவர்கள் இருப்பார்களே?''

''100%.''

''இங்கும் அப்படியே. அதுபோலவே, நாங்கள் கிரகத்தாசை பிடித்தவர்கள். புரிகிறதா, உலகத் தலைவரே?''

உலகத் தலைவர் முகம் சுருங்கியது.

ஜூஜூஜூ தொடர்ந்தான்: ''இந்த முழு அண்டமும் எங்களின் ஆதிக்கத்தின் கீழ் வரவேண்டும் என்பதே எங்களின் ஒரே லட்சியம். அதற்கான அறிவும், படைபலமும் வைத்திருக்கிறோம். எங்கள் விஞ்ஞானிகள் புதிய கிரகங்களைக் கண்டுபிடிப்பார்கள். அடுத்த நொடியே அவற்றை நோக்கி எமது கனம் பொருந்திய ராணுவம் பாயும். சில கணப்பொழுதுகளில் அந்தக் கிரகத்தை வென்று, வெற்றி வாகை சூடிவிடும். பிறகு, அவையும் இந்தப் பெருமை பொருந்திய க்கோஸ்ட்ரா கிரகத்தின் அடிமைகள்தான்... ஹாஹா...''

உலகத் தலைவர் அதிர்ந்து போனார்.

''இதுவரை இந்த அண்ட கோளத்திலுள்ள தொண்ணூற்றொன்பது கிரகங்களை வென்று விட்டோம். உலகம் இன்னும் சில நொடிகளில் எமது அடிமையாகப் போகும் நூறாவது கிரகம்,'' மீண்டும்சிரித்தான் ஜூஜூஜூ.

''எமக்குத் தோல்வியே கிடையாது.''

தங்களுக்குள் இருந்த பகைமையை மறந்து, ஒற்றுமையுடன் எதிரியைச் சந்திக்க ஆயத்தமானது உலகம்.

நம்மைப் பிடித்த துர்ப்பாக்கியங்கள்

வாசகர் குமுறல்

பிரதமர் குறுகிய கால அளவில் பெருமளவு வெள்ளச் சேதத்தைப் பார்வையிட வருகிறார். இந்த நேரத்திலும் விமான தளத்தில் வரவேற்ற பிரமுகர்கள் பல் இளித்துப் போட்டி போட்டுக் கொண்டு மாலை அணிவிக்கவும், கதராடை போர்த்தவும் 'நான் முந்தி நீ முந்தி' என்று அவஸ்தைப்படும் காட்சியை டி.வி.யில் காட்டினார்கள்! இந்தப் பிரமுகர்களும் தலைவர்களுமா நாட்டுக்கு வழிகாட்டியாக விளங்கப் போகிறார்கள்? நம் நாட்டைப் பிடித்த இந்தத் துர்ப்பாக்கியங்கள் என்று தீருமோ தெரியவில்லை.

ஸ்ரீராமன், சென்னை—44.

போலீஸாருக்குச் சம்பளம் கொடுப்பதில்லையா?

8.11.85 அன்று எங்கள் கிராமத்தில் உட்கார்ந்து கொண்டு வரும் லாரி கார்களை மடக்கி தீபாவளி எனக் கூறி வசூல் செய்தனர் மூன்று போலீஸார். நாங்கள் அருகில் சென்ற போது துரத்தினார்கள். இவர்கள் அடிக்கடி இப்படிச் செய்கின்றனர். இவர்களுக்கு அரசு சம்பளம் கொடுப்பதில்லையா?

செ. செல்வராஜ், ஆரோவில்—605 101.

பஸ்ஸைக் கண்டாலே பயம்!

யார் குடிச்சு எக்கேடு கெட்டுப்போனாலும் எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால் பட்டப் பகலில் குடித்துவிட்டு பஸ்ஸில் பிரயாணம் செய்யும் 'குடிமக்களை'த்தான் எங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தினமும் நகரப் பேருந்துகளில் குடித்து விட்டு வந்து பொதுமக்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் இந்தக் குண்டர்களை யாரும் கண்டு கொள்வதே இல்லை. குடித்து விட்டுப் பெண்கள் பகுதியில் நின்று கொண்டு அடிக்கும் கும்மாளத்தை டிரைவரோ, கண்டக்டரோ கண்டு கொள்வதில்லை. ஒரு சிலர் நேரடியாகக் காவல் நிலையத்தில் சென்று புகார் செய்தாலும் 'ஆளுங் கட்சி' வட்டங்களால் உடனே விடுவிக்கப்படுகிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால், 'அரசு சாராய மலிவு விலைப் பிரிவு' என்றொரு பகுதியைப் பேருந்தில் தொடங்கினாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

— மூணாறு பி.எம். ஜெயா, கோவை.

பொறுப்புள்ள அமைச்சரின் பேச்சா இது?

சென்னை மாநகராட்சி கோட்ட அலுவலகக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைக்கும் போது உள்ளாட்சித்துறை அமைச்சர்— முக்கியமான சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்படும் லாரிகளின் சொந்தக்காரர்களுக்குப் பொது மக்களே பாடம் புகட்ட வேண்டும்; அந்த லாரிகளின் சக்கரங்களிலிருந்து காற்றை அவர்களே வெளியேற்றி விடலாம் என்றும் பொது வாழ்வில் தவறு செய்பவர்களுக்குப் பொது மக்களே தண்டனை அளிக்கலாம் என்றும் கூறியுள்ளார். அப்படியானால் காவல் துறை எதற்கு? மற்ற தவறு செய்பவர்களையும் இதே ரீதியில் பொது மக்களே தண்டனை அளிக்கத்துவங்கினால்........ பொறுப்புள்ள அமைச்சரின் பேச்சா இது!

— திருமதி கீதா ராஜகோபாலன்,
மன்னார்குடி—1.

நஷ்டம் பொதுமக்கள் தலையிலா?

அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள் சில நஷ்டத்தில் நடப்பதாகச் சொல்லி பஸ் கட்டணத்தை அதிகப் படுத்தி விட்டார்கள். யார் காரணம், பொது மக்களா? ஊழியர்களா? அரசியல்வாதிகளா? உதாரணமாகக் கொஞ்ச நாட்களுக்கு முன் எல்லா பஸ்களிலும் 'டைஞ்கிராப்ட்' என்னும் வேகத் தடை கருவி பொருத்தினார்கள். ஒரு கருவியின் விலை ரூ 5000க்கும் அதிகம். கிட்டத்தட்ட பத்தாயிரத்துக்கும் அதிகமான பஸ்களில் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து பொருத்தப்பட்டது. தற்பொழுது ஒரு பஸ்ஸிலும் அந்தக் கருவியைக் காண முடியவில்லை. உபயோகமில்லாது அவை குப்பைக்குச் சென்று விட்டன. தயாரிப்பாளருக்குப் பணம் போய்ச் சேர்ந்து விட்டது. அந்த நஷ்டத்தை ஈடு செய்யப் பொதுமக்கள் தலையில்பஸ்கட்டண உயர்வை அமுல்படுத்தி விட்டார்கள். பொது மக்களிடம் ஓட்டுப் பெற்று ஆட்சிக்கு வந்தவர்கள் கொஞ்சமாவது இதனைச் சிந்திப்பார்களா?

— பி. பாலு, கும்பகோணம்.

18. திருமணத் தருணம்

நல்லதும் பொல்லாததும் கர்மவினையால் விளைகின்றன. நல்லது ஏற்படும்போது மனிதன் தனது சாமர்த்தியத்தினால் ஏற்பட்டதாக நினைக்கிறான். தனது சக்திக்கு அப்பாற்பட்டுப் பொல்லாதது விளையும்போது, அதற்குக் காலம், விதி என்ற சொற்களை உபயோகப்படுத்துகிறான். தன் சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஊழ்வினையால் அனைத்தும் ஏற்படுகின்றன என்ற ஞானமோ, எதற்கும் காரணகாரியங்கள் உண்டு என்ற நினைப்போ மனிதனுக்குக் கிடையாது. சில வேளைகளில் தன்னால் எதையும் மாற்றிவிட முடியும் என்ற ஆணவமும் மனிதனுக்கு ஏற்படுகிறது. அப்படித்தான் காஷ்டானனும் நினைத்தான். தன்னுடனும் க்ஷத்ரபனுடனும் வந்திருக்கும் வீரர்களைக் கொண்டு, சித்தரஞ்சனியின் திருமணத்தை எப்படியும் தடுத்துவிடலாம் என்ற தைரியத்தில், 'அவள் என் மனைவி' என்று கூச்சலிடும் துணிவையும் பெற்றான். மனிதன் இஷ்டப்படி சகலமும் நடப்பதானால், காஷ்டானன் தன்னுடன் வந்திருந்த வீரர்களைக் கொண்டும் க்ஷத்ரபன் அழைத்து வந்த வீரர்களைக் கொண்டும் நிலைமையை அடியோடு மாற்றியிருக்கலாம். ஆனால் தெய்வ சித்தம் முற்றும் மாறாக இருக்கவே, கௌதமிபுத்ரனால் சேனாதிபதி என்று அழைக்கப்பட்டவன் கையிலிருந்த பெரிய மணி, காஷ்டானன் தலையில் வேகமாக இறங்கவே, திடீரெனப் பக்திவசப்பட்டவன்போல் காஷ்டானன் தரையில் குப்புற விழுந்து, கர்ப்பக்கிரகத்தை நோக்கி நமஸ்காரம் செய்யும் பாவனையில் செயலற்றுக் கிடந்தான்.

சேனாதிபதியின் இந்தச் செய்கையை அடுத்து க்ஷத்ரபனும் அவனது வீரர்களும் தங்கள் வாட்களை உருவுவதற்கு முன்பாக, சேனாதிபதி ஒரே எட்டில் க்ஷத்ரபனை அடைந்து, அவன் அங்கியைக் கையால் பற்றித் தன்னிடம் இழுத்துக் கொண்டு மணியையும் அவன் தலைக்குமேல் ஓங்கி, "க்ஷத்ரபன் உயிரோடு உங்களுக்குத் தேவையானால் வாட்களைக் கீழே போடுங்கள். பூஜை முடிந்ததும் சண்டையிடத் தேவைக்குமேல் சந்தர்ப்பம் தருகிறேன்" என்ற சேனாதிபதி, க்ஷத்ரபனிடமிருந்த வாளையும் குறுவாளையும் எடுத்துத் தனது கச்சையில் செருகிக் கொண்டான். இந்தத் திடீர் மாற்றத்தால் வாட்களைக் கீழே போட்ட வீரர்களைச் சற்று ஒதுக்குப்புறமாக நிற்கச் சொல்லிவிட்டு அந்த வாட்களைப் பொறுக்கிக் கோவில் திண்ணையில் வைக்கும்படி அந்த வீரர்களில் ஒருவனுக்கு உத்தரவிட்டான்.

காஷ்டானன் தரையில் விழுந்து கிடந்ததாலும் க்ஷத்ரபன் கதியும் அதோகதியாயிருந்தபடியாலும் சாக வீரர்கள் சேனாதிபதி இட்ட பணிகளை ஒழுங்காக நிறைவேற்றவே, தாபிலேசுவரர் கோவிலுக்கு முன்பு அசம்பாவிதம் ஏதும் ஏற்படவில்லை. சேனாதிபதி க்ஷத்ரபனைப் பிடித்த வண்ணமே காஷ்டானனை எழுப்புமாறும் அவனுக்குச் சைத்தியோபசாரங்கள் செய்யுமாறும் அவன் வீரர்களுக்கே உத்தரவிட்டான். அதையொட்டி இரு வீரர்கள் காஷ்டானனை மெதுவாகத் தூக்கி உட்கார வைத்துத் தலையைப் பரிசோதித்து அதில் காயம் ஏதும் ஏற்படாததைப் பார்த்துப் பெரும் வியப்படைந்து, "தலையில் காயம் ஏதுமில்லை" என்று கூறினார்கள் சேனாதிபதியை நோக்கி.


"சுபமான கல்யாணச் சமயத்தில் ரத்தம் சிந்த நான் இஷ்டப்படவில்லை. லேசான அதிர்ச்சியே காஷ்டானனுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தூணில் அவனைச் சாத்தி வையுங்கள்; உள்ளிருந்து அபிஷேக ஜலம் வரும்; அதனால் கண்களைத் துடைத்தால் மாப்பிள்ளைத் தோழன் சுயநினைவு அடைவான்" என்று சொன்னான் சேனாதிபதி.

அந்தச் சமயத்தில் உள்ளிருந்து கௌதமிபுத்ரன் குரல் கொடுத்தான், "வஜ்ரபாகு!" என்று.

"மன்னவா! இங்கு இருவர் சிறைப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் நினைவிழந்து கிடக்கிறார். இவர்களைவிட்டு எப்படி வருவேன்? தாங்களே இங்கு வருவது நல்லது" என்றான் சேனாதிபதி வஜ்ரபாகு.

"அவர்கள் ஆயுதங்களைக் கோயிலுக்குள் வைத்துவிட்டு அவர்களை விடுதலை செய்துவிடு. அவர்களும் இந்தச் சுப முகூர்த்தத்தில் பங்கு கொள்ளட்டும்" என்று கௌதமிபுத்ரன் உள்ளிருந்தே உத்தரவிட சேனாதிபதி க்ஷத்ரபனைத் தனது பிடியிலிருந்து விடுதலை செய்தான். "க்ஷத்ரபரே! நான் விட்டுவிட்டதால் நீங்கள் தப்பிவிடலாமென்று நினைக்க வேண்டாம். நீங்கள் மன்னர் அனுமதியில்லாமல் இந்தத் தாபோல் மலையைக் கடக்க முடியாது" என்று எச்சரித்துவிட்டு, க்ஷத்ரபன் வீரர்களில் ஒருவனை நோக்கி, "அந்த வாட்களை எடுத்துக் கோயிலுக்குள் அடுக்கு" என்று உத்தரவிட்டான்.

சேனாதிபதி வஜ்ரபாகு, கௌதமிபுத்ரன் ஆணைப்படி க்ஷத்ரபன் மீதிருந்த பிடியைத் தளர்த்தினானேயொழிய அவன் பக்கத்திலேயே மணியும் கையுமாக நின்றிருந்ததால்



சேனாதிபதி எந்தச் சமயத்திலும் மணியால் சுத்ரபன் மண்டையை உடைத்துவிடுவா னென்ற அச்சத்தில் எதிரி வீரர்கள் சேனாதி பதியின் சொற்களைக் கட்டளைகளாகவே ஏற்று நடந்து கொண்டனர். உள்ளே சந்நிதியி லிருந்த கௌதமிபுத்ரன் தாபிலேசுவரர் மீது புஷ்பங்களையும் ,வில்வபத்ரங்களையும் இறைத்து வேதகானம் செய்துவிட்டு, முடி வாகத் தீபாராதனையைக் காட்டிவிட்டு வெளியே வந்தபோது, வாயிலில் இருந்த நிலையைக் கவனிக்காமல் தூரத்தே பெண் களும் ஆண்களும் பெருங்கூட்டமாகப் புடை சூழ வந்து கொண்டிருந்த சித்தரஞ்சனி யைக் கவனித்தான்.

மலையின் மனோகரச் சூழ்நிலையில், மர மல்லி மரங்கள் உதிர்த்திருந்த நீண்ட புஷ்பங் கள் விரித்திருந்த நடை பாவாடையில் நடந்து, கதிரவன் கிளம்பி விட்டதால் மரக்கூட்டத் தையும் பிளந்து கொண்டு விழுந்திருந்த கம்பிக் கிரணங்கள் ஆங்காங்கு மேலே விழுந்ததால் புதுப்புதுக் கோடுகள் தவழும் அழகில் புகுந்து, காட்டு மலர்களைக் கொண்டு விட்டு விட்டுத் தொடுக்கப்பட்ட மாலையைக் கழுத்தில் அணிந்து பாதத்திலிருந்து இரண்டு புதுச் சிலம்புகள் ஒலிக்க, இடைதுவள, உடல் அசைய, சித்தினி ஜாதிப் பெண்ணைப் போல் சித்தரஞ்சனி நடந்துவந்த ஒய்யாரத்தில் மதி மயங்கி நின்றான் கௌதமிபுத்ரன்.

அன்று சித்தரஞ்சனி திருமணத்துக் கென்று படாடோபமான புடவை ஏதும் கட்டவில்லை. தங்க ஆபரணங்களையும் காணோம். தலைக் குழலை அவள் கொண்டை யிட்டுப் புஷ்பச்சரங்களால் சுற்றியிருந்த அழகும், கழுத்திலிருந்த மாலை அவள் நடை யில் அசைந்து அசைந்து மார்பு இரண்டையும் தொட்டுக் காட்டிக் காட்டிப் புரண்ட சிங்கார மும், இயற்கையாகவே மைதீட்டியது போலிருந்த கண்களும், நகைகளை அர்த்த மறச் செய்தாலும் காதில் மட்டும் இரண்டு சிறுகுண்டலங்களை அவள் அணிந்திருந்தாள்.

அவள் தாபிலேசுவரர் கோவிலை ஏறெ டுத்துப் பார்க்காமல் தரையை நோக்கியே நடந்து வந்ததால் கோயில் முகப்பிலிருந்த காட்சி எதையும் அவள் கவனிக்கவில்லை. அவளைச் சூழ்ந்து வந்த மங்கையரும் மற்ற ஆண் மக்களும் அந்த மலைவாசிகளைப் போல

தீபாவளி மலர் 1985

* கல்கி தீபாவளி மலர் என்றாலே எப்போதுமே பிரும்மாண்டமான அற்புதக் கலைவிருந்துதான். இந்த வருட தீபாவளி மலரும் சிறப்பிலும் சிறப்பாகப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாக அமைந்து சாதனை படைத்திருக்கிறது.

'பூப் பூவாய்ப் பூத்திருக்கு!,' 'இதிகாச இலக்கிய தூதர்கள்,' 'நேபாளக் காட்சிகள்,' 'ஓவியப் பாணிகள் புதுமையும் புராதனமும்' போன்ற வண்ணப் படத் தொகுப்புகள் மனத்தில் மின்னிக் கொண்டிருக்கின்றன. கல்கிதீபாவளிமலரின் பெருமையைப் பிரதிபலிக்கின்றன.

'கவிதை மடல்,' 'கோகுலம் பக்கங்கள்,' 'மங்கையர் மலர் பக்கங்கள்' போன்ற பகுதிகள் கல்கி தீபாவளி மலரின் சிறப்பை நன்கு உணர்த்துகின்றன.

அருமையான கதைகள், சிந்திக்க வைக்கும் கட்டுரைகள், உண்மையிலேயே சிரிக்க வைக்கும் சிரிப்புகள் என்று கல்கி தீபாவளி மலர் முழுவதும் அட்டகாசமாக அமைந்திருக்கிறது.

மறக்க முடியாத பிரும்மாண்டமான அற்புத கல்கி தீபாவளி மலரை நினைக்கும்போதே ஒரு தனி உற்சாகம் ஏற்படுகிறது.

வடுகவிருட்சியூர். ஆர். அமுதா.

* 'தீபாவளி மலர்' கல்கி A. 1. கதைகள் அருமையிலும் அருமை. வண்ணப்படங்கள் பிளஸ் புகைப் படங்கள் எக்ஸலண்ட். இருபத்தைந்தே ரூபாயில் மனமகிழ்ச்சியையும், நிறைவையும் அளித்த உங்களுக்குப் பாராட்டுக்கள்.

கோவை, உமார்த்தி.

* வணக்கம். தீபாவளி மலர் வாங்கிப் படித்து மகிழ்கிறோம். மிகமிக அழகாக உள்ளது. சுவாமி சின்மயானந்தா பேட்டியின் மொழி பெயர்ப்பு உன்னதமாக உள்ளது. கவிதைகளை ஓவியங்களுடன் சிறப்பித்து வெளியிட்டு உள்ளது, கவிதைக்கும் கவிஞர்கட்கும் சிறப்பு நல்குவதாக உள்ளது.

சென்னை – 15. நெல்லை. ஆ. கணபதி.

இருக்கவே "இவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்?" என்று க்ஷத்ரபன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். மணியடிபட்டு விழுந்த காஷ்டானன் கூட கௌதமிபுத்ரன் தெளித்த அபிஷேக நீரால் சுயநிலை அடைந்தாலும், நடுத்தலையில் எழும்பியிருந்த இடத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டு, தூர வந்த கூட்டத்தைக் கோயில் தூணில் சாய்ந்த வண்ணம் பார்த்துப் பார்த்துப் பொருமிக் கொண்டிருந்தான்.

கூட்டம் மெள்ளக் கோவிலை அணுகியதும் கௌதமிபுத்ரன் சேனாதிபதியை நோக்கி, "க்ஷத்ரபருக்கும் காஷ்டானனுக்கும் அபிஷேகதீர்த்தத்தைக் கொடும்; உள்ளே வெள்ளி வட்டிலில் வைத்திருக்கிறேன்" என்று கூறி விட்டுப் பட்டு வேஷ்டியும் உத்தரீயமுமாக வெளியே வந்து நின்றுகொண்டான். அப்பொழுது க்ஷத்ரபனைப் பார்த்து, "க்ஷத்ரபரே! அதோ வரும் கூட்டம் இந்த மலையிலிருந்த சிறு கிராமங்களைச் சேர்ந்தவர்களில் ஒரு சிறு பகுதி. சிறிது சிறிதாக இந்த மலைக் கிராமங்களுக்கு மக்கள் மீண்டும் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னான்.

க்ஷத்ரபன் முகத்தில் திகில் படர்ந்தது. "அப்படியானால் பிசாசு..." என்று ஏதோ துவங்கினான் க்ஷத்ரபன்.

அதற்குத்தான் இரண்டு நாட்களாக சண்டி ஹோமம் நடக்கிறது. அதோ பாருங்கள் சண்டி குகைப் பக்கத்திலிருந்து ஹோமப் புகை ஆகாயமளாவிச் செல்கிறது" என்று தூரத்தே சுட்டிக் காட்டினான் சேனாதிபதி.

தூரத்தே எழுந்த பெரும்புகையைக் கவனித்த க்ஷத்ரபன் மகாக்ஷத்ரபனின் தந்திரத்தைக் கௌதமிபுத்ரன் உடைத்துவிட்டதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். சித்தரஞ்சனியைச் சூழ்ந்து வந்த பெண்கள் மலைவாசிகளாதலால் தலையிலும் கழுத்திலும் மாலைகளை அணிந்திருந்தார்கள். மலை ஜாதிகள் திருமணச் சமயங்களில் பாடும் பாட்டையே பாடிக் கொண்டும் வந்தார்கள். அந்தப் பாட்டின் கடுமையிலும் ஒரு சுகமிருந்தது. அவர்கள் கைகளில் போட்ட தாளங்களிலும் லயசுத்தமிருந்தது. ஆடியது பெண்கள் மட்டுமல்ல, பின்னால் வந்த ஆண்களும் ஆடிக் கொண்டு வந்தார்கள்.

அவர்கள் உற்சாகத்தைக் கண்ட க்ஷத்ரபன் அந்தத் திருமணத்தை எப்படியும் தடுக்க வேண்டுமென்று உறுதி கொண்டானானாலும் வழி தெரியாமல் திருதிருவென்று விழித்தான். காஷ்டானனுக்கு மயக்கம் நன்றாகத் தெளிந்து விட்டதால் அவனும் எழுந்து நின்று கொண்டான். அந்தக் கோவிலை அணுகும் வரையில் நிலத்தை நோக்கி நடந்து வந்த சித்தரஞ்சனி வாயிலை அடைந்ததும் தலையை நிமிர்ந்து நோக்கிப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானாள். தனது வளர்ப்புத் தந்தையும் தன்னை அடைய மனக்கோட்டை கட்டிய காஷ்டானனும் வாயிலின் இருபுறங்களிலும் நின்றதைக் கண்டு அதிர்ச்சியடைந்தாலும், அவர்கள் இருவருக்கும் மத்தியில் கௌதமிபுத்ரன் வாயிற்படியைத் தலையால் தொட்டு விடுபவன்போல் நின்றிருந்ததைக் கவனித்ததும் அதிர்ச்சியை உதறிக் கொண்டு தாபிலேசுவரர் கோயில் வாசலை நோக்கி நடந்தாள். அவளைச் சூழ்ந்து வந்தவர்களும் கோயில் முன்பாகப் பரவலாக நின்றார்கள்.

"தேவி! இங்கு உன்னை யாரும் தடுக்க முடியாது. படிகளில் ஏறி வா" என்றான் கௌதமிபுத்ரன்.

"சித்தரஞ்சனி! படியில் காலை வைக்காதே. உன் தந்தை உத்தரவிடுகிறேன்" என்றான், க்ஷத்ரபன்.

"இவனை நீ மணந்தால் மகாக்ஷத்ரபர் உன்னை லேசில் விட மாட்டார்" என்று எச்சரித்தான், காஷ்டானன்.

இவற்றால் சிறிது சஞ்சலப்பட்ட சித்தரஞ்சனி என்ன செய்வதென்று அறியாமல் நின்ற இடத்திலேயே நின்று தனது மான் விழிகளை நாற்புறமும் செலுத்தினாள். அவளுக்குத் துணிவை அளிக்கக் கௌதமிபுத்ரனே படிகளில் இறங்கி வந்து, அவள்

கையைப் பிடித்து. "சித்ரஞ்சனி! அஞ்சுவ தற்கு ஏதுமில்லை. வா உள்ளே" என்று அழைத்துச் செல்ல முயன்றான்.

அவள் இரண்டாவது படியில் காலை வைக்குமுன்பு. "கௌதமிபுத்ரா! இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தாலும் பிணமாகி விடுவாய். மணக்கோலம் பிணக்கோலமாகி விடும்" என்று எச்சரிக்கைக் குரலொன்று ஒலித்தது.

அதைத் தொடர்ந்து கோயிலின் பக்கத்திலிருந்து வெளியே வந்த நாகபாணன் தனது கையிலிருந்த குறுவாளைக் கௌதமிபுத்ரன் இதயத்தை நோக்கிக் குறி வைத்திருந்தான். அடுத்து கோவிலுக்குப் பின்னாலிருந்தும் முன்னாலிருந்த மரங்களின் மறைவிலிருந்தும் விற்களில் வாளிகளைப் பூட்டிய ஐம்பது வீரர்கள் தோன்றினார்கள்.

நாகபாணனின் எச்சரிக்கைக் குரலைக்கேட்டதுமே சித்ரஞ்சனி துடித்துப் போனாள். அதிர்ச்சியும் அச்சமும் காரணமாகத் தன்னியல்பாகக் கௌதமிபுத்திரனை அணைத்தாள். அவனோ நிலைமையின் ஆபத்தை உணர்ந்திருந்த போதிலும் சித்ரஞ்சனியின் ஆலிங்கனத்தால் சிறிதளவு சிலிர்த்துப் புன்முறுவலும் செய்தான்.

நாகபாணன் கௌதமிபுத்ரன் மீது வைத்த கண்களை வாங்காமலே கூறினான்: "புனிதமான இந்த ஆலயத்துக்கு முன்பாக ரத்தம் சிந்த நான் விரும்பவில்லை. ஆகையால் எந்த நடவடிக்கையிலும் இறங்க வேண்டாம்" என்று. அத்துடன் வீரர்களை நோக்கி, "உங்கள் வாட்களை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அதட்ட வீரர்கள் கோயிலுக்குள் புகுந்து தங்கள் வாட்களை ஏந்தி வந்தார்கள்.

நாகபாணன் அடுத்து உத்தரவிட்டான்: "சித்ரஞ்சனி! பேசாமல் கோட்டைக்குத் திரும்பு. இன்று உனக்குத் திருமணம் நிச்சயமாக நடக்கும். நான் தேர்ந்தெடுத்திருக்கிற மாப்பிள்ளைக்கு" என்று.

நாகபாணன் வில்லவர்கள் கணைகளைப் பூட்டி நிற்க, க்ஷத்ரபனும் காஷ்டானனும் மற்ற வீரர்களுடன் வாட்களை ஏந்திப் போருக்குச் சித்தமாக, மெள்ள அந்தக் கூட்டம் கோயிலை நெருங்கியது. சில நிமிடங்களில் திருமணக் கூட்டம் ஒருபுறமாக ஒதுக்கப்பட்டது. சித்ரஞ்சனியின் கையை கௌதமிபுத்ரன் கையிலிருந்து பிரிக்க நெருங்கிய க்ஷத்ரபன் அவள் கையைப்பிடித்துப் பலவந்தமாக இழுக்க முயன்றான்.

"க்ஷத்ரபா! சாதவாகனனையும் அவன் சேனாதிபதியையும் நமது மரக்கலத்தில் ஏற்றி விடு. மற்றவர்கள் கோட்டைக்கு வரட்டும்" என்று உத்தரவிட்டுத் திரும்பினான் நாகபாணன். போருக்கு நன்றாகப் பழக்கப்பட்ட ஐம்பது வீரர்களுக்கு முன்பாக மலைஜாதி மக்கள் ஏதும் செய்ய முடியாதென்பதையும், தான் எடுக்கும் எந்த நடவடிக்கையும் வீண் ரத்தக் களரியாக முடியுமென்பதையும் கௌதமிபுத்ரனும் உணர்ந்து கொண்டதால் எந்தச் செயலிலும் இறங்காமல் நின்றான்.

(தொடரும்)

அருள் வாக்கு




ஒரு ஆயுள் காலஷேமிப்பும் போதாமல் கடன் கஸ்தி வாங்கித்தான் கல்யாணம் பண்ண வேண்டும் என்ற நிலையில் அநேகக் குடும்பங்களை வைத்திருக்கிறவரையில் நமக்கு மற்ற பரோபகாரத் தொண்டுகள், ஜீவாத்ம கைங்கர்யங்களைப் பற்றிப் பேசவே லாயக்கில்லை என்று தோன்றுகிறது.

வெயில் காலத்தில் விசிறி, குடை தானம்; குளிர் காலத்தில் கம்பளி தானம், பஞ்சக் காலத்தில் அன்ன தானம் என்றெல்லாம் சாஸ்திரங்களில் சிறப்பித்துச் சொல்லியிருக்கிற எல்லா தானங்களையும்விட 'வரதக்ஷிணை' என்று அதிகாரப் பிச்சையாக தானம் வாங்குவதை நிறுத்துவதுதான் பெரிய தானம் என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றதெல்லாம் ஒரு பீரியட்டுக்குக் (காலகட்டத்துக்கு) மட்டும்தான் பயனாவது. வரதக்ஷிணையோ, இன்றைக்கு ஒருத்தனுடைய வாழ்நாள் முழுவதையும் (பெண்ணைப் பெற்றவனைத்தான் சொல்கிறேன்.) பாதிப்பதோடு, எதிர்காலம் பூராவுக்கும் நம்முடைய சாஸ்திரீயமான வாழ்க்கை முறையையும் சாச்வதமான ஸ்த்ரீ தர்மத்தையும் பாதிப்பதாக இருக்கிறது. ஆனபடியால் வரதக்ஷிணை வாங்காமலிருப்பது நிரந்தர தர்மதானம் என்று சொல்லலாம்.

ஒரு பக்கம் ஆடம்பரக் கல்யாணம், இன்னொரு பக்கம் கல்யாணத்துக்குப் பணமில்லை என்பதால் பெண்களை வேலைக்கு விடுவது, கடன்படுவது என்கிற மாதிரிக் கஷ்டம் ஏற்பட விட்டிருப்பது கொஞ்சங்கூட நியாயமில்லை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.


MONEY HAS ALWAYS TALKED.
At KCUB, we make it sing, in tune!
KCUB
Yes. Our bank has an enviable record of growth and stability. We bring into play our knowledge of rich banking experience and customer service, perfectly tuned to your needs.
To our clients, our monthly statements are music to their ears. Our finely tuned financial and technical expertise leaves them with just one thing to say—"Encore!"
KCUB-your soundest choice today!
KCUB
KCUB
THE KUMBAKONAM
CITY UNION BANK LTD.,
Registered Office: Kumbakonam-612 001

MCS 130



இண்டர்வியூ அனுபவம்

யானைக்கொரு காலம் வந்தால்...

மருந்து கம்பெனிப் பிரதிநிதி வேலைக்காக மனுச் செய்திருந்த என் சகோதரரை இண்டர்வியூவின் போது ஒருவர் கேள்விகளால் குடைந்து எடுத்து விட்டார். அந்த வேலையும் கிடைக்கவில்லை. சீக்கிரமே மற்றொரு பிரபல கம்பெனியின் உயர் அதிகாரி ஆனார் என் சகோதரர். சில வருடங்கள் கழித்து அவர் நடத்திய இண்டர்வியூவுக்கு வந்து நின்றவர்... வேறு யாருமில்லை... முதல் இண்டர்வியூவின் போது கேள்விகளால் என் சகோதரரைக் குடைந்தெடுத்த அதே நபர்தான்! இப்போது அவர் என் சகோதரரின் கீழ் வேலை பார்க்கும் ஓர் அதிகாரி.

பா. வாசுதேவன், வேலூர்.

பொறுப்பு வேண்டாமா?

மதுரையில் ஒரு கல்லூரிக்கு நேர்முகத் தேர்வுக்கெனச் சென்றேன். கல்லூரி முதல்வர் என் பேனாவை இரவல் வாங்கிக் கொண்டார். 'ஒரு முதல்வரிடம் போய் பேனாவைத் திருப்பிக் கேட்பதா?' என்று கூச்சப்பட்டுக் கொண்டு தேர்வு முடிந்ததும் வாசல் வரை வந்துவிட்டேன். முதல்வரோ என்னைக் கூப்பிட்டு 'நானே உன்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தால் இப்படித்தான் நடந்து கொள்வாயா?' என்று கேட்டுவிட்டார். தர்மசங்கடமாகப் போய்விட்டது.

எஸ். இங்கர்சால், ஈரோடு—11.

எனக்கே தெரியாமல் இண்டர்வியூ

காலை பதினொரு மணி இண்டர்வியூவுக்கு பத்து மணிக்கே போய் உட்கார்ந்து கொண்டேன். தாடி மீசையுடன் ஒருவர் வந்து அலுவலக மேஜை, நாற்காலிகளை தூசி தட்டிச் சீர் செய்தார். 'இண்டர்வியூவுக்கு வந்திருக்கிறீர்களா?' என்று கேட்டுவிட்டு ஆங்கிலத்தில் சில கேள்விகளையும் கேட்டார். நான் அவரை ஆபீஸ் சிப்பந்தி என்று நினைத்துக் கொண்டு ரொம்ப சகஜமாக தமிழிலேயே பதில் சொன்னேன். இரண்டு நாட்கள் கழித்துத் தகவல் அனுப்புகிறோம்'' என்று அவர் சொன்னதும்தான் அதுவரை நடந்தது இண்டர்வியூ என்று எனக்கு உறைத்தது. அந்த வேலை கிடைத்துச் சேர்ந்ததும் தெரிந்தது அவர்தான் முதலாளி என்று!

ஏ. ஜனனி, விழுப்புரம்.

தெரியாமல் போனால் என்ன?

ஒரு தேர்வுக் குழுவின் அங்கத்தினனாக நான் இருந்த போது, தலைமை இன்ஜினியர் ஒருவர் குமாஸ்தா தேர்வுக்கு வந்த ஒருவரிடம் 'அணுச் சேர்க்கைக்கும் அணு பிளப்பதற்கும் என்ன வித்தியாசம்?' என்று கேள்வி கேட்டார். ''எனக்கே இந்தக் கேள்விக்குப் பதில் தெரியாதே'' என்று நான் சொல்லவும், ''எனக்குக் கூடத்தான் தெரியாது சார். ஆனால், நாம் கேள்வி கேட்பவர்கள்; அனுகூலமான நிலையில் இருக்கிறோம்'' என்றாரே பார்க்கலாம்!

ஜி. பார்த்தசாரதி, சேலம்.

தேர்வுக் குழுவைச் சிரிக்க வைத்தேன்

மருத்துவக் கல்லூரி இண்டர்வியூவில், 'நீங்கள் மருத்துவம் படிக்க விரும்புவது ஏன்?' என்று என்னைக் கேட்டார்கள். நானும் 'நமது நாட்டின் ஜனத்தொகையைக் குறைக்கத் தான்' என்று ஆங்காரமாய் பதில் சொன்



னதும் தேர்வுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் 'கொல்' என்று சிரித்துவிட்டார்கள். என் தவறை உணர்ந்து அவசர அவசரமாக விளக்கினேன், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை எளிதாக்கி மக்களிடையே பிரபலப்படுத்த விரும்புகிறேன் என்று. மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது.

நா. வே. அரங்கன், திருநெல்வேலி.

சுட்டித்தனத்துக்குக் கிடைத்த இடம்

நர்ஸரி பள்ளியில் சேர வரும் குழந்தைகளிடம் பொதுவான கேள்விகள் சிலவற்றைக் கேட்போம். லதா என்ற ஒரு குழந்தையிடம் உடல் உறுப்புக்களைக் காண்பித்துக் கேட்டபோது ஆங்கிலத்திலும் தமிழிலுமாகப் பதில் சொல்லிக் கொண்டு வந்தாள். நான் ஏதோ ஞாபகத்தில் பேனாவின் பின்புறத்தால் புருவத்தை லேசாகச் சொறிந்ததும் அவள், "அது கண்ணுக்கு மீசை" என்று சுட்டித்தனமாகப் பதில் சொன்னாள். மேலும் மரத்தூளுக்கிடையே கிடந்த சாக்பீஸ்களைப் பார்த்துவிட்டு "இப்படி மண்ணில் போட்டாலே வளருமா? தண்ணீர் ஊற்ற வேண்டாமா?" என்று கேட்டாள். அவளுடைய தயக்கமின்மையாலும் சூடிகையாலும் கவரப்பட்டு உடனே பள்ளியில் இடம் கொடுத்தோம்.

ஜி. லலிதா, பொள்ளாச்சி.

எது தியாகம்

நான் சென்ற இண்டர்வியூவுக்கு மிகுந்த ஏழ்மை நிலையில் இருந்த பெண் ஒருத்தி வந்திருக்கக் கண்டு, அவளுடன் போட்டியிட மனமின்றி வந்துவிட்டேன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு அந்தப் பெண்ணைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவளுக்கு அந்த வேலை கிடைத்ததா என்று விசாரித்த போது, அவள் சொன்ன பதில் என்னை அசத்திவிட்டது!

ஊனமுற்ற ஒருவர் இண்டர்வியூவுக்கு வந்ததால் அவருக்காகத் தன் இடத்தை விட்டுக் கொடுத்துவிட்டு வந்துவிட்டாளாம் அப்பெண். அவரோ தனக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த அந்தப் பெண்ணை மணந்து கொண்டு, அவளையும் அவள் குடும்பத்தையும் காப்பாற்றும் பொறுப்பையே ஏற்றுக் கொண்டுவிட்டாராம்!

எம். ராஜேந்திரன், மேட்டூர் அணை.





பாடினேன் ஒரு பாட்டு!

அதிகாலையிலேயே ஆசிரியர் பயிற்சியில் சேர இண்டர்வியூவுக்கு அழைத்துவிட்டார்கள். ஆனால் இரவு எட்டு மணிக்குத்தான் உள்ளே கூப்பிட்டுக் கேள்வி கேட்டார்கள்! அலுத்து, சலித்துப் போயிருந்த சமயத்தில், 'ஒரு பாட்டுப் பாடு' என்று தேர்வுக் குழுவினர் கேட்கவும் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் 'நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட மாந்தரை' என்று பாடிவிட்டேன். பயிற்சியில் சேரச் சொல்லிக் கடிதம் வந்ததும் எனக்கு ஒரே ஆச்சரியமாகிவிட்டது.

எஸ். பாலசுந்தரம், திருவிடைமருதூர்.

புதிர் போட்டார்கள்!

சென்னை மவுண்ட் ரோடில் ஓர் அலுவலகத்திற்குச் சென்றேன். இண்டர்வியூவில் கீழே உள்ளது போல் மூன்று வட்டங்களை வரைந்து, இரு கோடுகள் மட்டும் போட்டு இதை நாயாக மாற்று என்றார்கள்:

0 0 0


விடை தெரியாமல் விழித்துவிட்டு வெளியே வந்ததும்தான் தெரிந்தது; விடை **'dog'** என்று!

ஆர். மகாலட்சுமி, செங்கற்பட்டு.

இன்னும் நடக்கவில்லை!

கடந்த செப்டம்பர் இரண்டாம் தேதி இந்து அறநிலைய ஆட்சித் துறையின் கண்காணிப்பில் உள்ள பள்ளி ஒன்றில் அறிவியல் ஆசிரியர் பதவிக்கான நேர்முகத் தேர்வுக்குப் போனேன். இரண்டு மணிக்கு நடைபெற வேண்டிய தேர்வு ஐந்து மணி வரை ஆரம்பிக்கக் கூட இல்லை. சாவகாசமாக, 'இண்டர்வியூ இன்று இல்லை' என்று அறிவித்தார்கள். மாற்றுத் தேதி அறிவிப்பு இன்னும் வரப் போகிறது! அந்த வயிற்றெரிச்சலை என்னவென்று சொல்ல!

க. வித்யா, சித்தமல்லி.



விளையாட்டாய்ச் சொல்லப் போக...

இறுதியாண்டு எம். ஏ. படித்துக் கொண்டிருந்த போது பிரபல கம்ப்யூட்டர் நிறுவனம் ஒன்று கல்லூரியிலேயே சிறந்த மாணவர்களிடையே இண்டர்வியூ நடத்தியது. கம்பெனி நிர்வாகி 'ஜாலி'யான பேர்வழி. என்னிடம் வேலை சம்பந்தமான கேள்விகள் கேட்டுவிட்டு, ''நீ யாரைக் காதலிக்கிறாய்?'' என்று சம்பந்தமே இல்லாமல் திடீரென்று கேட்டுவிட்டார். நானும் விடவில்லை. ''உங்கள் பெண் சந்திராவைத்தான் காதலிக்கிறேன்!'' என்றேன். அவர் இன்று என் 'மாமனார் கம் முதலாளி!'

சி. ஜெயபாலன், பரோடா.

கல்யாணம் நடக்க கவர்ன்மெண்ட் வேலை

ஒரு முறை இண்டர்வியூவில் உதவியாளராக இருக்க நேர்ந்தபோது, நான் வழக்கமாகச் சாப்பிட்டு வந்த ஓட்டலை நடத்தியவர் இண்டர்வியூவுக்கு வந்தார். நல்ல வருமானம் தரும் தொழிலைச் செய்து கொண்டு ஏன் வேறு வேலைக்கு அலைய வேண்டும் என்று அவரை நான் கேட்டேன். அதற்கு அவர், ''அரசாங்க உத்தியோகம் இல்லாததால் எனக்கு யாரும் பெண் தரமாட்டேன் என்கிறார்கள்'' என்றார். ஒரே சிரிப்பு மயம்.

சி. டி. ராமகிருஷ்ணன், ஆத்தூர்.

எதிர்பாராத விளைவுகள்

ஓய்வுபெற்ற ஆசிரியரான நான், சிறு கம்பெனி ஒன்றில் கணக்கெழுதும் வேலையில் சேர இண்டர்வியூவுக்குச் சென்றேன். பேட்டி கண்ட இளைஞன் ''கண்டக்கா பசங்களுக்கு வெண்டக்கா விராப்பு'' என்றால் என்ன? என்று கேட்டான். இந்த வார்த்தைகள் நான் கோபம் வரும்போது உபயோகித்து என் மாணவர்களிடையே பிரபலமாகிவிட்டவை. சற்று யோசித்து அந்த இளைஞனை அடையாளம் கண்டு கொண்டேன்; சில வருடங்களுக்கு முன் ஸ்ட்ரைக், செய்ததற்காக அவனை வெளியே அனுப்ப நானும் காரணமாக இருந்தது நினைவு வந்தது. நான் உடனே எழுந்து வெளியேற முயன்ற போது அவன், ''ஐயா! அன்று நீங்கள் என்னைப் பள்ளியிலிருந்து நீக்கியதால் தான் வைராக்கியத்துடன் வியாபாரம் செய்து முன்னேறியுள்ளேன். இப்போதும் நீங்கள் என்னுடன் இருந்து வழிகாட்ட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

மு. மாடசாமி, ஏனாதி.

தொழிலும் பொழுதுபோக்கும்

ரயில்வே டிக்கெட் பரிசோதகர் வேலைக்கு இண்டர்வியூ. வந்தவர்கள் எல்லோரிடமும் முதலில் ஒரே கேள்வி கேட்கப்பட்டது. 'உன் பொழுது போக்கு என்ன?' அதைத் தொடர்ந்து, அந்தப் பொழுது போக்குச் சம்பந்தமாகவே இதர கேள்விகளைக் கேட்டார்கள். நான் 'என் பொழுது போக்குச் சமையல்,' என்று சொன்னதும், 'ஏன், நீங்கள் கேடரிங் டெக்னலஜி படித்து ஐந்து நட்சத்திர ஓட்டலில் வேலை பார்க்கலாமே!'' என்றார்கள். உடனே நான் ''சமையல் என் பொழுது போக்குத்தான். அதையே நான் தொழிலாக்கிக் கொள்ள விரும்பவில்லை'' என்றேன். இந்தச் சுவையான நிகழ்ச்சி எனக்குத் தென்னக ரயில்வேயில் டிக்கெட் பரிசோதகர் வேலையைப் பெற்றுத் தந்தது.

என். பாலாஜி வில்வநாதன்,
திருப்பாப்புலியூர்.

கழுதை கத்தியதால்...

1963 ஆம் ஆண்டு ராஜபாளையத்தில் புதிதாகத் துவங்கப்பட்ட பாலிடெக்னிக்குக்கு முதல் மாணவனாக இண்டர்வியூவுக்குப் போனேன். முதல்வர் வந்து என்னைக் கூப்பிடவும் வெளியே ஒரு கழுதை கத்தவும் சரியாக இருந்தது. நேர்முகத் தேர்வில் முதல் கேள்வியாக, ''கழுதைகத்தினால்நல்லசகுனம் இல்லையா?'' என்று கேட்டார் முதல்வர். நானும் தைரியமாக, ''அந்தப் பலனில் எனக்கும் பங்கு உண்டு என்று நினைக்கிறேன்'' என்றேன். சிரித்துக் கொண்டே அட்மிஷன் கொடுத்துவிட்டார் முதல்வர்.

எஸ். நாராயணன், பம்பாய்-71.

பூனோப்ளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

எம். ராஜேந்திரன்,
JA/TNEB, Workshops,
மேட்டூர் அணை,
636 401.



சொர்க்கத்தின்

4

கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார் சுவாமிநாதன். விமலா விழித்துக் கொண்டிருந்தாள். படுக்கை விரிப்பும், உடையும் மாற்றப்பட்டிருந்தன. நெற்றியில் குங்குமப் பொட்டு பளிச்சிட்டது.

''ஹேப்பி தீபாவளி!'' மெல்லிய குரலில் சொன்னவள் முகத்தில் புன்னகை ஒளி.

''நம் இருவருக்குமே ஹேப்பி தீபாவளி. இந்த மட்டும் கண்திறந்து பாத்துப் பேசறியே. அதுவே போறும்.'' மெல்லச் சிரித்தார். அவளது மெலிந்த வலது கரத்தைத் தொட்டார். இடது கரத்துப் புறங்கையில் 'டிரிப்' ஓடிக் கொண்டிருந்தது.

''கை மடக்கில குத்திப் பார்த்தா, ரத்தக் குழாய் கிடைக்கலையாம். அதனால மணிக் கட்டு மேலே 'டிரிப்' வச்சுட்டா, வலிக்கறது'' மெல்ல முனகினாள்.

இந்தச் சில நாட்களில் அவள் உடலை எத்தனை தடவை ஊசியால் துளைத்து விட்டார்கள். உள்ளூர அனுதாபப்பட்டார்.

''ஆமாம். அருணா வந்தாளோ! எனக்கு ஒண்ணுமே தெரியாது.''

''நீ மயக்கமாகக் கிடக்கறச்சே வந்தா.'' தாடை இறுகிற்று அவருக்கு.

''பாவம்! தீபாவளி மும்முரத்திலே என்னைப் பார்க்க ஓடி வந்திருக்காளே.''

''ஆமா பாவம்! ரொம்ப பிஸி. அப்படி இருந்தும் உன்னைப் பார்க்க வந்தா...'' பற்களை அழுத்திக் கடித்துக் கொண்டார். ஒரகத்திக்கு எத்தனை அன்பு என்ற உண்மை பிறகு தெரியட்டும்.

கண்ணாடிக் கதவு 'பரக்'கென்று திறக்கும் ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தார். அந்த இளைய டாக்டர் வழக்கம் போல மூச்சிரைக்க உள்ளே வந்து நின்றான். ''சீஃப் ரவுண்ட்ல இருக்கார். நின்னு நிதானிச்சுப் பேச முடியாது. நான் அவர் கூடப் போகணும். இவங்களை வந்து பாத்திட்டுச் சில புது மருந்துகளைக் கொடுத்திருக்கார். வாங்கிண்டு வந்து வச்சிடுங்க. நான் சாயந்திரம் வந்து கவனிச்சுக் கொள்றேன்.''

''இதெல்லாம் இப்ப உடனே தேவையா டாக்டர்?'' ஆத்திரத்தை அடக்கியபடி கேட்டார். விமலாவை அனுமதித்த அன்றைய தினம், அதே இளைய டாக்டர், மளிகைக் கடை ஜாபிதா போன்ற ஒரு மருந்துப் பட்டியலை நீட்டியதை மறக்க முடியுமா? மருத்துவமனையை ஒட்டிநின்ற மருந்துக் கடையில் அன்று எழுநூறு ரூபாய்களுக்கு மருந்து வாங்கியது இன்னம் நினைவில் பயமுறுத்தியது. இப்போது மீண்டும்-ஒரு நீண்ட பட்டியலா? அரண்டு போனார் அவர்.

''ஆமா... இதெல்லாம் சுமாரா எவ்வளவு ஆகும்?''

ஏளனமாக அவரை நிமிர்ந்து பார்த்தான் அந்த இளைஞன். அவன் பணக்கார ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கிறவன். ஐயாயிரம் பத்தாயிரமே அவனுக்குத் தூசி! ''முந்நூறு ரூபாய்தான் ஆகும்.'' அசட்டையாகச் சிரித்தான்.

எச்சிலை விழுங்கிக் கொண்டார். ''சரி, வாங்கி வைக்கிறேன்'' என்று முனகினார்.

''இவைகள், இங்கே உள்ள கடையில கிடைக்காது. அண்ணாசாலையில, பெரிய மருந்துக் கடைகளிலே கிடைக்கலாம். தேடிப் பார்த்து வாங்குங்க. இப்ப புறப்பட்டுப் போனீங்கன்னா, சாயங்காலம் இந்த அம்மாவுக்கு அந்த மருந்துகளைக் குடுக்கச் சரியாக இருக்கும்.'' ஸ்டெத ஸ்கோப்பைக் கையில்



கதவுகள்

லக்ஷ்மி

சுழற்றியபடி அவன் நடையைக் கட்டினான்.

சுவாமிநாதனுக்கு விரோதிகள் என்று குறிப்பிடத்தக்கதாக எவருமே கிடையாது. அவர் மிகச் சாதுவான மனிதர். விமலாவை அந்த நர்ஸிங் ஹோமில் அனுமதித்த பிறகு அந்த இளம் டாக்டர் பரம விரோதியாகக் காட்சி தந்தான்!


அவர் தம் பைக்குள் இருந்த காகித உறையை எடுத்துப் பார்த்தார். கையிருப்பாக அதில் இருநூறு ரூபாயும் சொச்சமும்தான் மிச்சம். மேற்கொண்டு பணத்திற்கு என்ன செய்வது?

''பணத்திற்கு என்ன செய்யப் போறேன்?'' விமலா கவலையோடு வினவினாள்.

''உனக்கேன் இதெல்லாம்? என்கிட்டப் பணம் இருக்கு. நான் பார்த்துக்கறேன். பத்து நிமிஷத்தில் வரேன்'' என்று கூறியபடி வெளி வராந்தாவிற்கு வந்தார்.

காக்கிச் சீருடை அணிந்த மருத்துவமனைப் பணியாள், வேகமாக அவரிடம் வந்து, ஒரு காகித உறையை நீட்டினான். பிரித்துப் பார்த்தவர் உறைந்து போனார்.

விமலாவின் ரத்தப் பரிசோதனைக்கான 'பில்,' முந்நூற்று ஐம்பது என்ற கணக்கு. அன்று மாலைக்குள் அந்தப் பணத்தை மருத்துவமனைக் கணக்கரிடம் கட்டிவிட வேண்



டும் என்று கூறிவிட்டுச் சிருடை நகர்ந்தது. இப்போது அவர் முதல் வேலையாக ஒரு ஆயிரமாவது புரட்ட வேண்டும்.

வீட்டுக்கார அம்மாளிடம் கடன் கேட்பது முடியாத காரியம். ஏற்கெனவே ஆஸ்பத்திரி பில்லே முன் பணமாகக் கட்டிக் கடன் உதவி செய்திருக்கிருள். என்ன செய்யலாம்?

அருணுவிற்கு 'போன்' செய்தால்...? ஊஹூம். கூடாது. இல்லே என்று அவள் கூறிவிட்டால் மானம் போய்விடும். அவருக்குச் சட்டென்று நினைப்பு வந்தது.

விமலாவை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுமுன் அவளது கைவளையல்கள், கழுத்துச் சங்கிலி, தோடு, மூக்குத்தி எல்லாவற்றையும் கழற்றி வீட்டுக்கார அம்மாள் அவரிடம் கொடுத்து விட்டிருந்தாள். அவைகளே அவர் தங்கள் வீட்டு இரும்பு பீரோவில் வைத்திருந்தார். பின்னர் தெரிந்து கொண்டால் விமலா மனத்தாங்கல் படமாட்டாள். அவர் தம்பி கல்யாணத்தின் போது பணத்தட்டுப்பாடு ஏற்பட்ட சமயம். விமலா தானே. தன் கழுத்துச் சங்கிலியை விற்று நிலேமையைச் சமாளித்தாள். அப்போது பவுன் விலே இத்தனே அதிகமல்ல. ஆனாலும் அதை இப்போது திருப்பி வாங்கிப் போட அவருக்குச் சக்தி இருக்கவில்லே.

விமலா மீதிருந்த நகைகள் அனேத்தும் பிறந்த வீட்டுச் சொத்து. கல்யாணத்திற்காக வீண் செலவு செய்ய உதவிய நகை இப்போது அவளது உயிருக்காக உதவினுல் என்ன? விமலா கட்டாயம் புரிந்து கொள்வாள். அவளது கைவளையல்கள் கனமானவை. பத்தாயிரமாவது தேறும். அதற்கு மேல் தேவைப்பட்டால் கழுத்துச் சங்கிலி இருக்கவே இருக்கிறது. இன்னும் தேவைப்பட்டால் அவள் கொணர்ந்த வெள்ளிப் பாத்திரங்கள் இருக்கவே இருக்கின்றன. யோசித்தபடி கிளம்பினுர்.

விடியலுக்கு முன் எழுந்துவிட்ட அயர்ச்சி. சம்பிரதாயமான விருந்தின் களேப்பு. வீட்டுக்கார அம்மாள் நன்ருகவே உறங்கிக் கொண்டிருந்தாள். காலேயில் பட்டாஸ் வெடியில் அமளிதுமளிப்பட்டுக் கொண்டிருந்த வீடு அமைதியில் ஆழ்ந்திருந்தது. அவர் சப்தமிடாது அவுட் ஹவுஸின் கதவைத் திறந்தார்.

வேலேக்கார வள்ளி, வீட்டைச் சுத்தமாகப் பெருக்கித் துடைத்துவிட்டு, அவரது துணிகளேத் துவைத்துக் காய வைத்துவிட்டுப் போயிருந்தாள்.

பீரோவைத் திறந்து கைவளையல்களே எடுத்து ஒரு பிளாஸ்டிக் உறைக்குள் போட்டுத் தமது பைக்குள் பத்திரப்படுத்தினுர். பஸ்ஸிற்குக் காத்திருக்கப் பொறுமையின்றி, ஒரு ஆட்டோவைப் பிடித்து அண்ணுசாலேயை அடைந்தார்.

அங்கிருந்த பிரபலமான ஷாப்பிங் சென்டரில் உள்ள நகைக் கடையில் நுழைய முயன்றவர் சட்டென நின்ருர். பழக்கமான குரல் அவரை ஒருகணம் திரும்பிப் பார்க்கச் செய்தது.

அடுத்தகடைப்பக்கம் அருணு! அவர் பார்த்ததைவிட இப்போது இன்னும் தடித்து, பளபளக்கும் புடவையில் நின்றிருந்தாள். நெஞ்சம் படபடக்க முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டார். அவளேச் சுற்றிலும் ஒரு பெண்கள் கூட்டம்.

விமலாவின் பெயர் அடிபடவே, அவர் தம்மை முற்றிலும் மறைத்தபடி காதுகளேக் கூர்மையாக்கினுர்.

''உன் ஓரகத்தி விமலாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாகி ஆஸ்பத்திரியிலு அட்மிட் செய்திருக்கிருர்களாமே?'' ஒருத்தி கேட்டாள்.

''ஆமாம். தீபாவளி பண்டிகையும் அதுவுமா. நான் ரொம்பப் பயந்தே போயிட்டேன்.''

''நீ போய்ப் பாத்தியா?''

''எங்க நேரம் இருக்கு? அவசரமா ரெண்டு மைசூர் சில்க் வாங்கி, நாளேக்கி பம்பாய் கிளம்பற சிநேகிதாகிட்ட குடுக்கணும். அவா ரெண்டு நாளிலே, அமெரிக்கா போரு. ஐஸ்வர்யாகிட்ட குடுத்துடுவா தீபாவளிக்குப் புடவை வாங்கி அனுப்பக் கூட முடியலே. இப்பத்தான் போறது. தீபாவளி வாழ்த்துக்காகப் போன்தான் பண்ண முடிஞ்சுது'' அலுத்துக் கொண்டாள் அருணு.

''பெரியம்மா உடம்பு பத்தி எதுவும் நீ சொல்லலியா?'' மற்ருெருத்தி கேட்டாள்.

''எதுக்காகச் சொல்லணும்? குழந்தை தீபாவளியை நிம்மதியாக் கொண்டாடிக்கட்டுமே — அதான் சொல்லலே...''

''ஐஸ்வரியாவுக்குப் பெரியப்பா, பெரியம்மா மேலே ரொம்பப் பிரியமாச்சே...''

''அவ அசடு... எங்க ஓரகத்தி குணம் பூராவும் தெரியாது... கொஞ்சம் இடம் கொடுத்தா அட்டை போல ஒட்டிக் கொண்டு விடுவா..''

''இப்போ உன் மச்சினர் கொஞ்சம் கஷ்டதசையிலேதானே இருக்கார்?''

''என்ன கஷ்டம் அவாளுக்கு? இந்த வயசிலும் அவர் டியூஷன் வச்சிண்டு ஏதோ சம்பாதிக்கிருர். பென்ஷன் வரது. பிள்ளேயா, குட்டியா? கவலேப்பட...?'' எரிச்சலோடு

நோயாளி: ''ஒரு இன்ஜெக்ஷன் தானே போட்டீங்க, அதற்கா ஐம்பது ரூபாய் பீஸ் கேட்கிறீங்க டாக்டர்?''

டாக்டர்: ''கை வலிக்குதுன்னு நீங்க போட்ட சப்தத்தில் நாலு பேஷண்டுகள் ஓடிப் போயிட்டாங்களே, அதனுல்தான்.''

—செந்தூர். எ. சோமசுந்தரம்.



பேசினுள் அருணு.

சுவாமிநாதன் திகைப்பும் பதைப்புமாக ஓர்ஓரமாகநின்றுகொண்டிருந்தார்.மூக்கும் காதும் சூடாகிப் போய் உடல் முழுவதும் ஆத்திரத்தில் பதறுவதை உணர்ந்தார்...

இந்த அருணுவுக்கு...அவர் மனைவி விமலா எப்படியெல்லாம் உழைத்திருக்கிறுள்? புக்ககத்தைப் பற்றி அவளுக்கு எத்தனை ஒரு அசட்டை....?

நெஞ்சு கொதிக்க அங்கே தொடர்ந்து நின்று கேட்கப் பிரியமின்றி வேகமாக வெளியே வந்தார்.

மீண்டும் ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு அவர் நேரே நகரத்திலிருந்த நாராயணன் ஜுவல்லர்ஸுக்குப் புறப்பட்டார். கோவிந்தராஜுலு தெருவிலிருந்த அந்தக் கடைமுன் இறங்கி... ஆட்டோவை அனுப்பிவிட்டு, படியேறி... சிறிய அறை போன்றிருந்த கடைக்குள் நுழைந்தார்.

சாய்வு மேஜையருகே இண்டின் மீது சாய்ந்துகொண்டிருந்த இளைஞனை எங்கேயோ பார்த்த நினைப்பு... யார் இவன்?''

''என்ன ஸார்... என்ன வேணும்?'' புன்னகையுடன் விசாரித்தான்.

''இங்கே அடிக்கடி நான் கடையின் சொந்தக்காரர் நாராயணனேக் காண வருவதுண்டு. அவரைப் பார்க்கணும்...''

''ஸாரி ஸ்ஸார்... அவர் இறந்து போய் இரண்டு வருஷமாகிறது. அவர் கடையை நான் வாங்கி நடத்திக்கிட்டிருக்கேன்... உங்களுக்கு என்னைத் தெரியலேயா?''

''தெரியலேயே... ஆனு பார்த்த மாதிரி இருக்கு... நீங்க கடையை நடத்தறதனுலே உங்ககிட்டேயே கேட்டாப் போச்சு... நாலு தங்க வளைகள் கொண்டு வந்திருக்கேன்...''

''அதுகளை அழிச்சுப் புதுசு செய்யணுமா?''

''இல்லேப்பா... விக்கிறதுக்குக் கொண்டு வந்திருக்கேன்....'' ஆயாசத்துடன் சொன்ஞர் அவர்.

''இப்படி உட்காருங்க...'' நாற்காலி ஒன்றைக் காட்டி உபசரித்தான் அவன். ''என் பேர் கேசவன். இப்ப உங்களுக்கு ஏதாச்சும் நினைப்பு வருதா?''

தலையை ஆட்டினுர் அவர்.

''ஒருகொட்டும்மழைநாள்ல...நடுராத்திரி வேளையிலே உங்க வீட்டுக் கதவைத் தட்டி... அப்பாவுக்கு நெஞ்சு வலி, துடிக்கிறுர். ஆஸ்பத்திரிக்கு அழைச்சுட்டுப் போகணும். டாக்சிக்குக் கொடுக்கக் காசில்லே... பத்து ரூபா கடனுத் தந்து உதவணும்னு நான் குலுங்கி அழுதேன்... அப்போ எனக்குப் பத்து வயசு. நீங்க வசிச்ச தெருவிலே எதிர்வீட்டிலே நாங்க ஒண்டுக் குடித்தனத்திலே வாழ்ந்துக்கிட்டிருந்தோம். நீங்க உடனே கூட வந்து டாக்ஸி வச்சு அப்பாவை அரசு ஆஸ்பத்திரியிலே சேர்த்துவிட்டு எனக்குக் கைச்செலவுக்கும் கொஞ்சம் பணம் கொடுத்தீங்க. ஆனு எங்க நிலைமை அப்போ ரொம்ப மோசமா இருந்திச்சு. கடனைத் திருப்பிக் கொடுக்காம... சொல்லிக்காம... பம்பாய் போயிட்டோம்.

1955ம் ஆண்டில் ஒரு பொருள் என்ன விலைக்கு விற்றதோ அந்தப் பொருளுக்கு அதே விலைதான் இன்றும் என்றுல் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

அந்தப் பொருள் ரொட்டி. அந்த விலைக்கே கிடைப்பது ரஷ்யாவில்!

ஆதாரம்: ஹிந்து.

தகவல்: எம். கே. நாராயணன்.

நீங்க தப்பாக் கூட நினைச்சிருப்பீங்க...''

''ஆ...! அதனுல் என்னப்பா... நான் தப்பா நினைக்கலே...முடியலே,குடுக்கலேன்னு அதை மறந்தே போயிட்டேன்...''

''நீங்க மறந்துட்டீங்க... நான் மறக்கலே...''

''அதைப் பத்தி இப்போ என்ன...? இந்த வளையலைப் பாரு — என்ன பெறும்னு சொல்லு. உன்னுல என்ன தர முடியும்னு சொல்லு. எனக்கு இப்போ பணத் தேவை வந்திருக்கு... ரொம்ப அவசரம்...''

''இது யாரோட வளையல்கள் ஸார்...?''

''என்ன கேள்வி இது அப்பா? என் சம்சாரத்தின் வளையல்கள். விக்க வந்திருக்கேன்... என் சம்சாரம் நோயாக ஆஸ்பத்திரியிலே கிடக்கிறு...''

வாங்கநீட்டியகைகளைச்சட்டென்றுஇழுத்துக் கொண்டான் அவன்.

''அந்த மகராசிதான் பீரோவைத் திறந்து உங்ககிட்ட எனக்காக அன்னிக்கு ராத்திரி பணம் எடுத்துக் கொடுத்தாங்க. அந்தம்மா கைகளிலேயே இந்த வளைகள் இருக்கட்டும். எனக்கு நன்றி மறக்காம இருக்க ஒரு சந்தர்ப்பம் இப்போ கிடைச்சிருக்கு ஸார். வளையல்களைப் பத்திரமாச் சட்டைப் பைக்குள்ளே வச்சுக்கோங்க...''

திக்பிரமையுடன் அவனைப் பார்த்தார் சுவாமிநாதன்.

''எத்தனை, பணம் வேணும்? அஞ்சாயிரமா, பத்தாயிரமா? சொல்லுங்க ஸார்?'' கூறியபடி இண்டுக்கடியிலிருந்தொரு தோல் பையை வெளியே இழுத்தான். அதனுள்ளிருந்து எடுத்து அவன் நீட்டிய நோட்டுக் கற்றைகளைக் கண்டதும்... நன்றி உணர்வில் கண்கள் கசிய... ''என்னப்பா... நோட்டு, சீட்டு ஏதும் இல்லாம இத்தனைப் பணத்தை எனக்குக் கொடுக்க வர்றியே சரியா?'' தடுமாறினுர்.

''அம்மாவுக்கு உடம்பு நல்லான பிறகு... உங்களுக்கு எப்பத் திருப்ப முடியுமோ அப்போ கொடுத்தாப் போதும்... கொடுக்க முடியாட்டாக் கூடப் பரவாயில்லே...''

''கேசவா... நீ...'' அவர் பேச முடியாது... குழறினுர்.

உலகில்... நன்றி என்பது... எங்கெங்கேயோ ஒண்டிக் கொண்டு இருக்கிறது... நன்றி செத்துவிட்டது என்று யார் சொன்னது...?-கண்ணீரை விழுங்கிக் கொண்டு... புன்னகைத்தார் அவர்.

(தொடரும்)



452736

வஸந்த்

ப்ரகாஷ், பூமிநாதனின் அறைக்குள் நுழைந்து, தொலைபேசியை அணுகி, அதன் அந்தரங்கங்களைப் பிரித்து, தன் பாக்கெட்டிலிருந்து எடுத்த வெடி குண்டை அதன் வாய்ப் பாகத்தில் பொருத்தினான். ப்ரகாஷுக்கு இன்று சுவாரஸ்யமான நாள்! நாசிக் காசி தங்கஸைக் கோடி கோடியாய் வாரித் தரப் போகும் பூமிநாதனின், உயிரையும் உடலையும் தனித்தனியாகப் பிரித்தால் போதுமானது! அப்புறம் அவன் கரன்ஸிகளாலேயே சட்டை அணிந்து கொள்ளலாம். (பட்டனுக்குத் தங்கக் காசு!) கன்னிமர்ராவை (ஹோட்டல்) விலை பேசலாம். 'பேசப் போகிறேன்! இடது கையால் என் இந்துவை அணைத்துக் கொண்டு!

பூமிநாதனின் வீட்டைவிட்டுச் சுவரேறிக் குதித்துப் பரபரப்பில் வெளியே வந்த ப்ரகாஷ், ஒரு அஞ்சு, அஞ்சு, அஞ்சை எடுத்து உதட்டில் நிறுத்தி அதன் முனையைச் சிவப்பாக்கிப் புகைத்தான். கொஞ்சம் ஆசுவாசமானான்; நடந்தான். 'சீக்கிரம் அடுத்த தெருவை அடைய வேண்டும்' அங்கே ஐம்பது பைசா வைத்திருப்பவர்கள் தொலைபேசி பேச வசதி இருந்தது.

ப்ரகாஷ் ஐம்பது பைசா வைத்திருந்தான். வசதியை அடையத் துரிதமானான்.

இவ்விடத்தில், பிரகாஷ் கொலை செய்ய இருக்கும் பூமிநாதனைப் பற்றிய அறிமுகத்தைவிட, அவருடைய பணம் பற்றிய அறிமுகம் இன்றியமையாதது என்பதால் கவனிக்கவும். சத்தம் அதிகம் போடாத ஹீடல்பர்க் நாலு, இன்விக்டா 36 இரண்டு என்று லேட்டஸ்ட் ஜெர்மானிய (என்று சம்சயம்) மிஷின்களுடன் பூமிநாதன் பெயரில் லித்தோ பிரஸ் ஓடுகிறது. சென்னையின் நகர்ப்புறப் பகுதியில் எம். ஜி. ஆர். மற்றும் பாக்யராஜ் படம் போட்டு வசூல் குவிக்கும் தியேட்டர்கள், தென் ஆர்க்காடு மாவட்டத்து செம் மண்ணில் செழித்து வளரும் முந்திரிக்காடு, ஊட்டிக்கு வடகிழக்கே காப்பித் தோட்டம் (பெண் தொழிலாளிகள் மட்டும் நானூறு பேர்), கம்பத்துக்குச் சமீபமாய் ஏலக்காய் எஸ்டேட். பூமிநாதனின் பணக்கதைச் சுருக்கம் பின்வருமாறு: வருஷத்திற்கு ஒன்றாய் வாங்கிச் சேர்த்த ரோல்ஸ்ராய்ஸும், வோக்ஸ் வாகனும், மாரீஸும், மாருதியும் பிடிக்காத பூமிநாதன், தினமும் பயணிப்பது தாத்தா காலத்து ஆஸ்டின் கார்தான்!

பூமிநாதன்! எம். டி. என்று பளபளத்த பித்தளை போர்டுக்குப் பின்னே, சுற்றும் நாற்காலியில், தொந்தியும் ஆளும் சரிந்திருந்தவரை, நெற்றியில் விபூதி மிளிர ஒரு நல்ல வெள்ளிக்கிழமையில், சந்தித்த பிரகாஷ், காலை வணக்கம் சொன்னான். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கையெழுத்துப் போட்டு உறுதியளித்திருந்த, பி. காம். டிகிரியைக் காட்டினான். கூடவே, தேவையில்லாமல் இவன் படித்துத் தேறியிருந்த டிப்ளமா இன் ஜெர்னலிஸம் — ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் அவரைக் கவர ''யூ ஆர் அப்பாயிண்டட் ஆஸ் அக்கௌண்ட்ஸ் ஆபீஸர்'' என்றார். பிரகாஷ் சந்தோஷப்பட்டான். சாக்லேட் வழங்கினான். பணக்கார ஹோட்டலின் மெலிதான இருட்டில் பீர் சாப்பிட்டான். 'அன்புள்ள அம்மா'வுக்கு வேலை கிடைத்ததை எழுதினான். கொஞ்ச நாள் ஒழுங்காய், ஆபீஸில் டிரயல்பாலன்ஸ் பார்த்தான்.

திடுதிப்பென்று, அவனுக்கு ஜாதகத்தில் வியாழ நோக்கம் வர (வி. நோக்கம் பற்றித் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் அருகிலுள்ள ஜோஸியரை அணுகவும்.) இந்துவைச் சந்தித்தான்.

இந்து, நாலு வருஷங்களாகப் பூமிநாதனின் வளர்ப்பு மகள்! அதற்கு முன்? யாமறியேன் பராபரமே! ப்ராபப்ளி, அனாதை ஆசிரமத்தில் இருந்திருக்க வேண்டும்.

நாலு வருஷங்கள்தான் என்றாலும், அதற்குள்ளாகவே, இந்துமீது, தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் வைத்து ஏகப்பட்ட பாசத்தை வளர்த்துக் கொண்டுவிட்டிருந்தார் பூமிநாதன். பலனாக, ஏனோ, இந்துவுக்குப் பூமிநாதன் மீது துளிக் கூடப் பாசமில்லை.

மன்னிக்கவும், கதை சொல்லும் சுவாரஸ்யத்தில் பிரகாஷை மறந்துவிட்டேன். பிரகாஷ் அடுத்த தெருவை அடைந்து, பப்ளிக்ஃபோன் பூத் அருகில் ஆஸ்டினுக்காகக் காத்திருந்தான்.

ஆஸ்டின் அவனைக் கடந்த ஐந்தாவது நிமிடம் அவன், தொலைபேசியை அணுகி, 452736 ஐ டயல் செய்வான். 452736? அது பூமிநாதனின் மிகப் பிரத்தியேகமான அறையில் (வேலைக்காரர்கள் கூட நுழையக் கூடாது!) அவர் மட்டுமே எடுத்துப் பேசும், கேட்கும், தொலைபேசி எண். இன்று அவர் எடுத்ததும் 'ஹலோ' சொல்வதற்குள் 'டமார்' கேட்கப்போகிறது. குண்டுவெடித்து, தமனி உடைந்து அவர் உயிர், நெற்றிப் பொட்டின் வழியாக வெளியேறும். பிரகாஷ், பூமிநாதன் வருகைக்காக, ஆஸ்டின் தரிசனத்துக்காகக் காத்திருக்கிறான். அவகாசம் இருக்கிற போது, பிரகாஷ் — இந்து காதலைச் சொல்லிவிடுகிறேன். வேண்டாம்.



கதையோட்டத்திற்கு மிகவும் அத்தியாவசிய மான நேற்று மாலே, கோலம் ரெஸ்டாரென்டில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில், அவர்களுக்குள் நடந்த கீழ் ஸ்தாயி உரையாடலே மட்டும் தருகிறேன்.

''பிரகாஷ்! அப்ப முடிவா என்னதான் சொல்றே?''

''வேறே வழியில்லே.''

''என் அப்பாவைக் கொல்றதைத் தவிர?....

''எப்படிக் கொலே செய்யப் போறே?''

''அது என் பிரச்னே?''

''எப்படித் தப்பிச்சுக்கப் போறே?''

''நான் அவரைக் கொன்ற உடனே, டாக்ஸி பிடிச்சு, விமானம் பிடிச்சு, மலேஷியாவுக்குப் பறந்துடுவேன். இங்கே இருந்தா முதல் சந்தேகம் என் மேல்தான் வரும். ஒரு வருஷம் கழிச்சு மொட்டை அடிச்சுக்கிட்டு, தாடி வளர்த்துக்கிட்டு இந்தப் பிரகாஷ், கீர்த்திவாசன்னு பேரெல்லாம் மாத்திக்கிட்டுப்புது மனுஷனு உங்கிட்ட வேலே கேட்டு வருவேன். பூமிநாதன் இறந்ததும், அத்தனே சொத்துக்கும் அதிபதியாகியிருக்கிற நீ எனக்கு வேலே போட்டுக்கொடுப்பே! புதுசா நான் உன்னேக் காதலிப்பேன்! நீயும் என்னேக் காதலிப்பாய்! அப்புறம் நம் கல்யாணம்!''

'இவ்விடம் புத்தகம் பைண்டிங் செய்யப்படும்' மீது சேற்றை வாரி இறைத்துவிட்டு, ஆஸ்டின் திரும்ப, பிரகாஷ் சுறுசுறுப்பானன். சரியாக முந்நூறு விநாடிகள் கழித்து, தொலேபேசியில் 452736 சுழற்றி, ஐம்பது பைசா விழுங்க வைத்து ஹலோ சொல்லி, எதிர்முனேயில் கேட்ட டமாரில் உற்சாக முற்று, விசில் செய்தபடி ஏர்போர்ட்டுக்கு விரைந்து, காரவலில் ஏறி மலேஷியா நோக்கிப் பயணமானன்.

அந்தப் பல ஆயிரம் அடி உயரத்திலிருந்து, பிரகாஷுக்கு பூமிநாதன் வீடு தெரியவில்லே.

''என் ஆபீஸில் பிரகாஷ்னு ஒரு அட்ட காசப் பையன் இருக்காம்மா! அவனேத்தான் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்னு இருக்கேன்'' என்று பூமிநாதன் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அவருடைய பிரத்தியேக அறைத் தொலேபேசி மணி ஒலிக்க,

''இருங்க டாடி! நானே பார்க்கறேன்'' என்று இந்து உற்சாகமாக ஓடி டெலிபோனே எடுத்ததும் ரிஸீவர் வெடிக்க, பூமிநாதன் மகளின் உடலேக் கட்டிக் கொண்டு கதறியதும் பிரகாஷுக்குத் தெரியவில்லே!


STA


மகிழ்ச்சி துள்ளும் தருணங்கள்
ஒரு பெயரிலே உன்னத வண்ணங்கள்
ஒவ்வொரு மில்லும் ஒவ்வொரு மற்ற மில்லைப்போல இருக்கிறதல்லவா? இல்லை, தவறு.
வேறு எந்த மில் உங்களுக்குத் தருகிறது இவற்றை எல்லாம்: ஷர்ட்டிங்குகள், கார்டுராய்கள், டிரஸ் மெட்டீரியல்கள், சேலைகள், ரெடிமேட் ஷர்ட்டுகள், அழகான கால்களுக்கான பவுடர் டாட் :ப்யூஸிபிள் இன்டர் லைனிங்குகள், பெட்ஷீட்கள்.
பாரம்பரிய :பாஷன் விரும்பிகள் முதல், நவீன :பாஷன் விரும்பிகள் வரை ஒவ்வொருவருக்கும் உகந்த உன்னத வகை!
அனைத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்...அதன்பிறகு உங்களுக்குப் புரியும்: ஸ்டேன்ரோஸ் படைப்பாளரான ஸ்டாண்டர்டு மில்ஸ், வேறு மில்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது ....அலாதியானது.
ஸ்டேன்ரோஸ்®
:பேப்ரிக்ஸ்
இத்தனை அழகான துணியை வேறு எந்தப் பெயரிட்டும் அழைக்க முடியாது!


நானு ரிடையர் ஆனேன்? இப்பதான் புதுவாழ்க்கையே ஆரம்பமாகிறது! தோட்டத்தில் நடமாடுவது, ஸீஸனில் பாட்டுக் கச்சேரிகளுக்கு போவது, கடற்கரை பக்கம் உலாவியபடி அரசியலை அலசுவது, பேர குழந்தைகளுக்கு கதை சொல்வது, இன்னும் எத்தனையோ... இதையெல்லாம் செய்ய தினமும் இரண்டுமுறை ஹார்லிக்ஸ் பருகுகிறேன்.
Horlicks
The Great Nourisher
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்



ஒரு பெண் அதிகாரி பட்ட பாடு...

கடந்த 1982, ஆசிய விளையாட்டு விழாவில், டில்லி மாநகரின் போக்குவரத்து ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்தவர் என்று பாராட்டுப் பெற்றவர் பெண் காவல் துறை அதிகாரி (டிபுடி கமிஷனர்—டிராபிக்) கிரேன் பேடி.

திடீரென் று டில்லியிலிருந்து கோவாவிற்கு மாற்றப்பட்டார். கிரேன் இதனை எதிர்பார்க்கவில்லை. தன் ஏழு வயதுப் பெண் குழந்தை குஜூவிற்குச் சிறுநீரகக் கோளாறு என்பதால்தான் டில்லியிலேயே குழந்தையுடன் இருக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையை உயர் அதிகாரிகளிடம் எவ்வளவோ எடுத்துரைத்தும் பயன் இல்லை.

வேறு வழியின்றிக் கோவாவில் பணியில் சேர்ந்து காமன் வெல்த் அதிபர்கள் வருகையின் ஏற்பாடுகளை — குறிப்பாகப் போக்குவரத்து ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்தார். பணிகளுக்கிடையே டில்லியில் உள்ள தனது குழந்தையின் நலம் குறித்துத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்து வந்தார்.

குழந்தையின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்தது. தாத்தா, பாட்டியிடம் குழந்தை இருந்தாலும் தாயும் அருகிலிருந்து கவனித்தாக வேண்டிய சூழ்நிலை.

முறையாக விடுமுறை விண்ணப்பம் கொடுத்துவிட்டு டில்லிக்கு விமானத்தில் விரைந்து வந்தார் கிரேன்.

டில்லியில் குழந்தையோடு மருத்துவமனை — மருத்துவப் பரிசோதனைகள் என்று தூக்கமில்லாமல் நாட்களைக் கழித்தார் அவர்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் விடுமுறை மறுக்கப்பட்டது. உடனே பணியில் சேருமாறு கிரேனுக்குக் கட்டளை விதிக்கப்பட்டது. மருத்துவச் சோதனையின் சான்றிதழ்கள்; மருத்துவமனையின் பரிந்துரைகள்; நோயாளிக் குழந்தை குஜூவின் புகைப்படம் என்று உயர் அதிகாரிகளுக்கு எவ்வளவோ அனுப்பப்பட்டும் ஏற்க மறுத்துவிட்டனர்.

இதற்கிடையில் கோவாவின் தலைநகரான பனாஜியில் ஓர் உயர் அதிகாரி, கிரேன் இன்னும் வேலையில் வந்து சேரவில்லை; வேலைக்கு வராத காரணத்தை உரிய முறையில் தெரிவிக்கவும் இல்லை என்று செய்தி ஏடுகளில் பேட்டி கொடுத்துவிட்டார்.

நேரில் விடுப்புக் கொடுத்தபின் தந்தி மூலம் தனது விடுமுறை நீட்டிப்புக் குறித்துக் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் மறைக்கப்பட்டது குறித்துப் பெரிதும் வருந்தினார் கிரேன். பன்னிரண்டு ஆண்டுகள் நேர்மையாக உழைத்தும், தனது உழைப்பு உதாசீனப்படுத்தப்பட்டது குறித்துப் பெரிதும் வேதனைப்பட்டார்.

உடனே கிரேன் செய்தியாளர்களை அழைத்து, நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஆதாரத்துடன் எடுத்துரைத்தார். மத்திய உள்துறைச் செயலாளரைச் சந்தித்து அனைத்தையும் விரிவாக வெளிப்படுத்தினார். அனைத்துச் செய்தி ஏடுகளும் கிரேன் அளித்த செய்திக் குறிப்புக்களை விரிவாக வெளியிட்டன.

இதன் விளைவு......

சில மாதங்கள் கழித்து காவல் துறை நேர் பொறுப்பிலிருந்து கிரேன் இரயில்வேயுக்கு மாற்றப்பட்டு மீண்டும் டில்லி வந்தார். அதற்காக மனம் வருந்தவில்லை அவர். எந்தத் துறையானாலும் தனது நோய்வாய்ப்பட்ட குழந்தையுடன் டில்லியிலேயே இருக்தர்

வாய்ப்புக் கிடைத்தது குறித்து கிரேனுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

பின்னர் இரயில்வேயிலிருந்து தொழிலகங்களின் பாதுகாப்பு அலுவலகத்திற்கு மாற்றப்பட்டார்: அதற்கும் கிரேன் சளைக்காமல், தொழில் நிலையங்களின் நிலைமாற்றம் பற்றிய பரிந்துரைகளை விரிவாகத் தயாரித்து அனுப்பினார்.

தற்போது உள்நாட்டு பாதுகாப்புத் துணை அமைச்சராக இருக்கும் அருண் நேரு அப்போது மின் உற்பத்தித் துணை அமைச்சராக இருந்தார். பரிதாபாத் மின் நிலையத்தின் பரிதாப நிலையை விரிவாக கிரேன் எழுதியிருந்ததைப் படித்த அருண் நேரு, மறுபடியும் கிரேனை டில்லி காவல் துறைக்கே அழைத்து வந்தார்!

நேர்மைமிக்க அதிகாரியான கிரேனுக்கு ஏன் இந்த நிலை?

கடந்தகாலத்தில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள்தான் இதற்குக் காரணமாக இருக்குமோ என்று சிலர் ஐயப்படுகிறார்கள்.

டில்லி போக்குவரத்துக் காவல்துறைத் துணை ஆணையராக கிரேன் இருந்தபோது, டில்லியில் கார் வைத்திருந்த பலர் பெரிதும் அச்சம் அடைந்தார்கள். 'கார் நிறுத்தக் கூடாத இடம்' என்ற பகுதியில், எவ்வளவு செல்வாக்குப் படைத்தவராக இருந்தாலும், அவருடைய கார் அங்கு நிறுத்தப்பட்டிருந்தால், காவல் துறையினர் அந்தக் காரை இழுத்துக் கொண்டு போய் விடுவார்கள். ரூ 150 அபராதம் கட்டினால்தான் காரை மீண்டும் திருப்பித் தருவார்கள்.

1982 ஆம் ஆண்டு ஒரு முறை அன்றைய பிரதமர் இந்திராவின் கார் 'கன்னாட் பிளேஸ்' பகுதியில்—நோ பார்க்கிங் ஏரியாவில் ரமேஷ் ஹண்டா என்பவர் கடையின் முன் நிறுத்தப்பட்டிருந்தது. அங்கு பணியில் இருந்த காவலர் கார் நிறுத்தும் இடத்தில் காரை நிறுத்துமாறு பலமுறை கூறினார்.

பிரதமரின் கார் எங்கும் நிற்கும் என்று இறுமாப்போடு கூறப்பட்டதால், கார் நிறுத்தக் கூடாத இடத்தில் பிரதமரின் கார் நிறுத்தப்பட்டதற்காக கிரேன் உரிய நடவடிக்கையை எடுத்தார். அந்தச் செய்தி பத்திரிகைகளில் பரபரப்பாக வெளிவந்துவிட்டது.

அதேபோல் இன்னொரு சம்பவம். ஆசிய விளையாட்டு விழாவின் போது போக்குவரத்துக் கட்டுப்பாட்டு நிழற் குடைகளில் விளம்பரம் செய்ய, முறையாக, உரிமம் வேண்டுவோருக்கு ஏலத்தின் மூலம் உரிமம் தர வழிவகை செய்யப்பட்டது.

அன்று நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஆளும் வர்க்கத்தில் செல்வாக்கும் பெற்றிருந்த குளிர்பான உரிமையாளர் ஒருவரின் நிறுவனத்திற்குப் போட்டியாக இருந்த மற்றொரு நிறுவனத்திற்கு முறைப்படி—சட்டரீதியாக அந்த உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

எம்.பி யோ தன்னுடைய நிறுவனத்திற்கே அந்த விளம்பர உரிமை வேண்டும் என்று தன் செல்வாக்கினைப் பயன்படுத்தி முயற்சி செய்தார். ஆனால் கிரேன், அந்த உரிமம் சட்டப்படி, வேறு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதால், அவருக்கு ஏதும் செய்ய இயலாது என்று கூறிவிட்டார்.

அன்றே அந்த எம்.பி. பெண் அதிகாரியான கிரேனுக்கு 'பாடம் புகட்ட'ச் சபதமேற்றார்.

விளைவு.....?

ஆசிய விளையாட்டு விழா முடிந்ததும் டில்லியிலிருந்து கோவாவிற்குத் தூக்கி எறியப்பட்டார் கிரேன்!

ஆதாரம்: வீக் எண்ட் ரெவ்வியூ

தகவல்: **சிவமணாளன்**

இவரிடம் நிதி இல்லையாம்!



வெள்ளை மாளிகையில் பணிபுரிபவர்களுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்பதில் உதவி ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷிற்கும், தலைமைச் செயலாளர் டோனல்ட் ரீகனுக்கும் மனக்குறை உண்டு. வெள்ளை மாளிகையின் மேற்குப் பகுதியில் முதலாவது மாடியில் இரண்டே இரண்டு கழிப்பறைகள் இருப்பதால் சில சமயங்களில் அவசர இயற்கைத் தொந்தரவுகளுக்காக 'க்யூ' நிற்கவேண்டியிருக்கிறதாம். இந்தத் தொல்லையைத் தீர்ப்பதற்காக புஷ்ஷின் அறைக்கும், ரீகனின் ஆபீஸிற்கும் இடையே புதிய தொகு கழிப்பறை கட்டத் திட்டமிடப்பட்டது. நல்ல வசதியுடன் கூடிய கழிப்பறை கட்டப் பத்தாயிரம் டாலர் செலவாகுமென்றும், ஷவருடன் கூடிய கழிப்பறை கட்ட ஐம்பதாயிரம் டாலர் செலவாகுமென்றும் கணக்கிடப்பட்டது.

இந்தப் புதிய திட்டம் ஜனாதிபதி ரீகனின் பார்வைக்கு அனுப்பப்பட்டபோது நிதி வசதி இல்லையென்று கூறி ஒப்புதல் தர மறுத்துவிட்டாராம். 'உண்மைதானே? அணு ஆயுதங்களுக்கும், ராக்கெட்டுகளுக்கும் செலவழிக்கும் பணத்தை விட இந்தக் கழிப்பறைத் திட்டத்திற்குச் செலவழிக்கப்படும் பணம் அதிகமாகிறதல்லவா? இது அநாவசிய செலவுதானே?' என்று இந்த விஷயத்தைப் பற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் கிண்டல் செய்திருக்கின்றன!

— அ. குமார்.


இவருடைய பற்களுக்கு
இவர் பாதுகாப்பு அளித்துள்ளார்
இந்த ஃப்ளோரைட் பாதுகாப்பினை
பினகா ஃப்ளோரைட் அளித்துள்ளது
Binaca Fluoride toothpaste
உங்கள் பற்கள்
பல்லாண்டு நீடித்திருக்க,
சொத்தை விழுவதிலிருந்து
அவைகளைப் பாதுகாக்க வேண்டும்.
இதோ பினகா ஃப்ளோரைட். அவைகளுக்கு
ஃப்ளோரைட் மூலம் இன்றியமையா பாதுகாப்
பளிக்கிறது. ஏனெனில், தீங்கு விளைவிக்கும் அமிலங்
கள் பற்களின் பரப்பைத் தாக்கும் போது, பற்களினால்
கிரகிக்கப்பட்ட ஃப்ளோரைட், பல்லின் எனாமலுக்கு
சொத்தையை எதிர்க்கும் ஆற்றலைக் கொடுக்கிறது. இதன் மூலம்
பற்சிதைவு ஆரம்ப கட்டத்திலேயே தடுத்து நிறுத்தப்படுகிறது.
பற்சிதைவையும் சொத்தையையும் பினகா
ஃப்ளோரைட் உபயோகித்து தடுத்து நிறுத்துங்கள்.
உங்கள் பற்கள் பல்லாண்டு வாழ
பினகா ஃப்ளோரைட்
டூத்பேஸ்ட்
இந்தியாவின் முதல் முதல் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை
ULKA-HCG-BF-12-85-TAM

இன்றைக்கு ஷண்முகத்திடமிருந்து கடிதம் வந்திருக்கிறது'' எனச் சொல்லிக் கொண்டே வந்தார் அப்பா, அன்று கடையிலிருந்து திரும்பும்போது.

ஷண்முகம் என் அப்பாவின் பால்ய சிநேகிதர். அம்மா அவரை அண்ணன் முறை வைத்துத்தான் அழைப்பாள். அவருடைய கட்டுக்குடுமியும், பழைய காலத்துக் கோட்டும், புறங்கையால் உதட்டோரம் வழியும் புகையிலைச் சாற்றை அடிக்கடித் துடைக்கும் கோரமும் — என்னால் சகிக்க முடியாதவை.

''அண்ணன் என்ன எழுதியிருக்காங்க?'' — என ஆவலுடன் கேட்டாள் என் தாய்.

''உன் மருமவப்புள்ளை கண்ணன் நாளைக்கு ஏதோ ஜோலியா இங்கே வாராணும்... நம்ம வீட்டில்தான் தங்குவாணும்!'' என்றார் அப்பா.

எனக்கு எரிச்சலாக வந்தது. வீட்டிற்கு யார் வந்தாலும் பறிபோவது என் சுதந்திரம் தான். என் தாய் உடனே எனக்கு உத்தரவு போடத் தொடங்கி விடுவாள்.

''வயசுப் பிள்ளை... சும்மாச் சும்மா எதிரே வந்து நிக்காதே...! ஏதோ சாப்பிட்டோமோ போனேமோ அப்படின்னு ஒளிவு மறைவா — அந்த மாடி அறையிலே தங்கிக்கோ!'' என்பாள்.

அந்த மாடி அறை ஒரு சிறைச்சாலை. நான்கு பக்கமும் ஜன்னல்கள் கிடையாது. சின்னச்

கிழிக்கப்பட்ட காதல்



சின்ன வெண்டிலேடர்.

நான் கட்டுப்பெட்டியாக வளர்க்கப்பட வில்லே. அப்பா கல்லூரிப் படிப்பு முடியும் வரை சுதந்திரம் கொடுத்திருந்தார். தாராள மாக வெளியே போய் வரலாம். அம்மாவும் ஒன்றும் சொல்ல மாட்டாள்.

என்னுடைய தோழி — அனு என்று பெயர் — ஒரு நாள் வேற்று ஜாதி வாலிப னுடன் ஓடிப் போய் விட்டாள். அன்று முதல்தான் எனக்கு இந்தச் சிறை, கட்டுப் பாடு எல்லாம். மாதம் ஓரிருமுறை அப்பா, அம்மா உடன் வரக் கைதியை அழைத்துப் போவது போல் அழைத்துப் போவார்கள்.

வரப்போகும் கண்ணனோ, கிருஷ்ணனே எனக்குத் தெரியாது. அவன் பம்பாயில் தன் மாமன் வீட்டில் படித்தவனும். இப்போது என்ன வேலையாக இங்கு வருகிறான்.... அப்பா, அம்மா சொல்லவும் இல்லே. நானும் கேட்கவில்லே.

எனக்கு இவர்கள் வெகு தீவிரமாக மாப் பிள்ளே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பாவிற்குப் பிடித்திருந்தால், அம்மா வேண்டாம் என்றாள். அம்மா சரி என்று கூறினால், அப்பா ஆயிரம் குறை சொல் வார்.

நான் எந்தவித ஆசையையும் வளர்த்துக் கொள்ளவில்லே. எனக்கென்று ஒருவன் பிறக்காமலா போகிறான் என்ற வேதாந்தம் இல்லே. நம் விருப்பத்தை யார் கேட்கிறார் கள்?

கடிதம்



அன்றைய தினசரியைப் பிரித்து மேலாக நான் பார்த்துக் கொண்டிருந்தபோது, வாச லில் நிழலாடியது.

நிமிர்ந்தவள் பிரமித்துப் போனேன்.

நல்ல உயரம், அதற்கேற்ற பருமன், சிவந்த நிறம், அழகான மீசை; சுருண்ட கூந்தல்; பொருத்தமான உடை.

''நான்தான் கண்ணன்... மாமா, அத்தை இருக்காங்களா?''

''வாங்க தம்பி... பயணம் சௌகர்யமாக இருந்ததா? தூங்கினீங்களா? ஊரிலே அண் ணன், அண்ணி, தங்கச்சி எல்லாரும் சுகமா?'' — எனக் கேட்டபடி வரவேற்க வந்து விட்டாள் என் தாய்.

''இவுங்க...'' என்று என்னைப் பார்த்த படி அவன் விசாரிக்க — தப்பு.:. வந்தவர் விசாரித்தார்.

''நம்ம கோதை... தெரியல்லியா?'' என அம்மா சொல்ல, அவர் ''வணக்கம்'' என் பது போல் கைகளைக் கூப்பினார்.

''என்னங்க தம்பி... அது சின்னப் புள்ளே... அதுங்கிட்ட போய்க் கையெல் லாம் கூப்பிக்கிட்டு...?''

என் தாய் வழிகாட்ட, அவர் தனக்காக வைக்கப்பட்டிருந்த என் அறைக்குப் போனார். என் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண் டேன்.

''நான் குளித்துவிட்டு உடனே புறப்பட வேண்டும், அத்தை...! பத்து மணிக்கு எனக்கு இண்டர்வியூ.''

''எல்லாம் தயாராக இருக்கு... நீங்க போய்க் குளிச்சுட்டு வாங்க, தம்பி...! நான் டிபன் எடுத்து வைக்கிறேன்...!'' என உப சாரம் செய்தாள் என் தாய்.

அவர் குளியல் அறைக்குள் போக — அம்மா அடுப்பங்கரைக்கு விரைய — நான் உள்ளே புகுந்து நோட்டம் விட்டேன்...

அவர் கைப்பெட்டியின் மீது அவர் பெயர் கொண்ட கார்டு இருந்தது. அவர் முழுப் பெயர் எஸ். கண்ணபிரான், எம். எஸ்ஸி. எம். டெக், எம். பி. ஏ.,

பெரிய ஆள்தான்!

அவர் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டுப் புறப் பட்டதும் என் மனத்தில் ஒரு நினைவு. இது வரை தோன்றாத ஒரு உணர்வு. என் அப்பா வும், அம்மாவும் அந்த இடத்தைப் பற்றிப்

அன்னம்

பேசவில்லை? தெரிந்த இடம் வேண்டாம் என்று? சக்திக்கு மீறிய சம்பந்தம் என்று?

காலையில் போனவர் இரவுதான் திரும்பினார். அப்பாவும் அவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். சென்னையில் பெரிய கம்பெனியில் வேலைக்கான பேட்டி. இவர் கேட்ட சம்பளத்தைக் கொடுக்கச் சம்மதித்து விட்டார்களாம். மறு மாதம் முதல் தேதி வேலையில் சேரப் போகிறாராம்.

"சரி, தம்பி! இரவுப் பயணம்! அலுப்பாக இருக்கும்! நீ படுத்துக் கொள்!" என உபசாரம் செய்தார் என் அப்பா.

இன்றைக்கு எனக்கு என் அறையில் படுக்கை கிடையாது. அப்பா அம்மாவுடன் தரையில் ஒரு பாயில் படுத்துக் கொள்ள வேண்டியதுதான். இப்படிச் சந்தர்ப்பம் நேரும்போதுஎல்லாம்வந்தவிருந்தாளிகளைச் சபித்திருக்கிறேன். இப்போது அப்படி இல்லை.

படுத்துக் கண்களை மூடிக் கொண்டேன். தூக்கம் வரவில்லை. "இந்த வரனை எனக்கு நிச்சயம்பாருங்கள்!" என்றுஎப்படிச்சொல்வது? அப்பா ஏதாவது ஏடாகூடமாகத் திட்ட ஆரம்பித்தால்?.,.

"அந்தக் கழுதை தூங்கிட்டுதா, பார்!" என்று அப்பா அம்மாவிடம் சொல்வது என் காதுகளில் கேட்டது. எனக்கு அப்பா செல்லமாக வைத்த பெயர் கழுதை. கழுதை கண்களை இறுக மூடிப் பொய்க் குறட்டை விட்டுத் தூங்குவதாக நடித்தது.

"பையன் எப்படி இருக்கிறான்?"—அப்பா.

"ராஜா மாதிரி!" — அம்மா.

"உம்....நம்ம பெண்ணுக்குக் கேட்கலாமான்னு கூட யோசனைதான்... நமக்குக் கட்டுமா?"

"போன வருஷம் அண்ணன் வந்த போது ஜாடையாகக் கேட்டேன்... அவர் மச்சினன் மகள் பம்பாயிலே இருக்குதுன்னு சொன்னாரு!"

என் மனம் நொறுங்கிப் போயிற்று.

"அதெல்லாம் இல்லை... அந்தப் பெண்ணிற்கு வேறு இடத்தில் நிச்சயம் ஆகிவிட்டது. இந்தத் தம்பியே சொன்னான்.

என் மனம் மறுபடியும் பொங்கிப் பூரித்தது.

"அப்படின்னா கேட்டுட வேண்டியது தான்!"

"தம்பிகிட்டயா, ஷண்முகத்துக் கிட்டயா?"

"கட்டிக்கப் போறவன் இவன்தானே!... இவன்கிட்ட ஜாடையாகக் கேட்போம். போக்கு தெரிஞ்சா அப்புறம் அண்ணனுக்கு எழுதலாம்!"

நாளைக்குக்காலைமாடிக்குப்போய் ஒளிந்து கொள்ளக் கூடாது... என்ன சொல்றார்னு பார்க்கலாமே!

மறுநாள்... காப்பி சாப்பிடும் போது அப்பா பேச்சை ஆரம்பித்தார்.

"ஷண்முகத்திற்கு உன் ஜாதகம் கேட்டு இன்று "கால்" போட்டுப் பேசப் போகிறேன்..."

வேடிக்கைக் கவிதை



போட்டி: 31.

புதுக் கவிதையோ, மரபுக் கவிதையோ உங்கள் விருப்பப்படி கீழே வெற்றிடத்தில் சுருக்கமாக ஒரு கவிதை எழுதி அனுப்புங்கள். ஒரே ஒரு நிபந்தனை. அது வேடிக்கைக் கவிதையாக இருக்க வேண்டும். அங்கத பாணியில் அரசியலை, சமுதாயத்தை விமர்சிக்கலாம்; அங்கதமாக அமையாமலும் போகலாம். எவ்வாறாயினும் அது சிரிப்பு ஏற்படுத்தியே ஆக வேண்டும். எங்கே உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்பும்போது உறையின் மீது "வேடிக்கைக் கவிதை" என்று மறவாமல் குறிப்பிடவும். பிரசுரமாகும் பரிசு. தவிர ஒருவருக்குக் குலுக்கல் முறையில் வி. ஐ. பி. ஸூட்கேஸ்.

முடிவு தேதி: 16.12.85

வாரம் தவறாது போட்டிகளில் பங்கேற்றால் உங்களுக்காகக் காத்திருக்கும் 22 வி. ஐ. பி. ஸூட்கேஸ்களில் ஒன்றினைப் பெற முடியாமலா போய்விடும்?

என் பெயர்: ....

விலாசம்: ....

....

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

அவர் சிரித்தார்.

''நம்ம கோதைக்கு உன்னைப் பார்க்கலாம்னுதான்... பெண்ணைப் பார்த்திருக்கிறாய்... உன் அபிப்பிராயத்தைச் சொன்னால்...''

''நான் மட்டும் சரி என்றால் போதுமா..? உங்கள் பெண்...''

''அந்தக் கழுதை நான் சொன்னபடி கேட்கும்!'' என்றார் அப்பா பெருமிதத்துடன்.

ஆமாம்... அப்பா! இந்த விஷயத்தில் உங்கள் விருப்பப்படி உங்கள் கழுதை கேட்கும்... நிச்சயம் கேட்கும்... ஆனால் இவர் தன் முடிவை வாய் திறந்து சொல்லவில்லையே...!

''நீங்கள் அப்பாவிடம் பேசுங்கள்!'' என்று கூறி அவர் எழுந்தார்.

நான் அம்மா முன் போய் நின்றேன். உட்கார்ந்தேன். வம்புப் பேச்சுக்கு இழுத்தேன். நல்ல அழுத்தம். இந்த வரன் பார்ப்பது பற்றி ஏதும் கூறவில்லை.

என் விருப்பத்தை இவரிடம் எப்படித் தெரிவிப்பது?

தனியாகப் பேசச் சந்தர்ப்பம் இடைக்காது.

அவர் ரயிலுக்குப் புறப்படும் சமயம். உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்பா வாசலில் வந்து நின்ற ''ஆட்டோ ரிக்ஷா''விற்கு வாடகை பேசிக் கொண்டிருந்த சமயம்.

ஒரு சிறு காகிதத் துண்டை எடுத்தேன். வேகமாக எழுதினேன்.

''இந்த அறையில் உள்ள கண்ணனுக்கு மாலையிட இந்தக் கோதை காத்திருக்கிறாள்!''

என் கையெழுத்துப் போட்டு அவர் கைக் கடிகாரத்திற்கு அடியில் வைத்தேன்! நிச்சயம் கடிகாரம் எடுக்கும்போது கண்ணில் படும்!

என் விருப்பத்தைத் தெரிவிக்க இது போதும்!

அவர் ஊருக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்.

அடுத்த மாதம் வேலைக்குச் சேரும்போது இங்கே வருவார் என எதிர்பார்த்தேன். வரவில்லை. தனியாக வேறு இடம் பார்த்துக் கொண்டுவிட்டார். என் அப்பாவின் நண்பர் ஏதும் கடிதம் போட்டதாகத் தெரியவில்லை.

என் மனம் தவித்தது. அந்தக் ''கண்ணனுக்கு'' இந்தக் கோதையின் கடிதம் கிடைக்கவில்லையா? ''வெட்கம் கெட்ட பெண்'' என என்னைக் கணக்குப் பண்ணிவிட்டாரா?

என்னால் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவர் என் வீட்டிற்கு வந்திருக்கவே வேண்டாம். நான் அவரைப் பார்த்திருக்கவே கூடாது! என் அப்பாவும் என் ஆசையை வளர்த்து விட்டிருக்கக் கூடாது.

அப்பா வீட்டிற்கு வரும்போது எல்லாம் நல்ல சேதியுடன் வருவார் என எதிர்பார்த்தேன்! சே! என்ன ஏமாற்றம்!

அன்று என் தோழி ஒருத்திக்குத் திருமணம்.

வீட்டிற்கு வந்து நேரிடையாகக் கூப்பிட்டாள். கூட்டிப் போய்த் திருப்பிக் கொண்டு விடுவதாக உறுதி கூறியதன் பேரில் என் தாய் சம்மதித்தாள்.

நான் அவள் பக்கத்தில்தான் இருந்தேன். தோழிக்குவாய்த்தவரும்ஒரு எம்.டெக்.தான்! ஆனால் என் ''கண்ணன்'' முன்னால் நிற்கக் கூடத் தகுதி இல்லை.

மாலையில் வரவேற்பு. என்னை வாசலில் வருபவர்களை வரவேற்க மலர்த் தட்டுடன் நிற்கவைத்தார்கள். யந்திரம் போல் இயங்கிக் கொண்டிருந்தேன். மனம் மட்டும் எங்கேயோ?

''ஹலோ! கோதை!'' — என்ற குரல் கேட்டுச் சிலிர்த்துப் போனேன்!

அவர்தான்!

என் முகம் குங்குமமாகச் சிவந்தது! எதிர்பாராத சந்திப்பு.

அவர் வந்தார். கூடவே மாப்பிள்ளையும் பெண்ணும்!

''என்னுடைய அத்தை பெண்!'' — என என்னை அறிமுகப்படுத்தினார்.

அவ்வளவுதான்! வேறு ஒன்றும் இல்லையா?

வெளியே போனவர் திரும்பி என்னருகே வந்தார்.

''மாமாவிடம் சொல்!... நாளைக்கு என் அப்பா அம்மா வருகிறார்கள்! 'போன்' வந்தது.''

யார் வந்தால் என்ன...? யார் போனால் என்ன? எனக்கு வேண்டிய பதில் இல்லை.

''என்ன பதிலைக் காணோம்! என் கல்யாணத்தை உன் வீட்டில் நிச்சயம் செய்ய வருகிறார்கள்!''

என்னையறியாமல் கையிலிருந்த தட்டு கூட நழுவியது. நிமிர்ந்து பார்ப்பதற்குள் அவர் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்.

வீடு திரும்பியதும் அவர் கூறச் சொன்னதை மட்டும் யந்திரம் போல் ஒப்பித்தேன்.

''ஓஹோ! அந்தக் கண்ணன் இந்தக் கோதை கிட்ட சொல்லி அனுப்பிச்சானா...?'' என்று சிரித்தார் என் அப்பா.

''என்ன சொல்கிறீர்கள்?'' — என விசாரித்தாள் என் தாய்.

''நம்ம கழுதை அவனுக்குக் கடுதாசிலே எழுதி வச்சதைப் பற்றிச் சொன்னேன். அந்தப் பிள்ளை பாக்கறதுக்குள்ளே நான் எடுத்துக் கிழிச்சுப் போட்டேனே அது!''

நான் கோபத்துடன் நிமிர்ந்தேன்.

''முறைக்காதேடி! அந்தக் கடிதம் அந்தப் பிள்ளைகிட்ட கிடைச்சிருந்தா நாளைக்கு அவங்க இங்கே வர மாட்டாங்க. பம்பாயிலே அந்தப் பொண்ணு ஏதோ கன்னுபின்னுன்னு எழுதப் போய்த்தான் கல்யாணமே நின்னுப் போச்சு! கேள்விப்பட்டேன். நீ வெண்ணை திரள்கிற சமயத்திலே தாழியை உடைக்க இருந்தாய்!'' — என்றாள் என் தாய்.

ஆயிரம்தான் சொல்லுங்கள். அப்பா அப்பாதான்! அம்மா அம்மாதான்!

நெம்புகோல்

ஒரு வழியாக
பூமியைப் புரட்டும்
நெம்புகோல்
கவிதையைப்
படைத்தபின்
நிமிர்ந்தேன்!
...பூமியைக்
காணவில்லை...!

சின்ன கண்ணதாசன் (வி. ராஜன்),
முதலாமாண்டு எம். எஸ்ஸி.
வேளாண்மை.
கோவை—3.





"என்னால் முடிந்தது..."

என் இனிய தமிழனே!
ஓர்
குரங்காய், நானும் பிறந்திருந்தால்,
இந்த இலங்கை
இராவணர்களை,
இருக்குமிடம் தெரியாமல்,
எரித்திருப்பேன்!
— கேவலம்,
ஓர்
மனிதனாய்ப் பிறந்துவிட்ட
காரணத்தால், உனக்காக
என்னால், — இந்த
மௌன ஊர்வலத்தில்
மட்டுமே
செல்ல முடிகிறது!

ஆ. பாலாஜி குமார்,
மூன்றாம் ஆண்டு மருந்தாக்கியல்,
307, மாணவர் விடுதி,
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை—20.

அரசியல்வாதிகள்

இவர்கள் —
நம் கால்களை
உடைத்து விட்டு
பறப்பதற்குச் சிறகுகள்
தருவதாகச்
சத்தியம் செய்பவர்கள்.

இரா. சிவசுப்பிரமணியன்,
முதலாமாண்டு இயற்பியல்,
ஸ்ரீ வாசவி கல்லூரி,
ஈரோடு—16.





வசந்தம்

கனவுகளை நிறைவேற்றக்
கவலைகளை உருவாக்கும்
பெண்ணே! வாழ்வில்
வருவதல்ல வசந்தம்
வசந்தத்தையே வாழ்க்கையாக்கு!


எம். கெஜலட்சுமி,
மூன்றாம் ஆண்டு கணிதம்,
இராணி மேரிக் கல்லூரி,
சென்னை—4.


ஓர் இலங்கை இந்தியனிடம்...

ப்ரிய சோதரா...
என்ன தேடுகிறாய்?
இழந்து போன
சமத்துவத்தையா,
மறைந்து போன
மனிதத்வத்தையா?
உன்
அன்னை பூமியின்
அகராதியில் கூட .
அழிந்து போய்விட்ட
அந்த வார்த்தைகளைத்
தேடிப் பயனில்லை.

உனக்காக
அவற்றை
உருவாக்கு புதிதாய்!

யுக கிரீதன்,
இரண்டாமாண்டு சட்டவியல்,
பி. எம். எஸ். சட்டக் கல்லூரி,
பெங்களூர்—560 019.





பெண்ணின் புலம்பல்

இப்போதெல்லாம்
லஞ்சம் கொடுத்தால்
தேவையான
பட்டம்
கிடைக்கின்றதாம்.
ஆம்!
நாங்கள் கூட
வரதட்சிணை என்னும்
லஞ்சத்தைக் கொடுத்துத்தான்
'திருமதி' என்ற
பட்டத்தைப் பெற்றோம்.
ஆனால்
சின்ன வித்தியாசம்
இந்தப் பட்டத்தினால்
ஒரு வருடத்தில்
வேலை கிடைத்துவிடும்,
'தாய்'
என்ற பெயரில்.

ந. ச. நடராசன்,
இரண்டாமாண்டு பாதுகாப்பியல்,
ஊரீசு கல்லூரி,
வேலூர்—1.

ஆகஸ்டு — 15

சுதந்திர நாளாம்!
யாருக்கு?
முப்பத்தெட்டு ஆண்டுகளாய்
முச்சந்தியிலே நிறுத்தி
சுதந்திரத் தாயை
சூர்ப்பனகையாக்கி வரும்
அரசியல்வாதிகளுக்குத்தான்!
இருட்டில் வாங்கியதால்
அசலை அவர்கள்
மறைத்துவிட்டார்கள்.
நாம் கொண்டாடுவது
நகலைத்தான்
அதனாலென்ன?
வாழ்க சுதந்திரம்.

ஜி. கருணாநிதி,
எம். காம். முதலாண்டு,
அ. அ. அ. சி. கல்லூரி,
செய்யாறு — வ. ஆ. மாவட்டம்.
604 407.



மாணவக் கவிஞர்கள்

உணர்வுகள் உறங்குவதில்லை

18. பரணி கண்ட கனவு

காலையில் பத்திரிகை அலுவலகத்தில் சந்திரசூடன் இருந்தபோது அவரைத் தேடி பரணி வந்தான். அவருடைய அறைக்குள் அவன் நுழைந்த வேகத்தைப் பார்த்துச் சந்திர சூடன் பதறிப் போனார்.

''சார், அதிசயம் சார், அதிசயம் சார்,'' என்று பதற்றமடைந்தவனாய்க் கூவியபடியே அவரிடம் ஒரு வெள்ளிப் பொம்மையை நீட்டினான். கிருஷ்ணனும், ராதையும் இணைந்து நிற்கும் பொம்மை அது. அதை வாங்கிய சந்திரசூடன் அதை உற்றுக் கவனித்துவிட்டு, புரியாமல் அவனை நிமிர்ந்து பார்த்தார்.

''இது சக்திசிவம் கொடுத்தது. கோயிலில் கொடுத்தார்,'' என்றான் பரணி.

சந்திரசூடனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''விபரமாகச் சொல். பயந்து போயிருக்கிறாய் போலிருக்கிறது. என்ன நடந்தது?'' என்று அவனுடைய தோளைப் பற்றி நாற்காலியில் அமர வைத்தார். அவன் சொன்னதைக் கேட்டதும் சந்திரசூடனுக்கு மிகுந்த வியப்புத் தோன்றியது.

அன்று காலையில் பரணி, கல்லூரிக்குச் செல்லும் வழியில், அம்மன் கோயிலுக்குச் சென்றான். காலையில் எழுந்திருந்த போதே அவன் மனநிலை சரியாக இல்லை. இரவில் பரபரப்பான கனவு. யாரோ ஒரு பெண், நிர்வாணமாக அவன் எதிரே நிற்பது போலவும், அவன் ஓடுவது போலவும், அவள் துரத்துவது போலவும் தோன்றியது. முகத்தை உற்றுப் பார்த்தான். பார்வதியின் முகம்! பயந்து போய்க் கைகளால் கண்களை மூடிக் கொண்டான். கண்களைத் திறந்த போது, எதிரே ராதா அக்கா நிற்பது போலிருந்தது. கூசியவனாய் மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். ''ஐயோ, சேலையைக் கட்டிக் கொள்ளுங்கள்,'' என்று அலறினான். மீண்டும் கண்களை விழித்தான். பரத நாட்டிய அரங்கேற்றம் செய்த பெண் நிர்வாணமாக நின்றபடி, அவனைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. சட்டென்று அவள் அவனை ஓட விடாமல் பிடித்துக் கட்டிக் கொண்டு நாட்டியம் ஆடுவது போல் உணர்ந்தான். ''ஓ'' என்று அலறினான்.

தூக்கம் கலைந்துவிட்டது. வியர்த்துக்கொட்டியிருந்தது. உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய அலறலைக் கேட்டு, பார்வதியும் ராதாவும், வெளியே திண்ணைக்கு ஓடி வந்தனர்.

''ஒன்றுமில்லை, ஏதோ கெட்ட கனவு,'' என்றான்.

''என்ன கனவு பயப்படும்படியாக?'' என்று கேட்டாள் ராதா.

''ஏதோ கனவு,'' என்று சமாளித்தான் பரணி. வெளியே கூற முடியுமா? அவர்களை நிமிர்ந்து பார்க்கவே கூசினான்.

அந்தக் கனவின் அர்த்தமென்ன? ஏன் அப்படிக் கனவு வந்தது? கடவுள் சோதிக்கிறார்...?

மனக்கலக்கத்துடன் காலையில் கல்லூரிக்குப் புறப்பட்டவன் மன அமைதிக்காக வழியில் இருந்த அம்மன் கோயிலுக்குச் சென்றான். அம்மனை வணங்கி விட்டுத் திரும்புகையில் உள் மண்டபத்தில் சக்தி சிவம் அமர்ந்திருந்ததைக்கண்டான். சக்திசிவம்ஒருமகான் என்று சந்திரசூடன் அடிக்கடி கூறியிருந்தது நினைவுக்கு வரவே, அவரைத் தரிசித்தால் மனம் அமைதியடையும் என்று எண்ணியவனாய்ச் சக்திசிவத்தை நெருங்கி, அவருக்கு எதிரே போய் அமர்ந்தான்.

அவனைக் கண்டதும் சக்திசிவம் சிரித்தார். பிறகு அவர் பார்வை மூலஸ்தானத்துக்குத் திரும்பியது.

''சுவாமி, எனக்கு அடிக்கடி சோதனை வருகிறது. இரவில் கெட்ட கனவு வருகிறது. என் பிரும்மச்சரியத்துக்குச் சோதனை ஏற்படுகிறது. நீங்கள் ஆசி கூற வேண்டும்,'' என்றான்.

சக்திசிவம் பார்வையை அவன் மீது திருப்பினார். சில விநாடிகள் அவனைக் கூர்ந்து பார்த்தார். பிறகு கடகடவென்று சிரித்தார். பரணி பயபக்தியுடன் அவரை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். அவருடைய மந்தகாசச் சிரிப்பில் அவனுடைய மனம் லயித்தது. சக்திசிவம் சட்டென்று தம்முடைய கையை அவன் முன்னே நீட்டி, மூடியிருந்த விரல்களை விரித்தார். அவருடைய உள்ளங்கையில் பளபளவென்று ஒரு ராதாகிருஷ்ணன் வெள்ளிப் பொம்மை இருந்தது!

பரணி பதற்றமடைந்தான். ஒன்றுமில்லாத அவருடைய கையிலிருந்து திடீரென்று ஒரு வெள்ளிப் பொம்மை தோன்றியதைக் கண்டு அச்சமுற்றான். வியர்த்துக் கொட்டியது. உடல் இலேசாக நடுங்கியது. சக்திசிவம் சிரித்தபடியே கையை நீட்டிக் கொண்டிருந்தார். பரணி பயந்து போய் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தபடி அவரைப் பார்த்தான்.

சக்திசிவம், ''உம்'' என்று முனகினார்.

அவருடைய கையிலிருந்து பொம்மையை எடுத்துக் கொண்டான்.

"இதைஎன்ன செய்ய வேண்டும்? சுவாமி?" என்று பயந்து நடுங்கியபடி கேட்டான்.

சக்திசிவம் கடகடவெனச் சிரித்தார். பிறகு அந்த இடத்தை விட்டு எழுந்து வேகமாகக் கோயிலுக்குள் சென்று விட்டார். அங்கிருந்து ஓடத் தொடங்கிய பரணி, சந்திரசூடனின் அருகில் வந்துதான் நின்றான்—

முதலில் சந்திரசூடனால் இதை நம்ப முடியவில்லை. ஆனால் வெள்ளிப் பொம்மை சாட்சியாக இருக்கிறதே! சக்திசிவம் ஒரு ஞானி, சமாதி நிலையில் ஒன்றிவிடும் ஓர் அநுபூதி மகான் என்பதை ஏற்கெனவே உணர்ந்திருந்தார். ஆனால், இப்படிச் சித்து சக்தி பெற்றவர் என்பதை இப்போது அறிந்த போது, சந்திரசூடனுக்குப் புல்லரித்தது.

சட்டென்று தம்முடைய அறைக் கதவைச் சாத்தி உட்புறம் தாளிட்டார். பரணியிடம் திரும்பி, "இந்த விஷயத்தை நீ வேறு யாரிடமும் சொல்லிவிடவில்லையே?" என்று கேட்டார்.

"ஊஹூம். நேரே இங்கேதான் ஓடிவந்தேன். ஏன் சார்? இதில் ரகசியம் என்ன?" என்று கேட்டான் பரணி.

ர.சு.நல்லபெருமாள்

"இது வெளியே தெரிந்தால் சுவாமிக்கு நிம்மதிபோய்விடும். அவருக்குப்பலசங்கடங்கள் வந்துசேரும். இந்த வெள்ளிப் பொம்மை சித்து சக்தியால் விளைந்தது. நான் சொல்வது புரிகிறதா?" என்றார் சந்திரசூடன்.

பரணி தலையை ஆட்டினான். "நீ இதை இரகசியமாகவே வைத்துக் கொள்ள வேண்டும், என்ன?" என்றார் சந்திரசூடன்.

"சத்தியமாக இதை வேறு யாரிடமும் சொல்ல மாட்டேன் சார்."

"சரி, வா போகலாம். எனக்கு உடனே அவரைப் பார்க்க வேண்டும். எழுந்திரு" என்று பரபரப்புடன் கூறியபடியே வெள்ளிப் பொம்மையை அவனிடம் கொடுத்தார்.

"இந்தப் பொம்மையை ஏன் சார் கொடுத்தார்?" என்று கேட்டான் பரணி. குரலில் பயத்தால் நடுக்கமிருந்தது.

"வா போகும்போதே சொல்கிறேன்," என்றவாறே அறைக் கதவைத் திறந்தார்.

சந்திரசூடன் மௌனமாக நடந்து கொண்டிருந்தார்.



''ஏன் சார் இப்படியெல்லாம் கனவுகள் தோன்றுகின்றன?'' என்று கேட்டான் பரணி.

''எப்போதும் செக்ஸ் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாய்.''

''நானா?'' பதறிப் போய்க் கேட்டான் பரணி.

''பின்னே? பிரும்மச்சரியம் பிரும்மச்சரியம் என்றுதானே சதா புலம்பிக் கொண்டிருக் கிறாய். இது, செக்ஸ் பற்றிய நினைப்புத்தான். செக்ஸ் விஷயத்தில் இது நெகடிவ் அப்ரோச். வேறென்ன?''

''நான் பிரும்மச்சாரி இல்லை என்கிறீர்களா?'' என்று கோபத்துடன் கேட்டான் பரணி.

''இருந்துவிட்டுப் போயேன். வாழ்க்கையிலேயே இது ஒன்றுதான் மிகப் பெரிய விஷயம் என்று எண்ணிக் கொண்டு, அதுபற்றியே சதா பயந்து பயந்து சாகிறாய்.

''முன் ஜாக்கிரதையாக இருப்பது தவறா?''

''உனக்கு இன்னும் உன் மீதே நம்பிக்கை வரவில்லை. கனவில் நிர்வாணமாக ஒரு பெண் வருகிறாள் என்றாயே, என்ன அர்த்தம்? பெண்ணின் உடலைப் பற்றிய சிந்தனையில் எப்போதாவது ஈடுபட்டிருந்திருப்பாய். அல்லது ஒரு பெண்ணை நிர்வாணமாகக் கண்டிருப்பாய். கனவு என்பது எண்ணங்களின் நிழல் தான்.''

இதைக் கேட்டதும் பரணி துணுக்குற்றான். முந்தநாள் இரவு, பார்வதியின் வீட்டு சன்னல் வழியாகக் கண்ட சம்பவம் நினைவில் வந்தது.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை சார்,'' என்றான் படபடப்புடன்.

''இல்லை என்று சொல்லிவிட்டால் போதுமா? உன் மனத்தில் பதிந்திருப்பது உனக்குத் தெரியாது. வெளியே பிரும்மச்சரியம் பற்றிச் சதா புலம்புகிறாய். அதனுடைய எதிரொலியாக உன் மனத்தில் பெண்ணின் நினைவு பதிகிறது.''

''அப்படிப் பதிந்திருந்தால் எப்படி நீக்குவது? உள் மனம் பற்றிய உணர்வு நமக்கு இருப்பதில்லையே?''

''அதற்கு ஒரே வழி ஆசைகளை எதிர்த்துப் போராடாமல் பூரணமாக அவற்றிற்கு இணங்கிவிடுவதுதான். எப்போது எதிர்ப்பு இல்லையோ ஆசைகள், தாமே அடங்கி ஓய்ந்து விடும்.''

''ஐயோ, நீங்கள் என்ன சார், என்னைத் திசை திருப்புகிறீர்கள்? என் விரதம் என்னாவது?'' என்று படபடப்புடன் கேட்டான் பரணி.

''நான் சொல்வதைத்தான் சக்திசிவமும் உனக்கு உணர்த்தியிருக்கிறார்.''

''ஓ...!''

''ஆமாம். அவர் உனக்கு ராதாகிருஷ்ணன் பொம்மையைக் கொடுத்தாரே, ஏன்? ராதையும் கிருஷ்ணனும் அணைத்த வண்ணமிருக்கும் இந்த சிருங்காரப் பொம்மையைக் கொடுப்பானேன்? ஐயப்பன் பொம்மை

யையோ, பிள்ளையார் பொம்மையையோ ஏன் கொடுக்கவில்லை?" என்றார் சந்திரசூடன்.

"சார், கிருஷ்ணன் கீதையைச் சொன்னவன். கீதையில் சொன்னபடி வைராக்கிய புருஷனாயிரு என்று உணர்த்தியிருப்பார்." என்றான் பரணி.

சந்திரசூடன் சிரித்தார். "அப்படியானால், வெறும் கிருஷ்ணன் பொம்மையை அல்லவா கொடுத்திருந்திருக்க வேண்டும். ராதையும் கிருஷ்ணனும் காதல் லீலை புரியும் பொம்மையைக் கொடுத்திருக்க வேண்டாமே," என்றார்.

அப்போது இருவரும் கோயிலை நெருங்கியிருந்தனர்.

"சரி, இதுபற்றி சுவாமியிடமே கேட்போம்," என்றவாறே சந்திரசூடன், கோயிலுக்குள் விரைந்து சென்றார்.

உள் மண்டபத்தில் சக்திசிவம், பத்மாசனத்தில் அமர்ந்தவாறு கர்ப்பக்கிருஹத்தை நோக்கி, அம்மனின் உருவத்தில் லயித்திருந்தார். அம்மன் சர்வாலங்கார பூஷிதையாய் ஜொலித்தாள்.

சந்திரசூடன் வாங்கிக் கொடுத்திருந்த ஜரிகை இழைத்த விலை உயர்ந்த திருப்புவனம் பட்டுப்புடவை, அம்மனை ஒரு மணப் பெண்ணாகவே ஆக்கியிருந்தது.

இரண்டு நர்ட்களுக்கு முன் சக்திசிவம், "என் கண்ணம்மாவிற்குக் கல்யாண நாள் நெருங்குகிறது. மணப்பெண்ணிற்குப் பட்டுப் புடவை வேண்டும்," என்றார்.

சந்திரசூடன் உடனே ஒரு பட்டுப்புடவையை வாங்கிக் கொடுத்தார். அதுதான் அப்போது அம்மனை அலங்கரித்தது.

சக்திசிவம் மிகுந்த உற்சாகத்திலிருந்தார். முகத்தில் என்றுமில்லாத தேஜஸ். கோடி வேட்டி அணிந்திருந்தார். மார்பிலும் கைகளிலும் சந்தனம் பளிச்சென்றிருந்தது.

சந்திரசூடன், மிகுந்த பயபக்தியுடன் சக்திசிவத்திற்கு அருகே போய் அமர்ந்தார். பரணி அவருக்குப் பின்னால் பயந்தபடியே அமர்ந்து கொண்டான். சந்திரசூடனைத் திரும்பிப் பார்த்த சக்திசிவம், ஒரு குழந்தையைப் போல் மலர்ந்து சிரித்தார்.

"சுவாமி, இன்றைக்கு என்ன விசேஷம்?" என்று கேட்டார் சந்திரசூடன்.

"இன்றைக்குத்தான் எங்களுக்குக் கல்யாணம். பிரமாதம் போ!" என்று இரு கைகளையும் விரித்து அம்பாளைக் காட்டினார் சக்திசிவம்.

"கல்யாணமா? என்னிடம் சொல்லவே இல்லையே."

"கல்யாணத்திற்குத்தானே கோடி வேட்டியும் புடவையும் கேட்டேன். நீதான் வரலை. ஆனால் அத்தனை பேரும் வந்திருந்தா. ரிஷிகளெல்லாரும் வந்திருந்தா. தேவர்களெல்லாரும் வந்திருந்தா. நீதான் வரலை. எங்கே போயிட்டே?"

சந்திரசூடனுக்குப் புல்லரித்தது.

(தொடரும்)



விவரமறிந்தோர் நாடுவது
ஆஸ்ப்ரோ ஆறுதல்
இப்போது 2 வித வீரிய வகைகளில் வருகிறது.
ஆஸ்ப்ரோ , ஆஸ்ப்ரோ 600
சாதாரண தலைவலிக்கு
மண்டை பிளக்கும் கடுமையான தலைவலிக்கு
ASPRO
ASPRO 600
ஆஸ்ப்ரோ
எக்ஸ்ட்ரா ஸ்ட்ரெங்த்
ஆஸ்ப்ரோ 600



ஸ்டெபகம் கருவியுடன் அதனைக் கண்டுபிடித்த குழந்தை ஆனந்தன்.

ஈரோட்டில் ஓர் இளம் விஞ்ஞானி

ஃபியூஸ் போய் விட்டதா? பட்டன் ஸ்விட்சை அழுத்துங்கள், ஒரு நிமிடத்தில் தானே ஃபியூஸ் போடும் இந்த அற்புதக் கருவி! அடுத்த கணம் பளிச்சென்று விளக்கெரியும்!

ஈரோட்டில் பெரியார் நகரில் பதினெட்டு வயது நிரம்பிய பதினொன்றும் வகுப்பு படிக்கும் டி. குழந்தை ஆனந்தன், தானாகவே ஃபியூஸ் போடும் இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார். ஒருமுறை, இரண்டு முறையல்ல, 24 தடவை ஃபியூஸ் போட்டுக் கொள்ளும் வகையில் இந்த இயந்திரத்தினை இவர் உருவாக்கியுள்ளார்!

இந்த ஆட்டோமேடிக் ஃபியூஸ் கேரியரின் பெயர் 'ஸ்டெபகம்.'

குழந்தை ஆனந்தன் கூறுகிறார்:

"வீட்டில் கரண்ட் கட்டானவுடன் ஃபியூஸ் போயிருக்கிறதா என்பதைக் கண்டறிய போர்டில் உள்ள இரண்டு இண்டிகேட்டர் விளக்குகள் உதவுகின்றன. வீட்டினுள் ஃபியூஸ் போய் விட்டால் இடதுபக்கம் உள்ள சிவப்பு விளக்கு உடனே எரியும். இதன் மூலம் வீட்டில்தான் ஃபியூஸ் போயிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம். வலது பக்கம் உள்ள மஞ்சள் விளக்கு — வீட்டிற்கு மின்சாரம் வரும் கம்பத்தில் ஃபியூஸ் போய் விட்டால் உணர்த்தக் கூடியது. மின்சாரம் உள்ள நேரத்தில் இந்த விளக்கு எரிந்து கொண்டிருக்கும். கம்பத்திலேயே ஃபியூஸ் போய் விட்டால் இந்த விளக்கு எரியாது.

"ஃபியூஸ் பாபின் என்பது பியூஸ் வயர்கள் இணைக்கப்பட்டுள்ள ஒரு பகுதி. இதில் 24 ஃபியூஸ் வயர்கள் துல்லியமாக இணைக்கப்பட்டுள்ளன. எனவே இதை 24 தடவை ஃபியூஸ் போடப் பயன்படுத்திக் கொள்ளலாம். 24 தடவையும் ஃபியூஸ் போட்ட பிறகு இதே போன்ற இன்னொரு ஃபியூஸ் பாபினை வாங்கி மாட்டிக் கொள்ளலாம். இந்தக் கருவி நடைமுறைக்கு வரும்பொழுது - அனைவரும் வாங்கும் வண்ணம் குறைந்த விலையில் விற்பனைக்குத் தர முடியும்.

பாபின் தீர்ந்துவிட்ட நேரத்தில் புதிய பாபினைப் பொருத்த, மின்சார இணைப்பைத் துண்டித்துவிட்டுச் செயல்படுவதற்காக ஒரு மெயின் சுவிட்ச் அமைந்துள்ளது.

பெரிய தொழிற்சாலைகளுக்கும், வீடுகளுக்கும் ஏற்ற, அபாயம் இல்லாத ஒரு எளிய கருவி இது.

கேள்வி: "இந்தக் கருவியை எதை ஆதாரமாக வைத்துக் கண்டுபிடித்தீர்கள்?"

கு. ஆனந்தன்: "ஒருநாள் என் தந்தை என்னிடம் வந்து, 'வெளிநாடும், இந்தியாவும் சேர்ந்து மோட்டார் டியூப் பங்சராகிவிட்டால் தானாகவே பங்சர் ஒட்டிக் கொள்ளும் ஒரு பசையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்' என்று கூறினார். அப்போது, 'இதையே இந்தியா மட்டும் கண்டுபிடித்திருந்தால் இந்தியாவுக்குப் பெருமையாக இருக்குமே' என்று நினைத்தேன். அதோடு, நாமும் ஏதாவது ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும்' என்று தோன்றியது. அப்போது என் எதிரில் ஃபியூஸ் கேரியர் தென்பட்டது. அதன் விளைவுதான் இந்தக் கருவியைக் கண்டுபிடித்தேன்."

கேள்வி: "அது சரி, நீங்கள் ஏன் இந்தக் கருவிக்கு "ஸ்டெபகம்" என்ற ஆங்கிலப் பெயரை வைத்தீர்கள்?"

கு. ஆ.: "அதுவா?" (சிரிக்கிறார்). "எனது ஊர், என் தந்தை, சகோதர, சகோதரிகள், தாய், நான் எல்லோருடைய பெயர்களின் முதல் எழுத்தைச் சேர்த்துப் பெயர் சூட்டியுள்ளேன்!"

பெங்களூரில் தென் மண்டல அறிவியல் கண்காட்சி நடந்த போது குழந்தை ஆனந்தன் கண்டுபிடித்த "ஸ்டெபகம்" இடம் பெற்று அதற்கு அரசு, உதவித் தொகையும், சான்றிதழும் கொடுத்துப் பாராட்டி இருக்கிறது.

கேள்வி: "இந்த அரிய கண்டுபிடிப்பைப் பற்றி நமது அரசுக்குத் தெரியப்படுத்தினீர்களா?"

கு. ஆனந்தன்: "தெரியப்படுத்தினேன். ஆனால் இதுவரையில் எந்தப் பதிலும் இல்லை. தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களுக்கும் தற்போது தெரியப்படுத்தி விவரமாகக் கடிதம் எழுதி இருக்கிறேன். ஆனால் இதுவரையில் அவரிடமிருந்தும் பதில் இல்லை!"

குழந்தை ஆனந்தன் சிறப்பாக ஊக்குவிக்கப்பட்டால் இவரது எதிர்காலம் மட்டுமல்ல; இவரை ஊக்குவிக்கிறவரின் எதிர்காலமும் பிரகாசமாயிருக்கும்! ஊக்குவிக்கப்படாவிட்டால் நஷ்டம் அவருக்கல்ல, நாட்டுக்கே!

பேட்டி: மேஜர்தாசன்.

படம்: கற்பகம் போட்டோஸ்.

"வார்டன் மிஸ்... வார்டன் மிஸ்..."

படபடத்த கதவு அதிர்வும், ஏகோபித்த குரல் ஒலிகளும் சகுந்தலாவைத் திடுக்கிட்டு விழிக்க வைத்தன.

"எஸ்... கமின்..."

உதறி எழுந்து, கதவைத் திறந்து, எதிரில் நின்றவளிடம், "வாட் விஸ்லி...? வாட் ஹேப் பண்ட்?" எனப் பதற்றத்துடன் கேட்டாள்.

"மைதிலி பாய்சன் குடிச்சிட்டா...வாமிட் பண்ரு மிஸ்..."

அரை இருட்டில் கதவுக்கு வெளியே இன்னும் நான்கைந்து பெண்கள் தென்பட்டார்கள்.

சகுந்தலாவுக்கு அடி வயிறு சில்லிட்டது.

"மைகாட்... எங்கே?"

"பி பிளாக் மிஸ்... ரூம் நம்பர் லெவன்."

கடவுளே! இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? புத்திக்கு ஒன்றும் எட்டவில்லை. மனமும், உடலும் சம்பந்தமின்றிச் செயல்பட்டன.

தகவல் சொன்ன பெண்களுடன் தானும் ஓடினாள்.

அந்நேரத்தில் ஹாஸ்டல் விழித்திருந்தது. வெளிச்சமும், தன்னைத் தொடர்ந்து வரும் காலடி ஓசைகளும் இரவின் அமைதியில் விகாரமாகத் தெரிந்தன.

பாவிப் பெண், மனத்தை விட்டு விட்டாளா?

"பன்னிரண்டு மணி வரைக்கும் பேசிக்கிட்டு இருந்தோம் மிஸ். அப்பாவையும், எதிர்காலத்தையும் நினைச்சுப் புலம்பிக்கிட்டு இருந்தா. தைரியம் சொல்லிப் படுக்க வச்சோம். அரைமணி நேரம் கூட இருக்காது. பாத்ரூமில் வாமிட் சத்தம். போய்ப் பார்த்தா டாய்லட் க்ளீனரைக் குடிச்சிட்டு..."

பி பிளாக்கிலும் நிறையக் கூட்டம். கசமுசவென்ற பேச்சொலி. அவளைக் கண்டதும் 'சட்'டென்று அடங்கி, ஒற்றையடி வழி ஒதுக்கியது.

அறைக்குள் மைதிலியை இரண்டு, மூன்று பெண்கள் தாங்கிப் பிடித்திருந்தார்கள். ரொம்பவும் களைப்பாகத் தெரிந்தாள்.

"மைதிலி... என்னடி இப்படிப் பண்ணிட்டே?"

அவளைப் பார்க்கச் சகுந்தலாவிற்கும் கலங்கிக் கொண்டு வந்தது.

இவள் இப்படியொரு முடிவைத் தேடியதற்குத் தானும் ஒரு காரணமா?

"ஆர் யூ ஷ்யூர் மிஸ் சகுந்தலா...? அந்தப் பையன் அவளைத்தான் பார்க்க வந்தான்னு உறுதியா நம்பறீங்களா...?" — கரஸ்பாண்டெண்டின் கேள்வி.

"யெஸ் சார்... விசிட்டர்ஸ் புக்கில் கையெழுத்து வாங்கிட்டுத்தான் அலவ் பண்ணினேன்... இதோ,...

பத்துப் பன்னிரண்டு கரங்கள் நகர்ந்து தூக்கி நிறுத்தியபோது, மைதிலி இன்னும் சுயநினைவுடன்தான் இருந்தாள். அடி வயிற்றில் பிசைந்த வலியை விட, அவர்கள் செய்யும் முயற்சிகள் அவளை அதிகம் இம்சித்தன.



தன்னைக் காப்பாற்றி விடுவார்களா? எதற்காக? உயிரோடு அப்பாவிடம் ஒப்படைத்து அவரைக் கொலைகாரனுக்கவா?

அந்நேரத்தில் டாக்டர் இருந்தது அதிசயம்தான்.

மாணவி என்பதாலோ என்னவோ விசேஷ கவனம் எடுத்துக் கொண்டார்கள்.

அவளைப் பொறுத்த வரை மைதிலி பிழைத்து வந்தாலும் நிர்வாகம் சும்மா விடப் போவதில்லை.

திறமைக் குறைவு —

ஹாஸ்டலை ஒழுங்காகக் கண்காணிக்கவில்லை —

அஜாக்கிரதை —

வேலைக்குச் சேர்ந்த அன்றைக்குக் கரஸ்பாண்டெண்ட் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

"ஒவ்வொரு பெண்ணின் மனசிலும் ஒரு சைத்தான் இருக்கும். கொஞ்சம் ஏமாந்தாலும் போச்சு. இன்ஸ்டிடியூஷன் பெயரைக் காப்பாத்தறது நம்ம ஜாக்கிரதையில்தான் இருக்கு."



சகுந்தலாவும் இதை நிஜமென்றுதான் வெகுகாலம் வரைக்கும் நம்பிக் கொண்டிருந்தாள். அவளைப் பொறுத்தவரை சந்தேகத்திற்குரிய பெண்களுக்குச் சில அடிப்படைகள் இருந்தன. உரக்கச் சிரிக்கிறவர்கள். தன் அழகில் அதீதமாக அக்கறை காட்டுகிறவர்கள். எப்போதோ ஒருதரம் திரும்பிப் பார்த்தவனை, எப்போதும் பேசிக் கொண்டிருக்கிறவர்கள்.

அந்த நம்பிக்கையை முதலில் உடைத்தவள் மீனாட்சி. ஆசாரமான குடும்பத்துப் பெண். மஞ்சள் பூசிக் குளித்து விட்டுத்தான் காலேஜிற்கே வருவாள். தன் படிப்பு, சாப்பாடு, உறக்கம் என்பதைத் தவிர வேறெதிலும் ஈடுபாடு கிடையாது. அரை ஆண்டு லீவில் ஊருக்குப் போனவள் திரும்பி வரவில்லை. அவளது பெற்றோர் தேடிக் கொண்டு வந்த போதுதான், தனக்குப் பிரியப்பட்ட ஒருத்தனை ரிஜிஸ்தர் ஆபீஸில் கல்யாணம் செய்து கொண்டது தெரிய வந்தது.

அதை அடுத்து ரம்யா, ஸ்டெல்லா, பேபி மாலதி என வருஷத்திற்கு ஒருத்தியாய்...

ஐந்நூறுக்குமேல் படிக்கிற இடத்தில் சில பெண்களின் ஒழுக்கம் மீறப்படுவது சகஜம் தான். ஆனாலும் எப்படி அவர்கள் மட்டும் பலியாகி விடுகிறார்கள்? ஹாஸ்டல் கட்டுப்பாடுகளுக்குப் பெயர் போனது. சுற்றிலும் உயரமான காம்பவுண்டு, இரும்புக் கதவுகள். காற்றில் சிறிது அசைந்தாலும் "யாரது?" என்று கேட்கிற வாட்ச்மேன். வார்டனின் உத்திரவு இல்லாமல் வெளி ஆள் உள்ளே வர முடியாது. எப்படி இவர்களுக்கு மட்டும் மன்மதன் அமைகிறான்? மனம் பழுதடைகிறது?

ஒருதரம் சோப்பு விற்க வந்த ஸ்டெல்லா கேட்டாள்.

"ஏங்க மிஸ்... இப்பல்லாம் உங்க காலேஜில் இம்மாரல் ஆக்டிவிடீஸ் நின்னுடுச்சா... எந்தப் பெண்ணும் எந்தப் பையனையும் பார்க்கிறது இல்லையா?"

"எங்கேடி... அதிகமாயிருச்சு. இந்த வருஷமே ரெண்டு கேசு..."

"பலன் இல்லாத நிலையில் எங்களை மட்டும் ஏன் வெளியே அனுப்பினீங்க... நல்ல சோப்பு கொண்டு வரட்டும்னு?"

பொட்டில் அடித்த மாதிரி இருந்தது.

"காலம் பூராவும் சிலுவையைச் சுமக்க வச்சுட்டீங்களே மிஸ்..." குரல் தழுதழுத்தது. கண்ணீர் துளிர்த்து நின்றது.

துடிப்பும், கலகலப்பும் நிறைந்த அவளது பழைய முகம் ஞாபகத்திற்கு வர, சகுந்தலாவிற்கும் வருத்தமாக இருந்தது.

"யோசிச்சுப் பார்த்தா யாரையும் குற்றம் சொல்ல முடியாது. காதல்ங்கிற அசட்டுத்தனம் எல்லாத் திசைகளிலும் புனிதமாகத் தான் காட்டப்படுது — நிஜ வாழ்க்கையைத் தவிர. உங்க கரஸ்பாண்டெண்ட் பத்திரிகைகள், சினிமாவெல்லாம் பார்க்கிறது இல்லையா மிஸ்...?"

மனத்தில் விளக்கு ஏற்றிய மாதிரி இருந்தது. தான் தேடிய கேள்விகளுக்கு இவளல்லவா விடை சொல்கிறாள்?

"இதை ஒரு நோயாக நீங்க நினைச்சா அதற்கான ஊற்றுக்கண் வீட்டிலோ, ஹாஸ்டல்களிலோ இல்லே. வெளியே—சமூகத்தில், நாலு பேர் கூடுகிற இடத்தில். படிக்கிற எழுத்தில், பார்க்கிற சினிமாவில், பொழுது போக்கு சங்கதிகளில் இருக்குங்க மிஸ்... உங்க ஹாஸ்டல் கதவைப் பூட்டி வைக்கிறதால மட்டும் அவைகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திட முடியும்னு நினைக்காதீங்க... ப்ளீஸ்..."

ஸ்டெல்லா சென்று வெகு நேரமாகியும் சகுந்தலா அதையே யோசித்துக் கொண்டிருந்தாள். ஒரு சமூகப் பிரச்னையை எவ்வளவு எளிமையாக விளங்க வைத்துவிட்டுப் போகிறாள். இவளையா வெளியே அனுப்பினேன்? இவளைப் போல எத்தனைப் பெண்கள்...?

அடுத்த ஸ்டாஃப் மீட்டிங்கில் சகுந்தலா அதுவரை யாரும் பேசியிராத கருத்தைச் சொன்னாள். "இட் ஈஸ் எ சோஷியல் ப்ராப்ளம். நம்ம கையில் பிரம்பை வச்சிகிட்டு அலையறதால மட்டும் தடுத்துவிட முடியாது.."

கரஸ்பாண்டெண்டிற்குக் கோபம் வந்து விட்டது.

"கையில பிரம்பை வச்சுக்கிட்டுச் சும்மா அலைஞ்சாப் போதாது. அடிக்கணும்., கட்டுப்பாட்டை அதிகப்படுத்துங்க. இனி அப்படி ஒரு கேஸ் வருதான்னு நான் பார்க்கிறேன்."

இனி என்ன செய்யப் போகிறார்கள்?

படக்கென்று நினைவு திரும்பிய போது தான், தான் இன்னும் சாகாமல் இருப்பது மைதிலிக்குத் தெரிந்தது.

வயிற்றில் நெருப்பை மூட்டிய மாதிரி இது என்ன எரிச்சல்.

தலைக்கு மேலே ஸ்டேண்ட்களில் தலை கீழாக மருந்துத் திரவங்கள். ஊசி முனைகளில் சொட்டுச் சொட்டாய் இறங்க... மூக்கினுள் ஏதோ டியூப். ஆக்ஸிஜனா?

தன் சம்மதம் இல்லாமல் இவர்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள்? பிரியம் கொள்ளுவதையே பாவமாகக் கருதும் இவர்களுக்குத் தனது முடிவில் தலையிடுவதற்கு மட்டும் என்ன உரிமை?

நேற்று மதியம் பிரின்ஸிபாலின் எதிரில் ஒரு பிச்சைக்காரியைப் போல் கெஞ்சிக் கொண்டு நின்றது ஞாபகத்திற்கு வந்தது. அழுகையில் வீங்கிய கண்களையும், உடைந்த குரலையும் ஒரு பொருட்டாக நினைத்தாளா? ஒரே வார்த்தை.

"உன்னால் மற்ற பெண்களும் கெட்டுப் போறதை அனுமதிக்க முடியாது. நீ போகலாம்."

காலேஜை விட்டு நீக்கப்படுவாளெனில் ஏற்படப் போகும் விளைவுகள் பயங்கரமானவை.

பிரபுவால் நிச்சயமாக அவளைக் காப்பாற்ற முடியாது. தனது படிப்பிற்கே மாமா

வின் தயவை எதிர்பார்த்திருக்கும் அவனிடம் என்ன உதவியை எதிர்பார்க்க முடியும்?

"சாரி மைதிலி... தைரியமா இரு. என் படிப்பு முடிஞ்சதும் ஒரு வேலையைத் தேடிக் கிட்டு நிச்சயமா உன்னையே கட்டிக்க றேன்."

குடும்பத்திலும் தன்னை யார் ஏற்றுக்கொள் வார்கள். அப்பா இருக்கட்டும். அம்மா, அண்ணன், தங்கைகள், ஊரார்... கட வுளே!

"மன்னிச்சுக்குங்க மேடம்... என் தவறை உணர்கிறேன். இனி என் வாழ்நாளில் என் றைக்குமே இப்படி ஒரு..."

"ஷட் அப்... முதல்லியே இந்த அறிவு வேணும். கரஸ்பாண்டெண்டுக்குப் பதில் சொல்லவேண்டியவநான். உன்னுலகாலேஜ் பெயர் கெட்டுப் போகணுமா? உங்க அப்பா வுக்குத் தந்தி குடுத்திருக்கு. வந்ததும் ஹாஸ் டல் கணக்கை செட்டில் பண்ணிவிட்டுக் கிளம்பு. ஊருக்குப் போய், அவனையோ, வேற எவனையோ கட்டிக்க. அப்புறம் எங்க வேணு சுத்து. இல்ல... புள்ளைகளைப் பெத்துக் கிட்டு வீட்டோட இரு. அதுக்குத்தான் நீ லாயக்கு..."

அழுகைக்குக் கூடத் தெம்பில்லாமல் மனம் வற்றி விட்டது.

"மேடம்... மேடம்... ப்ளீஸ்..."

"நோ எக்ஸ்கியூஸ்... யு கேன் கோ..."

இவர்கள்தான் தன்னைக் காப்பாற்றப் போகிறார்கள்.

தான் ஏதோ ஜெயித்துவிட்ட மாதிரி சன்ன மான திருப்தி நிறைந்தது. தன்னை விடு வித்துக் கொள்ள வேண்டும் என்கிற வெறி மீண்டும் ஆவேசமாகக் கிளம்பியது. பலவீ னத்துடன் கண்கள் சரிய, முகத்தின் எதிரே — "பிரபு... பிரபு..." என முணுமுணுத்தபடி மெல்லக் கிறங்கினாள். நினைவு முற்றிலுமாகச் சரிவதற்குள் கைகளை மெதுவாக உயர்த்தி, முகத்தில் பதிந்த ஆக்ஸிஜன் டியூபை வலு வாகப் பற்றி இழுத்தாள்.

அடுத்த கணமே மூச்சுத் திணறி, நெஞ்சில் பாரம் அழுத்த...

"**ஹேர்** சஸ் மிஸ் சகுந்தலா?"

பிரின்ஸிபாலின் குரலைக் கேட்டதும் சகுந் தலா திடுக்கிட்டு எழுந்தாள். விடிந்திருந்தது. வெளிச்சத்தில் கண்கள் கூசின. இவ்வளவு நேரம் தூங்கிக் கொண்டா இருந்தோம்?

அதிகாலையில் சீஃப் டாக்டர் வந்து பார்த்து விட்டு, "எங்களால் ஆனதை செஞ்சுட் டோம். எதுக்கும் த்ரீ அவர்ஸ் கழிச்சுத்தான் சொல்ல முடியும். லெட் ஹர் டேக் ரெஸ்ட். நீங்கள்லாம் வெளியே இருங்க... ப்ளீஸ்..." என்று சொன்னார்.

துணைக்கு வந்த மாணவிகளை ஹாஸ்ட லுக்கு அனுப்பிவிட்டு, வராந்தாவின் ஒரு

மூலையில் கிடந்த பெஞ்சில் வந்து அமர்ந்து கொண்டாள். அசதியிலும், கவலைகளிலும் மனம் எங்கெங்கோ இழுபட்டு, இப்படி ஒரேயடியாய்த் தூங்கி, பிரின்ஸிபாலே வந்து தேடும்படியாய்...

தனக்கு ஏதோ சனியன் பிடித்திருக்கிறது என நிச்சயமாகத் தெரிந்தது.

முகத்தைத் துடைத்து உடையைச் சரி செய்வதற்குள் பிரின்ஸிபாலே எதிரில் வந்தாள். அவளுடன் நான்கைந்து மாணவிகள், இரண்டு உதவிப் பேராசிரியர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர், கருப்புக் கோட்டு அணிந்த வக்கில் மாதிரி... மாஜிஸ்திரேட்...?

மைதிலி செத்துப் போவாள் என்று நினைக்கிறார்களா...? வாக்குமூலம் வாங்க என்ன அவசரம்? விசாரணை, வழக்கு நடத்தித் தன்னை தூக்கில் போடுவார்களா? தன்னை மட்டும் தானா? பிரின்ஸிபால், கரஸ்பாண்டெண்ட்,...

"அஜாக்கிரதையின் காரணமாக ஒரு இளம் மாணவியின் உயிர் போகக் காரணமாக இருந்த உங்கள் அனைவ..."

"மேடம்... நீங்க எல்லோரும் கொஞ்ச நேரம் வெளியே இருக்க முடியுமா?"

போலீஸ் அதிகாரி மாஜிஸ்திரேட்டின் முகத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னார். "வாக்கு மூலம் வாங்கும் போது மத்தவங்க யாரும் இருக்கக் கூடாதுங்கிறது ரூல்..."

மைதிலியின் முகத்தைத் திறந்திருந்த ஜன்னல் வழியாகப் பார்த்துவிட்டு மற்றவர்கள் நகர, சகுந்தலா மட்டும் நின்றாள்.

உள்ளே இரண்டு டாக்டர்களும், சில நர்ஸ்களும், மைதிலியைச் சுற்றி நின்றிருந்தார்கள். எனி திங் சீரியஸ்? எதற்கு இத்தனை பேர்?...

"எல்லோரும்ங்கிறது உங்களையும் சேர்த்துத்தான்" என்றார் அதிகாரி.

இளம் நர்ஸ் ஒருத்தி புன்னகை செய்தாள்.

"இவங்கதான் அந்த ஹாஸ்டல் வார்டன்."

"ஐ... ஸீ..."

இன்ஸ்பெக்டர் கண்களால் அவளை அளந்தார்.

பிரின்ஸிபால் அவளை ஜாடையில் கூப்பிட்டாள்.

"நீங்க இவ்வளவு அஜாக்கிரதையா இருப்பீங்கன்னு நினைக்கலை... ஹாஸ்டலை நம்பி ஒப்படைச்சதுக்கு நல்ல பலன் இது..."

"......"

"டாக்டர் என்ன சொல்றார்? பிழைச்சுப்பாளா?"

"மூணு மணிநேரம் கழிச்சுதான் எதுவும் சொல்ல முடியும்ங்கிறார்."

"என்கிட்டயும் அதான் சொன்னார்." என்ற பிரின்ஸிபால், சற்று அடங்கி, "கரஸ்பாண்டெண்ட் மெட்ராஸ் போயிருக்கார். டிரங்கால் போட்டுப் பேசிட்டுத்தான் வர்றேன். அதான் லேட்..."

"......"

"அவர் உன் மீது ரொம்பக் கோபமா இருக்கார் சகுந்தலா..."

"நான் என்ன செய்ய முடியும் மேடம். அவளுக்கு எவ்வளவோ அட்வைஸ் பண்ணியிருக்கேன். அசம்பாவிதங்களைத் தவிர்க்கிற நோக்கத்தோடுதான் அவளை பி ப்ளாக்கிற்கு மாத்தி சீனியர் மாணவிகளோடு தங்க வைத்தேன். எல்லா முயற்சிகளையும் மீறி இது நடந்திருக்கு!"

பிரின்ஸிபால் அவளது விளக்கத்தில் அக்கறை காட்டவில்லை.

"மேடம்... இதுபோன்ற பிரச்னைகளை நம்ம கண்டிப்பினால் மட்டும்..."

"ஸ்டாப் திஸ் ஹாஸ் டாக்கிங் ஃபார்ஸ்ட்..."

பிரின்ஸிபாலின் முகத்தில் முன்னைவிட அதிக வெறுப்பு இருந்தது.

"முதல்ல இங்கிருந்து போங்க. கரஸ்பாண்டெண்டைச் சமாதானப்படுத்தற மாதிரி எதையாவது செய்யுங்க..."


அவள் திரும்பவும் அதைச் சொன்னபோது சகுந்தலாவுக்குக் கிலியடித்தது.

தனது முதல் தேதி மணியார்டரை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அம்மா, இரண்டு தங்கைகள், பால்காரன், மளிகைக் கடைக்காரன்...

"ஆண்டவனே இந்தச் சிக்கலில் இருந்து என்னைக் காப்பாற்று..."

அவளது பிரார்த்தனை மேலே எட்டுவதற்குள், மைதிலியைக் கிடத்தியிருந்த அறைக் கதவு திறந்தது.

கலவர முகத்துடன் நர்ஸ் ஒருத்தி அவர்களை நோக்கி ஓடிவந்தாள்.


ஆச்சர்யம்! முயலு எப்படி இவ்வளவு பின்தங்கிப்-போச்சு. அது, ஆமைக்கு முன்னலேயே ஓடிவந்திருக்கணுமே.
அதுவா? அது... கொசுக்களிடம் மாட்டிக்கிச்சு. எப்படி ஓடமுடியும்?
FINISH
உபயோகியுங்கள் டார்டாய்ஸ் கொசுவர்த்திச்சுருள்.
மிகவும் பின்தங்கச் செய்யுங்கள் கொசுக்களை.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

“கல்கி”

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	78—00
ஆறு மாதச் சந்தா	ரூ.	39—00

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா	ரூ.	190/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	95/-

“மங்கையர் மலர்”

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	36/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	18/-

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா	ரூ.	86/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	43/-

“கோகுலம்”

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	24/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	12/-

வெளிநாடு கப்பல் தபால் மூலம்

ஆண்டுச் சந்தா	ரூ.	70/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	35/-

சந்தா தொகையை M.O. அல்லது I.P.O. அல்லது டிமாண்டு டிராப்டு மூலம் அனுப்ப வேண்டுகிறோம்.

மானேஜர் * கல்கி * சென்னை-600032



யாளர் கலியாணசுந்தரம் சொல்கிறார்:

"ஒய். எம். ஸி. ஏ. வில் பார்வையில்லாதவர் பள்ளி ஆசிரியர்களுக்கான நூறு நாள் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. பல்வேறு பார்வையற்றோர் பள்ளிக்கூடங்களிலிருந்து ஆசிரியர்களும், ஆசிரியைகளும் வந்து இப்பயிற்சியைப் பெறுகிறார்கள்.

கண் பார்வை இழந்தவர்களுக்கு எப்போதுமே ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை உண்டு. அவர்கள் அப்படி இல்லாமல், தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டுமென்றால், பிறர் உதவியின்றிப் பல இடங்களுக்கும் செல்ல வேண்டும். இதற்கென அவர்களை நன்றாகப் பயிற்சி பெறச் செய்ய வேண்டும். எனவே பார்வை இழந்தவர்களுக்கான பயிற்சியைச் சரியான முறையில் தர, ஆசிரியர்களின் கண்களையே மறைத்துத் தற்காலிகமாய் பார்வை இழந்தவர்களாக்கிப் பயிற்சி தருகிறோம்.

இவர் ஏன் இப்படி?

படத்தில் இருக்கும் செல்வி ஜேனுக்குக் கண்கள் மிக நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் எதற்காகக் கண்களைக் கட்டிக் கொண்டு நடக்கிறார்?

கண் பார்வை இல்லாதவர்களுக்கான பள்ளிக்கூட ஆசிரியை மிஸ். ஜேன், பார்வையற்றவர்களுக்குச் சாலையில் நடப்பது எப்படி என்று சொல்லித் தருவதற்காகத்தான் தன் கண்களைக் கட்டிக் கொண்டு சாலையில் நடந்து பயிற்சி பெறுகிறார். நந்தனம் ஒய். எம். ஸி. ஏ. கல்லூரியில் இதற்கெனத் தனிப் பிரிவே உள்ளது. இதன் தலைவர் பார்வையற்றோர் மேம்பாட்டுக்காகப் பல ஆராய்ச்சிகள் செய்துள்ள ஜெ மித்ரா. இங்குள்ள பயிற்சி

"இதன்படி, ஒவ்வொரு தடவையும் எடுத்துக் கொள்ளப்படும் நூறு பேரை இரண்டிரண்டு பேர் கொண்ட ஐம்பது ஜோடிகளாகப் பிரித்து, ஒருவர் கண்களைக் கட்டி மறைத்துக் கொண்டு இருக்கும்போது, இன்னொருவர் அவருடைய 'சைட்டட் கைடு' ஆகவும் அதேபோல இவர் கண்களைக் கட்டிக் கொண்டு இருக்கும் போது, அவர் கைடாகவும் இருக்கும்படி செய்து, பயிற்சி தருகிறோம்.



* ஜெ. மித்ரா.

"ஓர் அறைக்குள் எங்கெங்கே, எது எது இருக்கிறது என்று கண்களை மூடிக் கொண்டவருக்குச் சொல்லித் தந்து விட்டு, அவர் நன்றாகப் பயிற்சி பெற்றதும், தானாகவே எவர் உதவியுமின்றி அந்த அறைக்குள் நடமாடுவது ஒரு வகைப் பயிற்சி.

"கையில் 'ஸ்டிக்'குடன் வெளியிடங்களில் நடப்பது இன்னொரு வகை. இதில் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு எங்கெங்கே ரோடு, வீடுகள், தபால் பெட்டி, விளக்குக் கம்பம்... இன்ன பிற Lund marks என்று ஒரு வார காலத்துக்குச் சொல்லித் தருவோம். இப்படித் தினமும் சுமார் இரண்டு மணி நேரப் பயிற்சி தருகிறோம்.

"பயிற்சி முடிந்ததும் பரீட்சை உண்டு. பரீட்சையின் போது அவரவர் பயிற்சி பெற்ற பகுதிக்கு கண்களைமூடி ஆட்டோவில் அழைத்துச் செல்லப்படுவார்கள். எங்காவது ஓர் இடத்தில் இறக்கி விட்டுவிட்டு, 'இப்போது நிற்பது இன்ன இடம், இங்கேயிருந்து இந்த இடத்துக்குப் போக வேண்டும்' என்போம். அவர்கள் போக வேண்டும். இதை இன்னொருவர் கூடவே கவனித்துக் கொண்டு போவார். அவர்கள் திறமையைக் கணக்கிட்டு மதிப்பெண்கள் வழங்கப்படும்!" என்றார் அவர்.

இந்தப் பயிற்சிக்கான செலவுகளையும், பயிற்சிக்கு வருபவரது உணவு, மற்றும் தங்கும் செலவுகளையும் ஒய். எம். ஸி. ஏ.வே ஏற்றுக் கொள்கிறது.

தமிழகத்தின் பிற மாநிலங்களிலிருந்து மட்டுமின்றி நேபாளம், சிங்கப்பூர், மலேஷியா, இந்தோனேஷியா என்று பல நாடுகளிலிருந்து கூட இங்கே பயிற்சிக்கு வருகிறார்களாம். காரணம், இந்தியாவில் வேறு எங்கும் இது போன்றதொரு பயிற்சி நிலையம் இல்லாததுதான்!

தகவல்: **எஸ். சந்திரமௌலி.**

போட்டோ: **யோகா**

தலையங்கத்தை பிரதமருக்கு அனுப்புங்கள்!

வட்டமேஜை



நெடுமாறன் சிறப்பிதழ்!

* நெடுமாறன் அளித்த பேட்டியைப் படித்த போது என் உடம்பெல்லாம் சிலிர்த்து விட்டது. காமராஜர் கண்டெடுத்த அந்த மாவீரரின் நெஞ்சுரத்தைப் படம் பிடித்துக் காட்டிய உம்மை எவ்வளவு பாராட்டினாலும் தகும். மாவீரன் நெடுமாறன் அவர்களின் சிறப்புப் பேட்டி, அவரைப் பற்றிய சிறப்புத் தலையங்கம், கருத்துப் படம், தாரின் பதில் ஆகியவற்றை ஒருங்கே வெளியிட்டு, 17.11.85 கல்கி இதழை மாவீரன் நெடுமாறன் சிறப்பிதழாக மலரச் செய்த நீர், தமிழர்தம் நெஞ்சமெலாம் நீக்கமற நிறைந்துவிட்டீர்.

சென்னை – 5. மன்றவாணன்.



* நெடுமாறனின் தன்னலமற்ற துணிச்சலான செயலைப் பாராட்டிப் பேட்டி கண்டதுடன் தலையங்கமும் தீட்டிய முதல் பத்திரிகை கல்கிதான்!

சென்னை – 44. பி. என். கோவிந்தராஜன்.

பிரதமருக்கு அனுப்புங்கள்

* "நெடுமாறனை அழைத்துப் பேசுங்கள்!" தலையங்கத்தின் ஒரு நகலைப் பிரதமருக்கு அனுப்பி வையுங்கள்.

கவுந்தப்பாடி. அன்புதாசன்.

ஒப்புக் கொண்டிருப்பார்களா?

* இலங்கையை நோக்கித் தோணியில் செல்ல முயன்ற நெடுமாறனைப் பார்த்து 'ஷோ' காட்டுகிறார் என்று சொன்னவர்கள் இப்பொழுதாவது அவர் உண்மையிலேயே "மாவீரன்", என்று ஒப்புக் கொண்டிருப்பார்களா?

சென்னை – 5. குமரி ஜெயம்.



அருமையான பாடம்!

* பழிவுக்கு மயங்காத தந்தையில்லை என்பதை மெய்ப்பிக்கும் விதமாய் அமைந்த சுபாவின் சிறுகதை குடியின் பிடியில் சிக்கித் தவிக்கிறவர்களுக்கு அருமையான பாடம்...

ஈரோடு. எம். ஷோபா கல்யாணி.

அசர வைத்தது அட்டைப் படம்!

* அப்பா! நீண்ட நாட்களுக்குப் பிறகு கல்கிக்கு மெருகூட்டும் அழகான அட்டை; அசர வைத்து விட்டது!

ஈரோடு – 1. ரேவதி பிரியன்.

எச்சரிக்கை டாக்டர்களுக்கும்தான்!

* 'டாக்டர்கள் ஜாக்கிரதை' கட்டுரை டாக்டர்களிடம் ஜாக்கிரதை என்று சொன்னதோடு, ஒரு சில இடங்களில் 'டாக்டர்களே, ஜாக்கிரதை!' என்று அவர்களை எச்சரிப்பது போலவும் இருந்தது. இந்திய மருத்துவத் துறை இந்தப் போக்கில் வளர்ச்சியடைந்தால் எதிர்காலம் ஒரு இருட்காலமாகத்தான் இருக்க முடியும்!

சென்னை – 14. ஜவாது. எஸ். வாசுதேவன்.

* 'டாக்டர்கள் ஜாக்கிரதை' கட்டுரை படித்தேன். இரண்டரை மாதமாக உடல்நலமில்லாதிருக்கும் நான், தினமும் (தனியார்) மருத்துவரிடம் சென்று வருவதால் – தங்கள் கட்டுரையின் நிஜங்களைக் கண்கூடாகக் காண்கிறேன். இதில் வேறொரு தலைவலி என்னவென்றால், – டாக்டர்கள் பிரிஸ்கிரைப் செய்யும் மாத்திரைகளை மருந்துக் கடைகளில் கொடுப்பதில்லை. 'சக்வல் பவர்' என்று கூறி, விலையுயர்ந்த மாத்திரைகளைத் தள்ளிவிடுகின்றனர். தாம் செய்வது ஒருவிதத்தில் 'பொதுஜன சேவை' என்பதையும் மறந்து – பணம் பறிப்பது ஒன்றேதான் குறிக்கோள் என்ற விதத்தில் இவர்கள் செயல்படுவது வருத்தத்தையே அளிக்கிறது.

குடியாத்தம் – 2. இரா. இ. பட்டாபிராமன்.



வித்தியாச 'மாணவர்'

* 'புத்தகம் வாங்க வேண்டும்' என்று பொய் சொல்லிப் பெற்றோரிடம் பணம் 'கறக்கும்' மாணவர்கள் நிறைந்த இந்நாளில், பழைய புத்தக வியாபாரம் செய்து படிக்கும் சி. ஜேகராஜன் நெஞ்சை நிறைய வைக்கும் வித்தியாச 'மாண'வர்.

சென்னை – 28. எம். தியாகராஜன்.

---

* 27.10.85 கல்கி இதழில் எம். ஜே. புகார்தீன் என்பவர் சவுதிக்காரர்கள், இந்தியர்களை 'மிஸ்கீன் கள்'' (பிச்சைக்காரர்கள், ஏழைகள்) என்று குறிப்பிடுவதாக எழுதி இருப்பது தவறு. சவுதிக்காரர்கள் இந்தியர்களை 'ரபீக்' அதாவது கருணையுடையவர் என்றுதான் அழைக்கிறார்கள். இது அகராதி அர்த்தம். ஆனால், அவர்கள் அழைக்கும் போது கூலிக்காரர்கள் அல்லது வெளித்தோழர்கள் என்ற அர்த்தத்தில்தான் அழைக்கிறார்கள்.

காயல்பட்டினம். அபுல்ஹசன்.



சின்ன வீடு

"ஆறுதெள கீர்த்தனாரம்பத்தில' என்று துவங்கக் கூடிய ஒரு கதை முடிச்சைப் பாக்ய ராஜ் தேர்ந்தெடுத்தது ஏமாற்ற ஆச்சரியம். அன்பான மனைவி இருக்கும்போது, அழகான — பணத்துக்கு ஆபத்தான இரண்டாமவளைத் தேடிப் போய்க் கடைசியில் மனம் தெளிந்து பெரியவீடே புண்ணிய வீடு, சின்ன வீட்டை நம்பாதே என்று வணக்கம் சொல்லும் கதை தமிழுக்கும் புதிதில்லை; நமக்கும் புதிதில்லை. சரி, சொல்லும் விதத்தில் பாக்யராஜ் ஏதாவது ஸ்பெஷலாய்ச் சேர்த்திருப்பாரே என்று தேடினால் ஜரிகைக் கோடளவு அங்கங்கே... அவ்வளவுதான்.

கல்யாணப் பட்டு டிரெஸ்ஸோடு ஆர்மிக்கு ஆளெடுக்கும் இடத்தில் பாக்யராஜ் நிற்கும் கட்டம் கலகல. கல்யாணமான கையோடு மனிதர் வெகு ஸீரியஸாகி விடுகிறார். எப்போதடா சிரிக்கலாம் என்று ரசி

ஜெக ஜோஸியர் ஜெயமன்மதனின் தீபாவளி ராசிபலன்கள் — 3

"மூதலில் இங்கிலீஷ் துரை ராஜேஷின் கதை. சமயபுரத்தாளை நம்பாமல் அவளைச் சோதனை செய்யப் புறப்படுவதும், அதைப் பயில்வான் ரங்கநாதன் (சான்ஸ் கிடைத்தால் இந்தப் பயில்வான் இன்னும் நிறையப் பேரை தூக்குவார்) தடுப்பதும், அப்புறம் ராஜேஷின் கண் பறி போவதும், சமயபுரத்தாளின் அருளால் மறுபடி கண் வருவதுமாக அது ஒரு ட்ராக். அப்புறம் திடீரென்று சமூக ட்ராக்கில் ஓவியர் செந்தாமரை. அவர் மகள் நளினி. அவர் மனைவி மணிமாலா. இந்த நளினி சாட்சாத் சமயபுரத்தாளே என்று ஒரு திடீர்த் திருப்பத்துடன் இன்னொரு கதை. இடையில் ஜட்ஜ் மனைவி விஜயா, டாக்டர் கணவன் ஜெய்சங்கர். இவர்களுக்கு இடையில் ஒரு மோதல் கதை. அப்புறம் ஒருபக்கம் இளவரசி, ராஜீவ் சேவல் சண்டை, மாரியம்மா என்று ஒரு கதை. எல்லாக் கிளைக் கதைகளிலும் சமயபுரத்தாள் ஊடுருவி இருக்கிறாள்.

கூடியவரை குழப்பாமல் திரைக்கதையைச் சொல்லிக் கொண்டு போகிறார்கள்.

சாமி இல்லாவிட்டால் திகில் நாயகி என்று நளினி முத்திரை குத்தப்பட்டு விட்டார். விஜயாவை ரொம்ப நாள் கழித்துப் பார்க்கிறோமா, ஒரு சுற்று இளைத்துவிட்ட மாதிரி இருக்கிறார். மற்றபடி ஜெய், ராஜீவ், ஓவியர் செந்தாமரை எல்லாம் ஓ.கே. சாமி படங்களுக்கு என்றே ஒரு தனி ரக இசையமைப்பு இருக்கிறது. ஓஹோவும் சொல்ல முடியாமல் ஊஹூமும் சொல்ல முடியாமல். இதிலும் அப்படியே!

ராசிபலன்:

பக்தி, சுவாமி, அம்மன் என்று ஆன்மீக ரீதியாகச் சொல்லப்பட்டாலுங்கூட கதையையும் நம்பிச் செயல்பட்டிருப்பதால் இந்த



பிரேம பாசம்

ஒரே ஒரு ஊரில் ஓர் ஆண் டாக்டர். அதே ஊரில் ஒரு லேடி டாக்டர். ஆண் டாக்டருக்கு லேடி டாக்டர் மேல் காதல். ஆனால் லேடி டாக்டர் கைப்பிடிப்பதோ ஒரு இன்ஜினீயரை. ஆண் டாக்டர் அந்தச் சோகத்திலேயே மனமுடைந்து, இருமி, ரத்த வாந்தி எடுத்து, கடைசியில் உயிரைத் தியாகம் பண்ணி விடுகிறார். இதுதான் கதை.

என்ன மிஸ்ஸிங்?

ஒரு சிக்கல்கூட இல்லாத கதை. கல்யாணம் பண்ணிக் கொண்ட லேடி டாக்டர் கணவனின் சந்தேகப் பார்வையில் மாட்டித் தவிக்கிறார். அவ்வளவுதான். இதெல்லாம் சிக்கலா என்ன?

எடுத்த எடுப்பிலேயே கழுத்தில் ஸ்டெதஸ்கோப், வெள்ளை கோட் சகிதம் காட்சி அளிக்கும்போதே இவரும் டாக்டர், அவரும் டாக்டர்தான் என்று தெரிந்து போகிறதே — அப்புறம் பேச்சுக்குப் பேச்சு 'டாக்டர் ராதா,' 'டாக்டர் ராதா' 'டாக்டர் ராஜி' — எதற்காம்? எரிச்சலைக் கிளப்பவா?

கர்கள் காத்துக்கிடக்கிறார்கள். முதல் மனைவியாய் வரும் கல்பனா — அழுத்தம், ஆத்திரம், அழுகை, ஆவேசம் — எல்லாவற்றிலும் சக்கை போடு போடுகிறார். குட்டி வீடாய் வரும், அனு தேவையான விகிதங்களில் கவர்ச்சி காட்டுகிறார்.

வாழைத்தாரிலிருந்து, உசத்தியான ஸ்கூட்டர் வரை வாரி வழங்கி, மாப்பிள்ளையின் மனத்தில் இடம் பிடிக்க முயலும் பாத்திரம் ஜெய்கணேஷுக்கு. இயல்பாகச் செய்திருக்கிறார்.

கர்ப்பம் என்று தெரிந்தவுடன் கோயிலுக்குப் போகலாம் என்று கல்பனா புருஷனை அழைத்துச் செல்ல, கோயிலில் நுழையும் நேரம், தான் மாலையில் செய்த லீலை நினைவு வந்து பாக்யராஜ் தயங்கித் தடுமாறிவிட்டுக் கோயில் கிணற்றிலேயே நீரை மொண்டுத் தலையில் ஊற்றிக் கொண்டு நடுங்கும் உடம்புடன் அர்ச்சனைக்கு நிற்கும் காட்சி நெகிழ்வு.

கதை நெடுக முதல் மனைவியின் உணர்ச்சிகளுக்கும் அவ்வப்போது முக்கியத்துவம் கொடுக்கும் பாத்திரமாக அமைத்துக் கொண்டது பாக்யராஜின் சாமர்த்தியம். இந்த மாதிரி திரையைக் காட்சிகள் 'தாய்மார்களுக்காக' என்று முத்திரையிடப்பட்டவை.

கனவுப் பாடல் காட்சி — காமிராவின் பிரத்தியேக வித்தை. பாராட்டுக்கள், விஜயலட்சுமிக்கு.

ராசிபலன் :

இந்த ராசி நேயர்களை ஏற்கெனவே பிடித்த ஏழரை நாட்டான் இன்னும் விடவில்லையோ என்று எண்ணத் தோன்றும். நகைச்சுவையா, தாய்க்குலமா என்று குழப்பத்திலிருக்கும் ராசி அதிபதி சொல்லாலும், செயலாலும் நல்லதையே செய்ய நினைத்தாலும், எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் தருவதால் நேயர்களிடத்தில் ஒரு குழப்பமான அதிருப்தி நிலவும். அடுத்த தீபாவளிக்குள் முன்னேற்றம் இருக்கும் என்று நம்பலாம்.

ராசி நேயர்களுக்கு அவ்வளவாய் ஏமாற்றம் இராது. முக்கியமாகச் சக்தி உபாசனை செய்திருப்பதால், சக்தி அம்சமாய் விளங்குகிற தமிழ்நாட்டுப் பெண்களின் கடைக்கண் அருட்பார்வை இந்த ராசி நேயர்களுக்குக் கிட்டும். ஆனாலும் முக்கிய நட்சத்திரங்களின் (ரஜினி, கமல், சிவாஜி) பார்வை வேறு பக்கம் இருப்பதாலும், மசாலா சனீஸ்வரர், இசைப்பிரியரான நந்திகேஸ்வரர் ஆகியோர் பார்வை சரிவர இல்லாததாலும் இந்த ராசி நேயர்கள் ஓஹோ என்று எதிர்பார்த்தல் கூடாது.

சமயபுரத்தாளே சாட்சி



சிவகுமார் நல்ல பாத்திரமாய் அகப்படாததால் தடுமாறிப் போகிறார். கொஞ்சம் சோகம், கொஞ்சம் வழிசல் என்று ஒப்பேற்றி இருக்கிறார். நர்ஸிங் ஹோமில் ரேவதி வந்தால் எப்படிப் பேசுவது என்று ஒத்திகை பார்க்கிற இடம் புன்முறுவலை வரவழைக்கிறது.

ஜனகராஜும், செந்திலும் சினிமாவிற்குப் புதுமுகம் தேடி, ஒரு காலேஜ் பெண்ணை நெருங்கி, 'சினிமாவில் நடிக்கச் சம்மதமா?' என்று கேட்க, அவர் வீட்டுக்கு வந்து அப்பாவைப் பார்க்குமாறு சொல்ல, இருவருமாய்ப் போய் மிலிட்டரி வி. கே. ராமசாமியைப் பார்த்துப் 'பேசி' வாங்கிக் கட்டிக் கொள்கிற இடம் இருக்கிறதே — கதையோடு ஒட்டாவிட்டாலும் வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பதில் குறையே வைக்கவில்லை. படத்தின் பாலைவனச் சோலை.

ரேவதி, நிழல்கள் ரவி, தீபா என்று மின்னுத நட்சத்திரங்கள்.

'கங்கை அமரன் இசை காதில் ரீங்காரமிடுகிறது' என்று ஒரு முறையாவது அவர் சொல்ல வைக்க வேண்டும். இந்த முறை — ஸாரி!

ராசிபலன் :

வெறும் காதல் ராசியை மட்டுமே நம்பி எடுக்கப்பட்ட படம். வலுவான கதை, சிக்கல், ஆகிய கிரகங்களின் பார்வை மிகவும் பலவீனமாக இருப்பதால் இந்த ராசி நேயர்களுக்குப் பொதுவாக ஏமாற்றத்தைத் தரும் படம். தீபாவளி நேரத்தில் வேறு சில 'நல்ல படகண்டங்கள்' இந்தப் படத்திற்கு இருப்பதால், இந்த ராசிக்காரர் வி. கே. ஆர்., ஜனகராஜ், செந்தில் ஆகிய நட்சத்திர சேர்க்கைகளின் பலத்தை மட்டுமே நம்ப வேண்டியிருக்கிறது. ஆயினும் அந்த நட்சத்திரச் சேர்க்கை மிகச் சொற்ப நேரமே நிகழ்வதால், அடுத்து ஒரு நல்ல படம் எடுத்துச் சாந்தி செய்ய வேண்டும்.



* வெற்றி.

ரஜனீஷ்

இந்தியா திரும்பி விட்டாரே?



* வித்தியாசமானவர்.



* தலைகுனிவு.

* எம். ஷர்புதீன், தோப்புத்துறை.

? மெக்கென்ரோ தொடர்ச்சியாகத் தோல்வியைத் தழுவி வருகிறாரே?

! வளர் பிறையும் பௌர்ணமியும், தேய் பிறையும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் உண்டு.

* ஆர். எச். கோபி, குடியாத்தம்.

? தி. க. தலைவர் வீரமணி தம் பெயருக்கு முன்னால் மானமிகு என்று சேர்த்துக் கொள்கிறாரே, ஏன்?

! சுயமரியாதை என்ற தன்மான இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக. இதனால் மானமிகு என்று போட்டுக் கொள்ளாதவர்கள் எல்லாம் மானம் கெட்டவர்களாகி விடமாட்டார்கள். ஒரு சௌகரியம்—'மாண்புமிகு' அமைச்சர் பதவி நீடிக்கும் வரைதான்; மானமிகு எப்போதும் போட்டுக் கொள்ளலாம்!

* எஸ். பி. ஸ்ரீதர், கும்பகோணம்.

? சிந்துபைரவியில் ஜொலிப்பது சிந்துவா? பைரவியா?

! ஜொலிப்பதென்னவோ சிந்துதான். ஆனால் அவரை ஜொலிக்கச் செய்வதென்னவோ பைரவிதான். சிந்து வைரம் என்றால் பைரவி அதை எடுத்துக் காட்டும் அழகிய மோதிரத்தின் தங்க அம்சம்.

* எம். இராசன், கிருஷ்ணகிரி.

? மனிதனிடமிருந்து மனிதாபிமானம் எப்போது விடைபெறுகிறது?

! மூன்று நாட்களாகப் புயல், அடை மழை. சென்னை நகரம் நரகமாகிக் கொண்டிருக்கும் வேளை. அத்தியாவசியமானப் பண்டங்கள் கூட ரேஷன் கடைகளில் ஸ்டாக் இல்லை. கொஞ்சம் ஸ்டாக் வந்தவுடன் மக்கள் மழையையும் பொருட்படுத்தாமல் கியூ நிற்கின்றனர். அப்போது வேலை நேரம் முடியுமுன்னரே, காத்திருக்கும் மக்களின் கெஞ்சலையும் மீறி, சாபத்தையும் லட்சியம் செய்யாமல் கவுண்டரைப் பூட்டிவிட்டு எழுந்திருக்கிறார் நுங்கம்பாக்கம் டி. யூ. ஸி. எஸ். கவுண்டர் குமாஸ்தா. அப்போது மனிதாபிமானம் புயல் காற்றில் பறந்து போய் விட்டதாகவே தோன்றியது. 'என்னை ஒன்னும் செய்ய முடியாது. எங்க வேணும்னாலும் போய்ச் சொல்லுங்க' என்ற குமாஸ்தாவின் அலட்சிய வார்த்தைகள் பறந்து சென்ற மனிதாபிமானத்தைத் தொடர்ந்து சென்று குத்திக் கொன்றது போலிருந்தது.

* மு. ஜானகிராமன், மயிலாடுதுறை.

? வெள்ளப் பகுதிகளை நீச்சலடித்துப் பார்வையிட்ட பட்டுக்கோட்டை எம்.எல்.ஏ.வின் செயலைப் பற்றி...?

! தேர்தலின்போதே இவரது திறமையையும் தன்னம்பிக்கையையும் பார்த்தவர்கள் தானே நாம்! எஸ். டி. எஸ். என்ற பட்டுக்கோட்டை ஆலமரத்தை எம். ஜி. ஆர். என்ற கோடரி கொண்டு அடியோடு (டெபாஸிட் அம்போ) சாய்த்த பி. என். ராமச்சந்திரன் ஆளும் கட்சி எம். எல். ஏக்களுள் வித்தியாசமான ஒருவர்.

* ஆர். அப்துல் சலாம், திருச்சி.

? நாலெழுத்துச் சமாச்சாரமில்லாமல் எங்கேயும் வேலை நடக்க மாட்டேன் என்கிறதே?

! மூன்றெழுத்து அரசியல்தான் காரணம். அந்த மூன்றெழுத்து அரசியலுக்குக் காரணம் இரு நான்கெழுத்துக் கொள்கைகள்.

* கலியாணவரன், மேட்டுப்பாளையம்.*

? இப்போதெல்லாம் எதிர்க்கட்சி முதலமைச்சர்களிடமிருந்து சத்தத்தையே காணோமே?

! தேசிய அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் ராஜீவ் – ஜோதி பாசு மோதல் பற்றிப் படிக்கவில்லையா நீர்? இதில் படுதோல்வி ராஜீவுக்கே என்பது 'ரெபரி' தராசுவின் தீர்ப்பு! மத்திய அரசு இன்று கடைப்பிடிக்கும் கொள்கைகளும், உத்திகளும் பழைய பாணியில் இல்லாமல் பெருமளவு மாறுபட்டு உள்ளன என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இதனால் கவலை கொண்டு பேசினார் ஜோதி பாசு. புதிய கொள்கைகள் நாட்டை முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதாக உள்ளன என்றார். கம்யூனிஸ்டாகிய அவர் அப்படிப் பேசியதில் வியப்பே இல்லை. ராஜீவ் என்ன செய்திருக்க வேண்டும்? புதிய கொள்கைகள் நாட்டுக்கு எவ்விதத்தில் நன்மை செய்யும் என்று விளக்கியிருக்க வேண்டும். அப்படியும் பாசுவுக்கு நம்பிக்கை ஏற்பட்டிராதுதான். எனவே, உங்கள் ஆட்சேபணைகளைப் பதிவு செய்கிறோம்; ஆனால் ஏற்பதற்கில்லை. பெரும்பான்மையினர் முடிவுப்படி அபிவிருத்தித் திட்டங்கள் நடக்கும் என்று ராஜீவ் கூறியிருக்க வேண்டும். இப்படி நடந்து கொள்ளாமல் ராஜீவ் கோபமுற்று வாதாடியிருக்கிறார்.



* தேவையற்ற சர்ச்சை.

வேறுபாடான கருத்தைச் சொல்ல உரிமை கிடையாது என்று சில இ. காங்கிரஸ் முதலமைச்சர்கள் கூறியிருக்கிறார்கள். தொடர்ந்து மல்லுக்கு நின்ற ராஜீவ், ஏழாவது திட்ட நகலுக்கு ஒருமனதான ஒப்புதல் அளிக்க மேற்கு வங்க அரசு ஒப்புக்கொள்ள வேண்டும் அல்லது திட்டம் தங்களுக்குத் தேவையில்லை என்று அறிவித்துவிட வேண்டும் என்று நிர்ப்பந்தித்திருக்கிறார். இது ராஜீவுக்கு – பிரதமருக்கு – அழகல்ல. பாசு சொன்னதுபோல் மேற்கு வங்க மக்கள் திட்டத்துக்கு வெளியிலோ, நாட்டுக்கு வெளியிலோ இருக்க முடியாது. அம்மக்களும் வரி செலுத்துகிறவர்களே.. பாசுவிடம் ராஜீவ் பேசிய விதம், நடந்து கொண்ட முறை எதுவுமே சரியல்ல; ஜனநாயகப் பண்பும் அல்ல.

நீங்கள் கேட்டவை — தராசு



* ஜொலிப்பது...



* ...யார்?

* **சிவராமகிருஷ்ணன், புதுதில்லி.**

? போப் விஜயம் பற்றிச் சர்ச்சை கிளம்பியிருக்கிறதே?

! தேவையற்ற, அர்த்தமற்ற சர்ச்சை. போப் ஆண்டவர் மதத்தலைவர் மட்டுமல்ல: வாடிகன் என்ற நாட்டின் தலைவரும் கூட. அவரை அதற்குரிய மரியாதையுடன் இந்திய அரசு வரவேற்றே ஆக வேண்டும். மதச்சார்பின்மை என்ற அரசின் கொள்கை மதங்களை, மதக் கொள்கைகளைப் புறக்கணிப்பதல்ல; எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் அனைத்து மதங்களுக்கும் சம மரியாதை அளிப்பதாகும். சென்னைக்கு விஜயம் செய்த காஞ்சி சங்கராச்சாரியாரை நமது அமைச்சர்கள் நகருக்கு வெளியே போய் எதிர்கொண்டழைக்கவில்லையா என்ன?

* **சகுந்தலா, நாக்பூர்.**

? ரஜனீஷ் இந்தியா திரும்பிவிட்டாரே?

! அவரால் அவருக்கும் பெருமையில்லை. இந்தியாவுக்கும்பெருமையில்லை. அமெரிக்காவுக்கும் பெருமையில்லை. எல்லோருக்கும் தலைகுனிவே. அவருடைய கட்டுப்பாடற்ற 'காமம்' கொள்கை நாகரிக முன்னேற்றம் அடைந்த மனிதனை மீண்டும் கற்காலத்துக்குப் பின்நோக்கி அழைத்துச் செல்வதாகும். கட்டுப்பாடற்ற காமம் கட்டுப்பாடற்ற இதர மனோவிகாரங்களுக்கும் கொலை முயற்சிகளுக்கும் கூட அவரைச் சேர்ந்த சிலரை இட்டுச் சென்றதில் வியப்பில்லை. மதம் வியாபாரமாக்கப்படும்போதும், குவிகின்ற அபரிமித செல்வம் சமுதாய நலனுக்கு உதவாமல் சுயநலனுக்குப் பயனாகும்போதும் ஏற்படுகிற விபரீதங்களை ரஜனீஷ் வாழ்க்கை சுட்டிக் காட்டி மற்றவர்களை எச்சரிக்கிறது.

* **ரூ. 10 பரிசு பெறுபவர்:**
கலியாணவரன்,
3/225, சௌடம்மன் கோயில் தெரு,
பங்களா மேடு,
மேட்டுப்பாளையம்—641 301.



சங்கம் தந்த தங்கம்

இரண்டு மணிநேர இடைவெளியில் வெளிநாடு செல்லும் தமிழக அமைச்சரை ஏர்போர்ட்டிலும், சென்னையிலிருந்து பம்பாய் வரும் ஒரு தமிழ் ஆசிரியரை தாதர் ரயில் நிலையத்திலும் பிரிவுபசாரம் சொல்லி, வரவேற்ற ஒரே மனிதரைத் தெரியுமா? அவர் பெயர் கந்தசுவாமி. பம்பாயில் வாழும் பெரும்பாலான தமிழர்களுக்கு அவரைத் தெரியும். அவருக்கும் அதேபோல் மிகுதியான தமிழ் மக்களை நன்கு தெரியும். தமிழ்ச் சங்கத்தின் மறுபெயர் எஸ். கந்தசுவாமி. இல்லை! தங்கசாமி!

அன்று பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த தீர்க்கதரிசிகளில் அவரும் ஒருவர். அன்று முதல் இன்றுவரை சங்கம் வேறு, தான் வேறு என்றில்லாமல் அதனுடன் இணைந்து செயலாற்றி அந்த அகல் விளக்கை நந்தா விளக்காக, பெரும் ஜோதியாகக் கட்டிக் காத்து வளர்த்த ஒரே பெருந்தகையும் அவரேதான். அவர் பாசத்துடன், நேசத்துடன் வளர்த்த ஒரே அமைப்பு தமிழ்ச் சங்கமேதான்! ''இப்பிறவிக்கு இருமாதரை சிந்தையாலும் தொடேன்'' என்ற காகுத்தனைப் போல ''இந்த இப்பிறவிக்கு இனியொரு அமைப்பை, சபாவை, சிந்தையாலும் தொடேன்'' என்று வாழ்ந்து காட்டியவர். தம் வாழ்நாள் முழுதும் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்த சங்கத்தின் பீஷ்ம பிதாமகர். ஆரம்ப காலத்தில் ரஸிகமணியும் கல்கியும் வந்த போது அவர் உள்ளத்திலே துள்ளிய உற்சாகம் நேற்று நடைபெற்ற சிவசங்கரியின் விழாவின் போதும் குன்றவில்லை.

ஆர். வேங்கடராமன் பம்பாயைத் தாண்டிச் சென்றால் இவருக்குத் தெரியாமல் போக மாட்டார். கந்தசுவாமியும் தனிப்பட்ட முறையில் அவர்தம் நண்பர் என்பதைக் கொஞ்சங் கூடக் காட்டிக் கொள்ள மாட்டார்.

சிவாஜிகணேசன் வீட்டிற்கு ஆண்டு தோறும் ரத்னகிரி ஆபூஸ் மாம்பழக் கூடை தவறாது அனுப்புவார். எம். ஜி. ஆர். ஒரே ஒரு முறை பம்பாய் வந்து சங்கத்திற்கு நாடகம் நடத்தியபோது அவர் சங்கத்தினர்களுக்கு அளித்த விருந்தையும், அவரே தம் கையால் சங்கத் தொண்டர்களுக்குப் பால் பாயசம் பரிமாறிய பாசத்தையும் பரிவுடன் நினைவு கூருவார்.

சங்கத்திலே நடத்திய நாடக விழாக்களிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள். ஆனால், பந்தலுக்குள்ளேயோ, ஹாலுக்குள்ளேயோ சென்று நாடகம் பார்க்காத ஒரே ஒரு நபர் கந்தசுவாமி தான்! டி. கே. எஸ். சகோதரர்கள், எஸ். வி. சகஸ்ரநாமம் எல்லோரும் கேட்பார்கள்! ''நீங்கள் ஒருநாள் ஒரு நாடகம் முழுசாகப் பார்க்க மாட்டீர்களா?'' ஊஹூம்! இடமில்லாமல் ஒரு ரசிகர் தவித்தாலும் இவர் உட்கார மாட்டார்.

கந்தசுவாமியிடம் போனால், ''காரியம் ஜயமா?'' என்ற கேள்விக்கே இடமில்லை. அது பள்ளி, கல்லூரி அட்மிஷனாக இருக்கலாம். வேலை விஷயமாக இருக்கலாம். வீடு தேவை என்றிருக்கலாம், பாஸ்போர்ட் அல்லது வெளிநாட்டிலே யாராவது நம்மைச் சந்தித்து உதவி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளாக இருக்கலாம். 'இல்லை என்பது எமக்கில்லை' என்று உதவி செய்வார். யாருக்காவது கடிதம் எழுதித் தபாலில் அனுப்பினால் கடிதத்தின் ஒரு நகலும் மறுநாள் தபாலிலே போகும்! எதுவும் தவறிவிடக் கூடாது என்ற கவலை அவருக்கு!

அவர் என்றோ சங்கத்தின் தலைவராகியிருக்கலாம். ஆனால் அவர் தொண்டர்களைத் தலைவராக்கினார். மேடையேறி மாலை போட்டுக் கொள்ளாத ஆனால் அதற்கு முற்றிலும் தகுதி உடைய ஒரே மனிதர்.

வேலை செய்யும் தொண்டர்கள், நள்ளிரவில் போஸ்டர்கள் ஒட்டிக் கொண்டிருந்தாலும், அதிகாலையில் போர்ட் எழுதிக் கொண்டிருந்தாலும் அங்கே அன்னமிடும் கந்தசுவாமியின் கை சாப்பாட்டுப் பொட்டலங்களுடன், கனிவுடன் காத்துக் கொண்டிருக்கும், தொண்டருக்குத் தொண்டராய் விளங்கியவர்.

ஆங்கில இலக்கியங்களை ஆழ்ந்து படித்தவர். தமிழ் இலக்கியம் நன்றாக அறிந்தவர். எதையும் சிந்தித்துத் தரமானவற்றைத் தகுதியுடன் மானசீகமாக ஏற்றுக் கொள்வார். நல்லனவற்றை மனம் திறந்து ஊக்குவித்து வெளிப்படையாகப் பாராட்டுவார்.

அவருக்குச் சொந்தமான மற்றொரு ஒப்பில்லா குணம், குறையும் குணமும் சேர்ந்தவன்தான் மனிதன் என்பதை உணர்ந்தது தான். கந்தசுவாமியின் நாவிலிருந்து எந்த ஒரு மனிதனைப் பற்றியும் எந்த நேரத்திலும் குறையோ, குற்றமோ கேட்டவரில்லை. நிறைவுகளை மட்டுமே கண்டு போற்றினார். இப்படி இன்னொரு மனிதரை எனக்கு அடையாளம் காட்டுங்கள், ஐயா!

இப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதரான கந்தசுவாமியின் சகாப்தம் கடந்த நவம்பர் இரண்டாம் தேதி பம்பாயில் முடிந்தது. ஆனால் அவர் நினைவுகள் மட்டுமின்றி விளைவுகளும், பயன்களும் என்றும் வாழும்.

— ஆதி லட்சுமணன்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of
Messrs Bharathan Publications Frivate Ltd. at the Bharathan Press, Race Course Road,
Guindy, Madras-60C032- (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran



• **அதிக பளபளப்பு**—பெஸ்டோவின் விசேஷ பார்முலா துணிகளுக்குத் தருகிறது அதிக பளபளப்பு, அதிக வெண்மை.

• **அதிக மென்மை**—கடுமையான வாஷிங் பவுடர்களைப் போல் பெஸ்டோ துணிகளுக்குக் கெடுதல் செய்வதில்லை. மேலும் உங்கள் கைகளை மென்மையாக வைக்கிறது.

• **அதிக வெண்மை**—துவைக்கத் துவைக்க துணிகள் பழுப்படைவதில்லை. ஆகவே வெளுக்க வெளுக்க வெண்மை நீடித்து நிலைக்கும்.

பெஸ்டோ—ஒரு கிலோவுக்கு
ரூ. 7. 65 மட்டுமே!

* உள்ளூர் வரிகள் தனி



கோத்ரெஜ் பெஸ்டோ
ப்ளூ டிடர்ஜெண்ட் பவுடர்

உயர் தரத்திற்கும் சிக்கனத்திற்கும்

CHAITRA-B-G-276 TAM N

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Srilanka

